


# மகுடபங்கம்

ஏழுமலைப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகுட பங்கம்

ஏழுமலைப்பிள்ளை

கலாச்சார பேரவை

கரைச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகுட பங்கம்

மகுடபங்கம் : நாடகப்பிரதி / ஏழுமலைப்பிள்ளை / © ஆசிரியருக்கு / முதல் பதிப்பு : மார்ச் 2014 / வெளியீடு :கலாசார பேரவை, கரைச்சி / வெளியீட்டெண்: 02 / நூல் வடிவமைப்பு : தானா விஷ்ணு / அட்டை ஓவியம் :எரிக் லைகொம்பே/ அச்சுப் பதிப்பு : ஆகாயம் பதிப்பகம், இமையாணன், உடுப்பிட்டி, யாழ்ப்பாணம்.

விலை: 200/=

ISBN: 978-955-41133-0-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படைத்தது**

இளம் பராயத்தில் தந்தையை இழந்த எம்மேல் உயர்ந்த அன்பைப் பொழிந்து சிறந்த தமிழ்ப் பற்றும், சால்பும் பெற வளர்த்த எமதருமைத் தாயார் அமரர் வல்லிபுரம் சின்னம்மாவிற்கும், செத்தும் கொடுத்த சீதக்காசி போன்று, இறந்தாலும் கல்வி, கலை, கலாசாரம், செல்வம், புகழ் ஆகிய ஐஸ்வரியங்களையும் எமக்காக தந்து சென்ற எமதன்புத் தந்தை அமரர் சின்னார் வல்லிபுரத்திற்கும்... செந்தமிழும், இயல், இசை, நாடகமும் சேர்த்தெனக்குப் போதித்த பாசமிகு அண்ணனும் கலைக்காவிய நாயகன் விருது வென்றவருமாகிய அமரர் வல்லிபுரம் குணலிங்கம் ஆகிய மூன்று தெய்வங்களிற்கும் இந்நூல் சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

நாடகம் என்பது மனிதர்களது வாழ்வியல் அம்சங்களினை பேசுகின்ற கலை வடிவம் ஆகும்.

நாடகங்களது தோற்றம் முதல் இன்றைய காலம் வரையிலான போக்கிலே அதன் வளர்முறையில் பல்வேறு பரிமாணங்களைப் பெற்றுவந்துள்ளதுடன் தனக்கென தனித்துவமான வகையில் செயல் நிலையங்களைக் கொண்டுள்ளன என்பது எதார்த்தமானதாகும்.

நாடக வரலாறு என்பது நீண்டதும், செழுமை மிக்கதாகவும் காணப்படுகின்றது. இவ்வரலாற்றிலே பெரும்பாலும் அதிகார வர்க்கத்தின் வரலாறுகளாகவும், மேல் நிலை உடையவர்களது வரலாறுகளும், ஒருசில தனி மனிதர்களது வரலாறுகளும் சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாகவும் மேலோங்கிச் செல்வதுடன் ஊருக்குள் உறவுகள் கூடி உயிர்ப்புடன் கூடிய நாடக செயற்பாடுகளினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்ட கலைஞர்களது வாழ்வு கண்ணீர்களுடன் முடிந்து விடுவதுடன் அவர்கள் வாழ்ந்த சுவடுகள் அடுத்த தலைமுறையி னருக்குத் தெரியாமல் போய்விடுகின்ற அவலங்கள் காலம் தோறும் அரங்கேறுவது வரலாற்றின் வலு என்பதினைதாண்டி ஆய்வாளர்களது தவறு என்பது எதார்த்தமாகும்.

ஈழத்து அரங்கு வரலாறு என்பது எப்போதும் ஒருபக்க வரலாறாகவும், கல்விக்காகப் போதிக்கப்படுவது சார்பு வரலாறாகக் காணப்படு வதாக பலரும் கருத்துப் பகிரும் தளத்தில் வரலாற்றுக்குள் இடம்பிடித்தவர்கள் பேசப்படுவதும் அடிப்படையாகக் காணப்படுகின்றன.
மாறாக, பல்வேறு சாதனைகளைப் படைத்துவிட்டு, பல்வேறு கௌரவங்களினையும், பாராட்டுக்களினையும் பெற்றுவிட்டு சூழ்நிலையும், வறுமையும் காரணமாக "மௌனமே வாழ்வாக" எனும் அடிப்படையில் வாழ்ந்து கொண்டிருக்கும் கலைஞர்களினை வெளிக்கொண்டு வருவது காலத்தில் தேவை என்பதினைத் தாண்டி அவர்களது கௌரவம் வாழும் காலத்திலேயே அளிக்கப்பட வேண்டும் எனும் கருத்துநிலை வலுப்படுத்தப்படவேண்டும். இவ்வாறு வாழும் காலத்தில் அவர்களுக்கான அங்கீகாரம் அளிக் கப்படவே கலைஞர்களுக்கு சமூகம் செய்யும் நன்றிக் கடனாகக் காணப்படும்.

இவ்வடிப்படையில் பல்வேறு பாதிப்புக்களின் பின்பும் வாழ்வியல் ஓட்டத்தில் மறைந்துபோயுள்ள பல்துறை கலைஞன் வல்லிபுரம் ஏழுமலைப்பிள்ளை அவர்களினால் எழுதப்பட்ட நாடகங்களின் தொகுதியானது கரைச்சிப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை யினரால் வெளிக்கொண்டு வருவது மகிழ்விற்குரிய விடயமாகும். இத்தொகுதியில் ஆறு நாடகங்கள் காணப்படுகின்றன.

முருகனின் முதற்போர், நடுகல் பேசும், சங்கிலியன், யூலியசூஷீசர், மகுடபங்கம் வாய்மை காத்த மன்னன் ஆகிய நாடகங்கள் இத் தொகுதியில் உள்ளடக்கப்படுகின்றன.

புராணக் கதைகள், வரலாற்றுக் கதைகள் என்பனவற்றினை நாடகமாக யார்த்துள்ளார். வரலாற்றுக் கதைகளினூடே அக் கதா நாயகர்களது துயரத்தினை வெளிப்படுத்துவதாக இப்படைப்புக்கள் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனம் பேசி நடிக்கின்ற (சொல்லாடல் அரங்கு/உரையாடல் அரங்கு) நாடகப்போக்குகள் இன்று சமூகத்திலே குறைவாகக் காணப்படுவதினை அவதானிக்கலாம். இப்போக்கு ஈழத்தினைப் பொறுத்த வரையில் காத்திரமான சொல்வாக்கு உடைய வடிவமாக ஒரு காலகட்டத்தில் விளங்கின.

ஈழத்து நவீன நாடகத்தின் தந்தை எனப் போற்றப்படுகின்ற கலையரசு சொர்ணலிங்கத்தினால் செழுமையானதாக நிகழ்த்தப் பட்டமையைக் காணலாம். இதன் அடிப்படையில் இவரது நாடகங்களும் கலைத்துவ செழுமையோடு படைக்கப்பட்டுள்ளது. மொழி நடையானது கனதியாக காணப்படுகின்றன. இவ்வடிப் படையில் காத்திரமான படைப்பொன்றினை வெளிக்கொண்டு வரும் கரைச்சிப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் கு. ரஜீவன், கிளிநொச்சி மாவட்ட கலாசார உத்தியோத்தர், கரைச்சிப் பிரதேச செயலர் போன்றோர்கள் சாதித்தும் சமூகத்திற்கு வெளித் தெரியாமல் இருக்கும் கலைஞர்களது கலையுலகப் பணிகளினை சமூகத்திற்கு கொண்டு வரவேண்டியது காலத்தின் தேவையாகும்.

**எஸ்.ரி. அருள்குமரன்,**
BA.(Hos) MA (Merit)
*ஆசிரியர்,*
*மானிப்பாய் இந்துக் கல்லூரி,*
*(தேசிய பாடசாலை)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் கதை

யாழ்ப்பாணம் மயிலிட்டியைச் சேர்ந்த வல்லிபுரம் சின்னம்மா தம்பதிகளின் நான்காவது மகனாக 05-11-1953இல் பிறந்தேன். எனது குடும்பம் கல்வி, கலை, கலாசார விழுமியங்களில் சிறந்து விளங்கி யதால் நானும் அத்துறையில் தடம் பதிக்க வழிசமைத்தது.

எனது தந்தை காலம் சென்ற சின்னார் வல்லிபுரம் அவர்கள் 1925ஆம் ஆண்டு தென்னிந்திய நாடகக் கலைஞரான வேல்நாயகர் என்பவரைக் குருவாகக் கொண்டு சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திரா, வள்ளிதிருமணம், பக்த நந்தனார், நல்லதங்காள், குலேபகாவலி, பூதத்தம்பி, கோவலன் கண்ணகி போன்ற நாடகங் களையும், சங்கீதத்தையும் முறையாகப் பயின்றவர்.. ராஜபார்ட் வேடங்களில் புகழ்பெற்றவர். சத்தியவான் சாவித்திரியில் பின் சத்தியவானாகவும், குலேபகாவலியில் தாசன் மூலக் பாத்திரத் திலும் பாடி நடித்து, வேல்நாயகர், பி.எஸ்.கோவிந்தன் உள்ளிட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய நாடகக் கலைஞர்களால் சத்தியவான் வல்லிபுரம் என்று பாராட்டப்பட்டதோடு, ராஜபாட் வேடப் பொருத்தத்திற்கும் பாராட்டுகள் பெற்றவர். 1925ஆம் ஆண்டு தொடக்கம் 1960ஆம் ஆண்டு வரையில் யாழ். மாவட்டத்திலும், இலங்கையின் பல பாகங்களிலும் எனது தந்தையாரின் நாடகங்கள் மேடை ஏற்றப்பட்டது.

அக்காலத்தில் மிருதங்கத்தில் புகழ்பெற்றிருந்த செல்லையா (மானிப்பாய் தன்னை) ஆர்மோனியத்தில் புகழ் பெற்ற எனது மாமனார் நல்லார் வெள்ளையன் (மயிலிட்டி) மாஸ்டர் பிலிப் (வளலாய்) மற்றும் நாடகக் கலைஞர்களான அண்ணாசாமி (வதுரி), நடிகமணி வி.வி.வைரமுத்து (காங்கேசன்துறை) முத்துத்தம்பி (ஊறணி), வி.என். மார்க்கண்டு (வசாவிளான்) போன்ற புகழ் பூத்த கலைஞர்களும் எனது தந்தையாரோடு பங்காற்றியவர்களென்பது குறிப்பிடத்தக்கது.

தந்தையார் பதித்த கால் தடத்தில் எனது சகோதரன் குணலிங்கம் அவர்களும் நாடகம், கலை, இலக்கியத்தில் தடம் பதித்தவர். பேச்சு, எழுத்து, நாடகத்துறையில் அகில இலங்கை ரீதியில் அவர் பெற்ற விருதுகள், பாராட்டுகள் அளவிட முடியாதவை. கலையரசு சொர்ணலிங்கம், ஏரிபொன்னுத்துரை, ஆங்கிலப் பேராசிரியர் சோமசுந்தரம், சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் எனது சகோதரனை பாராட்டி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

இத்தனை பேரின் பயிற்சிகள் பக்கபலத்தோடு நானும் கலை இலக்கியத்தில் காலூன்றினேன். எனக்கு வழிகாட்டியவர்கள், ஆதரவு நல்கியவர்கள் பலபேர். அவர்களை வணங்குகிறேன்.

மயிலிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்று, பின்னர் காங்கேசன்துறை ஆங்கில மகாவித்தியாலயத்தில் கல்வி கற்றேன். கல்வி கற்ற காலத்தில் பாடசாலைகள் ரீதியாக நடத்தப்பட்ட விளையாட்டு, பேச்சு, கட்டுரை, நாடகப் போட்டிகளில் பங்குபற்றி பரிசில்கள் பெற்றுள்ளேன். 1968ம் ஆண்டு எனது பாடசாலைக் காலத்தில், 15 வயதில் இலங்கையின் முதல் தமிழ்திரைப்படத்தை இயக்கிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமை பெற்ற இலங்கைச் சினிமாவின் தந்தையான ஹென்றி சந்திரவன்ச என்பவரினால் சினிமாத்துறைக்கு அறிமுகப் படுத்தப்பட்டேன்.

1969ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் 25ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற பேச்சுப்போட்டியில் முதல் பரிசு பெற்றுள்ளேன். 1972ஆம் ஆண்டு மல்லாகத்தில் நடந்த தமிழா ராட்சி மாநாட்டில் பல்துறைக் கலைஞர் நா. கருணானந்த சிவம் எழுதி நெறியாழ்கை செய்த "தண்ணீரும் சுடும்" என்ற சமூக நாடகத்தில் விடுதலை வீரன் தவம் என்ற கதாபாத்தில் நடித்து இலங்கையின் அனைத்து அச்சு ஊடகங்களாலும் நடிப்பிற்கென பாராட்டுப் பெற்றேன்.

அதன் பிறகு காங்கேசன்துறை இளந்தமிழர் மன்றத்தினால் உருவாக்கப்பட்ட நாடகங்களான திரு.கருணானந்தசிவம் எழுதிய பாஞ்சாலி சபதம் என்னும் நாடகத்தில் துச்சாதனனாகவும், மு.தேவராசா (தையிட்டி) எழுதிய சாய்ந்த சாணக்கியன் மற்றும் சாணக்கிய சபதம் போன்ற நாடகங்களில் நந்தமன்னன், போரஸ் மன்னன் வேசங்களில் நடித்துள்ளேன்.

பொன்.கணேசமூர்த்தி அவர்களின் வானொலி நாடகங்களான "இலங்கை மண்", "பொன்பரப்பித்தீவு" போன்ற நாடகங்களிற்கு குரல் வழங்கி பாராட்டப்பட்டுள்ளேன். பொன் கணேசமூர்த்தி எழுதிய நீலக் கல் என்னும் நாடகத்தில் சுந்தர்சிங் என்ற தளபதியாக வில்லன் வேடத்தில் நடித்துள்ளேன்..

1973ஆம் ஆண்டு இலங்கையில் தயாரிக்கப்பட்ட எச்.சி. பிலிம்சின் ஹென்றி சந்திரவன்ச இயக்கிய சிங்களத் திரைப்படங்களான "வனகெதகெல்ல", "பலிக நிம" போன்ற திரைப்படங்களிலும் எச்.சி.பிலிம்சின் தமிழ்த் திரைப்படமான "சுமதி எங்கே" என்ற திரைப் படத்திலும் நடித்துள்ளேன்.

இலங்கை, இந்திய கூட்டுத் தயாரிப்பு திரைப்படங்களான சுப்பஸ்ரார் ரஜனிகாந்தின் தீ, மேலும் பல சிங்கள, தமிழ்த் திரைப்படங்களிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடித்துள்ளேன் மேலும் பல திரைப்படங்களில் சண்டைக் காட்சிகளில் பங்காற்றியுள்ளேன்.

1974ஆம் ஆண்டு இலங்கை வானொலியில் தமிழ் நாடக சேவை ஆரம்பிக்கப்பட்டபோது கலைஞர் நா. கருணானந்தசிவம் எழுதிய "மானம்" என்ற நாடகத்தில் சோழன் செங்கணான் பாத்திரத் திற்கு குரல் வழங்கியுள்ளேன்.

மாவை முத்தமிழ்க் கலா மன்றத்தின் 'ஏனிந்த அவலம்' என்ற நாடகத்தில் கர்ணனாகவும், வன்தொண்டன் என்ற நாடகத்தில் முனிவராகவும் நடித்து பரிசில்கள் பெற்றுள்ளேன். ஏழாலை முத்தமிழ்க் கலாமன்றம் இயக்கிய 'சூழ்ச்சியின் முடிவு', கடமை, ஆட்டக்காறி போன்ற நாடகங்களில் நடித்துள்ளேன்.

கட்டுவன் பாலர் ஞானோதய நாடக மன்றத்தின் சங்கிலியன் என்ற நாடகத்தில் சங்கிலியனாக நடித்துள்ளேன். 1976ஆம் ஆண்டு திரு நெல்வேலி நாடக அரங்குக் கல்லூரியில் நவீன நாடகங் களிற்கான பயிற்சி பெற்றுள்ளேன்.

1977ஆம் ஆண்டு இலங்கேஸ்வரன் நாடக மன்றம் உருவாக்கி 'யூலியன்சீஸர்', 'சதியால் சரிந்த சாம்ராட்சியம்', 'இராஜ, இராஜ சோழன்', 'வீரபாண்டிய கட்டப்பொம்மன்', 'சாம்ராட் அசோகன்', 'சோக்கிரட்டீஸ்', 'வீர சிவாஜி', 'விடுதலைக்கோர் கடுங்கோன்', 'வீரத்திலகம்', 'சூழ்ச்சி', 'தாஜ்மகால்' போன்ற நாடகங்களையும், ஆங்கில நாடகத்தந்தை சேக்ஸ்பிரியரின் 'யூலியர்சீசர்', 'ஒதெல்லோ', 'மக்பெத்', 'ரோமியோ' 'யூலியற்', 'வெனிஸ் நகர வணிகன்', 'துரோகத்தின் முடிவு', 'இரத்தவெறி' போன்ற நாடகங் களை, நாடகப் போட்டிகளில் மேடையேற்றி சிறந்த நாடகம், சிறந்த ஒப்பனை, சிறந்த நடிகருக்கான விருதுகள் பெற்றுள்ளேன். எமது நாடகங்கள் வடமாகாணத்திலும், இலங்கையின் பல பாகங்களிலும் நடைபெற்ற போட்டிகளில் பங்குபற்றி பரிசு பெற்றுள்ளது.

1978ஆம் ஆண்டு தொடக்கம் 1984ஆம் ஆண்டு வரை பலாலி உதயதாரகை மற்றும் உதயகலைவாணி சனசமூக நிலையம் நடத்திய நாடகப் போட்டிகளில் ஏழு வருடங்கள் பங்குபற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது நாடகமாகவும், சிறந்த நடிகராகவும் பரிசு பெற்றுள்ளேன்.

எமது நாடகமான 'யூலியஸ் சீசர்', நவீன நாடகமான 'காத்திருக் கிறார்கள்' என்ற நாடகங்கள் யாழ். பல்கலைக்கழகம், வெளிவாரிப் பட்டப்படிப்பு நிலையம் (திருநெல்வேலி) மற்றும் யாழ். மாவட்ட பிரபல பாடசாலைகளில் 1984ஆம் ஆண்டு மேடையேற்றப்பட்டு வரவேற்புப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

1981ஆம் ஆண்டு மட்டக்களப்பு காரைதீவு கலைக்குழுவுடன் இணைந்து 'களம் கண்ட கவிஞன்' மற்றும் 'கலையும் கண்ணீரும்' என்ற நாடகத்தில் கதாபாத்திரத்தில் நடித்து ஜெமினிக்கணேசன் உட்பட பல தென்னிந்திய சினிமாக் கலைஞர்களின் பாராட்டையும் பெற்றுள்ளேன்.

1972ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து சிறுகதை, கவிதை, கட்டுரை, நாடகப் பிரதியாக்கல், வானொலி நாடகப் பிரதியாக்கல் போன்ற போட்டிகளில் பங்குபற்றி சர்வதேச மாணவர் பேரவை, இலண்டன் பூபாளராகங்கள், அவுஸ்திரேலிய தமிழ்ச் சங்கம்,I.B.C போன்ற அமைப்புகளின் பாராட்டு சான்றிதழ்களையும் பெற்றுள்ளேன். தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாடு அமைச்சினால் 2011ஆம் ஆண்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறுகதைப் போட்டியில் பங்குபற்றி பாராட்டுச் சான்றிதழ் பெற்றுள்ளேன்.

1991ஆம் ஆண்டு வெளிநாட்டுக் கலைக்குழுவிடம் குரல் பயிற்சி, அரங்குப் பயிற்சிகள் பெற்றதோடு, அவர்களின் சான்றிதழ்க ளையும் பெற்றுள்ளேன்.

பிறமொழித் திரைப்படங்களுக்கு தமிழில் குரல் வழங்கும் பயிற்சிகள் பெற்றதோடு, நூற்றிற்கு மேற்பட்ட ஆங்கிலத் திரைப் படங்களிற்கு தமிழில் கதாநாயகன், வில்லன் வேடங்களிற்கு குரல் வழங்கி விருதுகள், பாராட்டுக்கள் பெற்றுள்ளேன். மற்றும் பல திரைப்படங்கள், குறும்படங்களில் பங்காற்றியுள்ளேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல சிறுகதைகள், கட்டுரைகள், நாடக ஆக்கங்கள் எழுதியிருந் தாலும் நூல் வடிவில் வருவது இதுவே முதல் முறை. இதுவே எனது முதல் நூல் பதிவு. இந்நாடகங்கள் 1991 ஆம் ஆண்டு எழுதியவையாகும்.

என்னை நூல் வடிவில் எழுதத் தூண்டிய கரைச்சிப் பிரதேச கலாசார உத்தியோகத்தர் கு. ரஜீவன்.MA, மாவட்ட கலாசார உத்தியோகத்தர் அருள்சந்திரன் மற்றும் கரைச்சிப் பிரதேச செயலர், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோருக்கும்.. எனக்கு ஆதரவு வழங்கிய அனைவருக்கும் மற்றும் எனது முயற்சிக்கு ஊக்கம் வழங்கிய எனது துணைவி ஏ.தவமணி தேவிக்கும் மலையாளபுரம் கிராம அலுவலர் ம.சந்திரபாலன் அவர்களிற்கும் நன்றி கூறி.. உங்கள் கைகளில் எனது படைப்பு.

**சி.வ.ஏழுமலைப்பிள்ளை.**

*பகுதி 01, இல:11,*
*மலையாளபுரம் தெற்கு,*
*கிளிநொச்சி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகம் அன்றும் இன்றும்

பண்டைத் தமிழன் பண்பாட்டில் முதல் பங்கு வகிப்பது ஆயகலைகளே. இது பாமரமக்களின் சமயச் சடங்கு மற்றும் வைபவங்களின் போது பொழுதுபோக்கு அம்சமாகவும், மகிழ்ச்சிக் காகவும் உருவாக்கப்பட்டதுதான்.. ஆடலும் பாடலும் காலத்திற்கு காலம் வளர்ச்சியடைந்துவரும் உலகில், ஆடல், பாடல், கூத்து கும்மாளம் என்று உருவாகி கலை வடிவம் பெற ஆரம்பித்து வரலாறு படைத்தது. 17ஆம், 18ஆம் நூற்றாண்டுகளில் ஈழத்திரு நாட்டில் கூத்தும், இசையும் இசை நாடகமும் கோலோச்சியது.

ஈழநாட்டின் கலை வரலாற்றில் கூத்துக்கள், இசை நாடகங்களை அரங்கேற்றி ஆதிகாலத்தில் கலைவளர்த்தவர்கள் பாமர மக்களே. அவர்களைக் கூத்தாடிகளென்றும், நாடகப் பித்தர்களென்றும் கபாலிகர் கூட்டமென்றும் ஒரு சார் மக்களால் வசைபாடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால ஓட்டத்தில் பாமர மக்களின் கையிலிருந்த கூத்தும் நாடகமும் அனைத்து மக்களின் இதயங்களையும் வென்று, வாழிவியலிலும் இடம்பிடித்து வரலாற்றில் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங் களிலும் பாடநூல்களாகவும், ஆய்வு நூல்களாகவும் வெளி வந்தது நாடகக் கலைக்கு கிடைத்த பெருவெற்றியே.

உழைத்து ஓய்ந்தவர்கள் ஓய்வாகப் பொழுது போக்கவும் நினைத் ததை நிறைவேற்ற வேண்டுதல் பூசை செய்து இரவு முழுவதும் ஆடிப்பாடி அகமகிழும் கலையே கூத்துக்களாக உருவகம் பெற்றது. ராஜாக்களின் வரலாறுகளே கூத்துகளாக மேடையேறும். மேடைக்கு முன்னால் இரவிரவாக காவோலை கொழுத்தி, பெண் வேடங் களிற்கு ஆண்களும் நடித்து அகமகிழ்ந்து கூத்துக்கலை வளம் பெற்றது. அந்த வகையில் உருவாகியதுதான் காத்தவராயன் கூத்து. உடுக்கு இசை, புராண உடை, அரிதாரம் பூசி தாளலயம் தவறாத ஆட்டம் பாட்டு இரண்டு நாட்கள் மேடையில் ஆடப்பட்ட காலம் போய் தற்போது வரலாறு சுருக்கப்பட்டு ஒரு இரவுக்கு மட்டுப்படுத்தப்பட்டும், மணித்தியாலங்களுக்குள் மேடை யேற்றியும் சிந்து நடைக்கூத்து, விசேடகூத்து, இசை நாடகங்க ளாகவும் மேடை யேற்றப்பட்டு வருகின்றது.

கிறிஸ்தவ மக்கள் செறிந்து வாழ்ந்த பிரதேசங்களில் வரலாற்று வீரக்கதைகளைத் தெரிவு செய்து அகன்ற மேடை, ஒளிரும் உடை அலங்காரம், தாளலயம் தவறாத ஆட்டம், மேடை முழுவதும் சுற்றி உச்சத் தொனியில் பாடி நாட்டுக் கூத்துக்கு முழுவடிவம் கொடுத்தனர். தற்போது நாட்டுக் கூத்துக் கலைக்கு திருமறைக் கலாமன்றம் மலையாளபுரம் காவேரிக் கலாமன்றம் போன்ற அமைப்புகள் உயிர் கொடுத்து வளர்ந்து வருகின்றனர்.

இசை நாடகம் இலங்கையின் வடகிழக்கு பகுதிகளில் புராண, இதிகாச வரலாற்றுக் கதைகளை மையமாகக் கொண்டு இசை வடிவில் மேடையேற்றப்பட்டு வந்தது. இசை நாடகம் கட்டியகாறனின் கட்டியங்கூறலுடன் மேடையில் தோன்றியது. பின்னர் பபூன் பாத்திரம் ஊடாக மேடை அறிமுகம் செய்யப்பட்டும், அதன் பின்னர் வரகவிப்பாடலுடன் பாத்திரங்கள் மேடையில் தோன்றியும் இசை நாடகம் வளர்ச்சி கண்டது. இசை நாடகத்தில் பொதுவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்மோனியம், மிருதங்கம், இசை அமைப்பும், உடையலங்காரம், ஒப்பனையும், பிற்பாட்டும், இராகம் தாளம் தவறாத பாட்டும் பெரும் பங்கு வகித்தது. பெண் பாத்திரத்தில் ஆண்களும் நடித்தார்கள். எல்லோரும் பாடக்கூடியவர்களாகவும் இருந்தனர். 1920ஆம் ஆண்டு தென்னிந்திய நாடகக் கலைஞர்களின் இலங்கை வருகையின் பின்னர் இசை நாடகம் பல வடிவங்கள் பெற்று கோவில்கள், திரு விழாக்கள், நிதிசேர்க்கும் வழிமுறைகளிற்கும் நாடகங்கள் பயன் படுத்தப்பட்டு வந்தது. இதனை மாபெரும் கலையாக, தொழில்சார் வழிமுறையாக சகல மக்களையும் வெற்றிகண்ட பெருமை நடிகமணி வி.வி.வைரமுத்து ஐயாவையே சாரும். அவரால் உருவாக் கப்பட்ட வசந்தகான சபா இந்த சேவை மூலம் இசை நாடகத்தை வளர்த்தது.

சுருகி தவறாத பாட்ல், தாளம் தப்பாத ஆட்டம், ஒளிரும் உடை அலங்காரம், ஓங்கார இசையும் கொண்ட தமிழ்க் கூத்துக்கள் இந்தி யாவின் தென்பாகத்தினின்றும் வந்தமையால் 'தென்மோடி' என்றும் வடநாட்டினின்றும் வந்தமையால் 'வடமோடி' (ஆரியக் கூத்து) என்றும் பேசப்படுகின்றது. தற்போது இக்கூத்துக்கள் கிழக்கு மாகாணத்தில் பேராசிரியர்.மௌனகுருவினால் வளர்ச்சி கண்டுள்ளது. சமகாலத்தில் புராண, வரலாற்று வசன நாடகங்களும் வளர்ச்சி கண்டன.

வசன நாடகம் பெரும்பாலும் புராண, இதிகாச, சரித்திரக் கதைகளை மையமாகக் கொண்டு புனையப்பட்டு மேடை யேற்றப்பட்டு வந்துள்ளன. காங்கேசன்துறை இளம்தமிழர் மன்றம், மாவை முத்தமிழ்க் கலாமன்றம், மயிலிட்டி இலங்கேஸ்வரன் நாடக மன்றம் அரச நாடகங்களை மேடையேற்றியுள்ளது. பிரதேச, மாவட்ட, அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட நாடகப் போட்டி களில் வெற்றியும் பெற்றது.

இக்கால கட்டத்தில் சமூகச் சீரளிவுகளை மையமாக வைத்து சமூக மேம்பாட்டை வலியுறுத்தி சமூக நாடகமும் வளர்ச்சி கண்டது. புத்தூர் பம்பல் நாடக மன்றம், கோண்டாவில் கிருஸ்ணா நாடக மன்றம் இதில் பெரும்பங்கு வகிக்கின்றது. தென்னிந்திய சரித்திர சினிமாப் படங்கழுக்கு இணையாக அளவெட்டி பாரதி நாடக மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வடக்கும் தெற்கும்' கோண்டாவில் வாகீஸ்வரி நாடக கலா மன்றம் 'அலாவுதீன்' என்ற சரித்திர நாடகங்களை பிரமாண்டமான செலவில் சுழலும் மேடை, மந்திர தந்திரக் காட்சிகள், திகில் நிறைந்த சண்டைக் காட்சிகளைப் புகுத்தி பாமர மக்களின் இதயங்களை வென்றனர். கோவில்கள், திருவிழாக்கள், கொண் டாட்டங்களிலும் மேடையேற்றி புதுவரலாறு படைத்தனர்.

இந்த நாடக வளர்ச்சியின் மகுடமாக கல்விசார் சமூகம் நவீன நாடகங்கள் குறியீட்டு நாடகங்களை உருவாக்கி உலகின் கவனத்தை வென்றனர். நாடக அரங்கு கல்லூரிகள் தோன்றி கல்லூரி, பல்கலைக்கழகம் போன்றவற்றில் நாடக அரங்குப் பயிற்சிகள், நாடக ஆய்வுப் பயிற்சிகளையும் வழங்கினார்கள். இந்த வகையில் வசாவிளான் வி.எம். குகராசா நவீன நாடக வளர்ச்சிக்கு பெரும்பங்கு ஆற்றியுள்ளார்.

நாடகங்கள் மக்களுக்கு நல்ல கருத்துக்களைப் பதியச் செய்து வாழ்க்கையை நெறிப்படுத்தும் ஒரு அரிய கலையாக மிளிர்கின்றன. இலக்கியங்களில் மன்னர்களும் முத்தமிழாம் இயல், இசை, நாடகம் மூன்றையும் போற்றி வந்துள்ளனர்.

மேடை நாடகம், வானொலி நாடகம், தொலைக்காட்சி நாடகம் ஓரங்க நாடகம், குறுநாடகம், பெரிய நாடகம், குடும்ப நாடகம், சமூக நாடகம், சமய நாடகம், சரித்திர நாடகம், இதிகாச நாடகம், இலக்கிய நாடகம், மௌன நாடகம், குறியீட்டு நாடகம், கவிதை நாடகம், தெருவெளி நாடகம், தெருவெளிக்கூத்து என ஆல் விருட்சமாக நாடகம் விழுது பரப்பி வேரூன்றி வியாபித்திருப்பது நிஜமானதே.

**சி.வ.ஏழுமலைப்பிள்ளை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றுகள்

01. **முருகனின் முதற்போர்**
கந்தப்புராணம்

02. **நடுகல் பேசும்**
இராமாயணம்
கற்பனையும் கலந்தது

03. **சங்கிலியன்**
பண்டிதமணி கணபதிப்பிள்ளை
(வசன நடை என்னுடையது.)

04. **ஜூலியஸ் சீசர்**
ஆங்கில நாடகத் தந்தை சேக்ஸ்பியரின் ஆங்கில நாடகத்தை மொழிமாற்றம் செய்தது.

05. **மகுட பங்கம்**
அன்னையின் ஆணை திரைப்படத்தில் கலைஞர் கருணாநிதி அவர்களால் எழுதி நடிப்புலகமாமேதை சிவாஜிகணேசன் அவர்களின் நடிப்பில் உருவான சாம்ராட் அசோகன் என்ற நாடகத்தை பாடசாலைக் காலத்தில் சாம்பிராட் அசோகனாக நடித்தேன். அந்த நாடகத்தின் மீது ஏற்பட்ட பற்றினால் மகுட பங்கம் என்ற பெயரில் எனது உரைநடையில் எழுதியுள்ளேன்.

06. **வாய்மை காத்த மன்னன்**
**(அரிச்சந்திரன் வரலாறு)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே திரைகள்

01. முருகனின் முதற்போர்.

02. நடுகல் பேசும்

03. சங்கிலியன்

04. ஜூலியஸ் சீஸர்

05. மகுட பங்கம்.

06. வாய்மை காத்த மன்னன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகனின் முதற்போர்

காட்சி 01

**இடம்: திருக்கயிலாயம்**

**தோன்றுவோர் சிவபெருமான், உமாதேவியார், இந்திரன் முதலான தேவர்கள்.**

(சிவனும், உமாதேவியாரும் எழுந்தருளியுள்ளனர். இந்திரன் முதலான தேவர்கள் அவர்களைக் காணச் செல்கின்றனர்.)

**குரல்:** ஓம் சிவாய நமகோ.. ஓம் சிவாய நமகோ... ஓம் சிவாய நமகோ.

(இந்திரன் சிவபெருமானையும், உமாதேவியாரையும் வணங்கிவிட்டு தனது குறைகளை விண்ணப்பித்தல்.

**இந்திரன்:** அன்பினால் உலகத்தை காத்தருள் புரிகின்ற இறைவியோடு எழுந்தருளியுள்ள முக்கண் முதல்வனே! நாங்கள் அளவில்லாக் காலம் வலிமை வாய்ந்த சூரனாலும், அவனது அசுரர் பரம்பரையாலும் வலி யிழந்து வருந்துகிறோம். ஒடுங்குகிறோம். தவியாய் தவிக்கின்றோம். எங்கள் தவிப்பு உங்கள் கண்களுக்குப் படவில்லையா?

(இறைவன் புன்னகையுடன்)

**இறைவன்:** யாவும் அறிவோம் இந்திரா!

**இந்திரன்:** எம்பெருமானே! முன்னர் அடியேன் தவம் செய்த காலத்தில் தேவரீர் தாங்கள் எழுந்தருளி, நம்மிடம் ஒரு குமரன் தோன்றுவான், அவனைக் கொண்டு அசுரர் குலத்தை அழித்து உனது துயரத்தை ஒழிக்கின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அருள் செய்தீர்.. அவ்வாறே குமரனும் தோன்றி யுள்ளார்.

**இறைவன்:** ம்... (புன்னகை புரிகின்றார்)

**இந்திரன்:** தேவரீர் எனியும் காலம் தாழ்த்தாது எம்மைத் தாங்கள்தான் காத்தருள வேண்டும்.

இறைவன்: இந்திரா இனி மனம் வருந்தாதீர்... அதற்கான நேரமும் வந்துவிட்டது. அதோ முருகக் கடவுள்
**(முருகன் தோன்றல்) [முருகன் இறைவனையும், இறைவியையும் வணங்குதல்.]**
**(தேவர்கள் ஆரவாரித்து)** முருகக் கடவுளே எம்மைக் காத்தருளும் தெய்வமே... **(வணங்குதல்)**

**இந்திரன்:** முருகக் கடவுளே எம்மைக் காதருளும்...
(முருகன் புன்னகை புரிதல்)

**இறைவன்:** மைந்தா! உலகத்தையெல்லாம் நிலைகுலையச் செய்து, உயிர்களுக்கு துன்பத்தை இழைத்து, வானவர் நகரத்தை அழித்து, அவர்களுக்கு தீமை செய்து, அரா ஜகம் புரிகின்ற சூரனையும், அவன் குலத்தையும் அழித்து தேவலோகத்து ஆட்சியை இந்திரனுக்கு வழங்குவாயாக...

முரு. கடவுள் : ஆகட்டும் தந்தையே...

**இறைவன்:** மைந்தா இதோ உனக்கான ஆயுதங்கள்.... தோமரம், கொடி, வில், வாள், குலிசம், அம்பு, அங்குசம், மணி, தாமரை, தண்டம், மழு.. **(எல்லாவற்றையும் எடுத்துக் கொடுத்து)** மைந்தா இந்த வேல் பஞ்சபூதங்களை அழிக்கவும், சூரன் பெற்ற வரங்களையெல்லாம் சிதைக்கவும், ஆயுதங்கள், படைகளுக்கெல்லாம் தலைமையானது பெற்றுக்கொள்...
**(முருகன் உறுதியுடன் பெற்றுக்கொள்ளல்)**

உமா: **(உமாதேவியார் முருகக் கடவுளை ஆசீர்வதித்து)** மகனே அநீதிகளையெல்லாம் அழிக்கவல்லதும் உன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பிற்குமான... என் வேலாயுதம், சக்தி, வேலாயுதம். வேலாயுதம். இதைப் பெற்றுக்கொள்

**(உமாதேவியார் வேலாயுதத்தை வழங்க முருகன் தாயை வணங்கி பெற்றுகொள்ள தேவர்கள் பாடி ஆடுகின்றனர்)**

தேவர்கள் சேர்த்து பாடல்: வெற்றி வேலாயுதம், வெல்லும் சூலாயுதம், வெற்றி வேலாயுதம். வெல்லும் சூலாயுதம். ஞானசக்தி வேலாயுதம், அதர்மம் அழிக்கும் அகோராயுதம். தர்மம் காக்கும் தாயாயுதம், தருக்கரைத் தகர்க்கும் வீராயுதம். வெற்றி வேலாயுதம் வெல்லும் சூலாயுதம். முருகன் தூக்கும் போராயுதம் தேவரைக் காக்கும் வெற்றி வேலாயுதம்.. வெற்றி வேலாயுதம்...

**(எல்லோரும் பாடலை ரசித்தபடி நிற்க)**

இனைவன்: மைந்தா இதோ உமக்கு உதவியாக.. பதினொரு உருத்திரர், நவவீரர், இலக்கம் வீரர், பூதகண நாதர்கள், இந்த தேர் குதிரைகளோடு வீராதி வீரன் வீரவாகு தேவரையும் தந்தோம்.. சென்று வா மகனே... சென்று உலகை உய்வி..........

**(முருகன் தந்தையை வணங்குதல்)**

தேவர்கள் சேர்ந்து : சூரன் ஒழிந்தான். சூரன் ஒழிந்தான். (உணர்ச்சி பொங்க ஆர்ப்பரித்தனர்)

**(முருகன் தந்தையையும் தாயையும் வணங்கிவிட்டு வீரர்கள் புடைசூழ புறப்படல்)** வழியில்...**(நாரதர் வருதல்)**

நாரதர்: சம்போ மகாதேவா நாராயணா..

**(நாரதர் முருகக் கடவுளை வணங்குதல்)**

முரு.கடவுள்: நாரத முனிவரின் வருகை எனக்கு சந்தோசத்தைத் தருகின்றது.. எனது பணிக்கு வெற்றி உறுதி என்று பறைசாற்றுகின்றது..

இந்திரன் : குமார இதோ ஒரு பெரிய மலை எம் பாதையைத் தடுக்கின்றது.

நாரதர் : ஐயனே! இது கிரவுஞ்சம் என்னும் மலை, இதன் அயலில் சூரனுடைய கடைசித் தம்பியான தாரகன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயமாநகரில் ஆட்சி புரிகின்றான். அவன் பெருவீரன்.. திருமால் விட்ட நேமிப்படையை ஆரமாகப் பூண்டவன். மாயை வல்லவன். இவனைக் கொன்றுவிட்டால், சூரனைக் கொல்வது எளிதாகும்.

முருகக்கடவுள்: நாரதரே! அசுரரை அழிப்பதற்கு முன் அவர்களைத் திருத்தி நல்வழிப்படுத்த முடியுமா என்று பார்க்க விரும்புகின்றேன். அதற்கு தங்களின் அலோசனை என்ன?

நாரதர்: **(தயங்கியவாறு)** தந்தைக்கு உபதேசம் செய்த பெருமானே தங்களுக்குத் தெரியாததா? அதற்கு என்ன செய்யப்போகின்றிர்கள் அடியேன் அறிய ஆவலாக உள்ளேன்.

முருகப்பெருமான்: **(உறுதியுடன்)** வீரவாகு தேவரை சூரனிடம் தூதாக அனுப்பப்போகிறேன்... அவன் முடிவை அறிந்து அடுத்த கட்டத்தை செயல் படுத்துவோம்...

நாரதர்: பெருமானே! நல்ல யோசனை தான்... வெற்றி தங்கள் பக்கமே **(வணங்கி விடை பெறல்)**

முருகக் கடவுள்: நாரதா தங்கள் ஆசி பலிக்கட்டும்... வீரவாகு நீ சூரனுடைய வீரமமேந்திர புரத்திற்கு விரைந்து சென்று சூரனிடம் தேவர்களைச் சிறைவிட்டுத் தருமநெறியில் அரசாளும்படி சொல். ஏற்க மறுத்தால் போரைத் தொடங்குவோம்.

காட்சி 02

**இடம் : வீரமகேந்திரபுரம் சூரன் அரண்மனை**

**(சூரபத்மன் அரியணையில் அமர்ந்திருத்தல் அருகில் பானுகோபன், வீரவாகு தூதாக வருதல்)**

**சூரபத்மன்: (கடுங்கோபத்துடன்)** அண்ட சராசரங்களும் என் பெயர் கேட்டால் நடுங்கும் அப்படியிருக்க காற்றே புகமுடியாத என் கோட்டைக்குள் எப்படிப் புகுந்தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரவாகு: வரவேண்டிய தேவை இருக்கிறது. வருவதற்கு மன உறுதியும் இருக்கிறது. நான் வரத்தான் செய்வேன்.

சூரன்: இந்த இழிவான செயலைச் செய்த உன்னை இப் பொழுதே என் வாளினால் துண்டாக வெட்டுவேன். ஆனால் நீ யார்? சொல்.

வீரவாகு: சூரபத்மா கேள். இந்திரன் முதலாய தேவர்கள் படுகின்ற துயரத்தை நீக்கி அருளுவதற்காகவும், அவர்களுடைய பழய செல்வங்களையும் சிறப்புக் களையும் மீள அளித்தருளுவதற்காகவும் ஆதிக்கடவுள் எழுந்தருளியுள்ளார்.

சூரன்: என்னை எதிர்ப்பதற்கு அவனுக்கு வல்லமை எங்கிருந்து வந்தது. எவர் கொடுத்த சக்தி அது. எப்படிப்பட்டவன். அவன் யார்?

வீரவாகு: அந்தக் கடவுளையா யார் என்று கேட்கிறாய். உன்னை அழிப்பதற்கென்றே உலகில் தோன்றியவர். வேலோடு வந்திருப்பவர்.. உன்னால் வேதனைப்படும் அமரர் களை விடுவிக்கப்போகிறவர். வேலன், வேதத்துக்கு சீலன். பார்வைக்குப் பாலன், பகைவர்க்கு காலன்...

சூரன்: எத்தனை பெயர்கள் அவனுக்கு...

வீரவாகு: கந்தன் என்பார்கள். கடம்பன் என்பார்கள். கார்த்திகேயன் என்பார்கள். குகன் என்பார்கள். ஆறு முகன் என்பார்கள். சண்முகன் என்பார்கள். உன்னை யும் அழித்த பிறகு சூரனை வதம்செய்த சூரன் என்பார் கள்.

சூரன்: போதும் நிறுத்து வார்த்தையிலே அழகு கூட்டி, வர்ணனையிலே ஜாலம் காட்டி, சொல் அலங் காரத்துடன் என்னைப் பேட்டிகாண வந்திருப் பவனே யார் நீ?

வீரவாகு: சொல்லுக்கும், பொருளுக்கும், முத்தமிழுக்கும் தமிழின் இனிமைக்கும், ஆயகலைகள் அறுபத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கினைக்கும், முன்னை பழமைக்கும், பின்னைப் புதுமைக்கும் தலைவன் அவன். அவனே வேலவன். அவன் அனுப்பிய தூதுவன் வீரவாகு தேவன்.

சூரன்: ஓ... வேலன் அனுப்பிய தூதுவனோ...

வீரவாகு: தூதுவன் மட்டுமல்ல உனக்கு நன்மையை எடுத்து ஓதுபவனும்கூட.

சூரன்: ஆயிரத்தெட்டு அண்டங்கள் அனைத்தையும் வென்று தனியரசு செய்யும் எனக்கு பாற்பற்கள் கூட முளைக்காத நேற்றைய பாலகளாகிய முருகன் அரச நெறி கற்பிக்கவும், ஆலோசனைகள் சொல்லவும் முற்பட்டான்... நான் ஒருபோதும் தேவரை சிறைவிட மாட்டேன். நீ அறிவிலியாதலால் குழந்தைப் பிள்ளைகயின் தூது வனாக இங்கே வந்தாய்... நீ தூது வனாக வந்தபடியால் உயிர்ப் பிச்சை தந்தோம் தப்பிப்போ...

வீரவாகு: உய்யும் வகையை அறியாத பித்தனே கேள்! நீ முருகக்கடவுளின் பெருமையை அறியவில்லை. எங்கும் திருச்செவிகள், எங்கும் திருவிழிகள், எங்கும் திருக் கரங்கள். எங்கும் திருவடிகள், எங்கும் அவர் திரு முகமே!
(அப்போது கோபம் கொண்ட சூரனின் மைந்தன் பானுகோபன்) இருக்கையைவிட்டு எழுந்து)

பானுகோபன்: வீரவாகு...

வீரவாகு: சூரன் மட்டும் பேசட்டும். மற்றவர்கள் வாயை அடக்கி இருக்கையில் அமரட்டும்...

பானுகோபன்: சங்கரா சிவா என்று தெந்தனாப் பாட்டுப்பாடும் பித்தர் கூட்டத்திற்கு பாதபூசை செய்கின்ற பைத்தியக் காறா, என்னையா எதிர்த்துப் பேசுகிறாய்.

வீரபாகு: பானுகோபா அடக்கமாகப்பேசு... நீ அழியப் பேகிறாய்...

பானுகோபன்: அற்பனே! ஆழியப்போவது நாம் அல்ல. எம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்ப்பவர்கள்தான். அதை முதலில் நீ புரிந்துகொள்

வீரவாகு: பானுகோபா! உங்கள் ஆத்திரம் அசுரர் குலத்தையே அழிக்கப்போகிறது.

சூரன்: சற்றுப் பொறுங்கள். இவனை நான் பார்த்துக் கொள்கிறேன்.

வீரவாகு: நீ பார்த்துக் கொள்வாய், நான் பார்த்துக்கொல்வேன்.

சூரன்: வீரவாகு எங்கு வந்திருக்கிறாய். யாருடன் எதிர்வாதம் செய்கிறாய் என்பதை நினைவில் வைத்துக்கொண்டு வந்த வழியே சென்றுவிடு!

வீரவாகு: படிப்பை எல்லாம் கற்றாயே தவிர பண்பைக்கற்க மறந்துவிட்டாய். பாவம் என் செய்வாய் என்றோ உன் தங்கை அஜமுகி கை அறுபட்டு வந்தாளோ அன்றே உன் அறிவும் மழுங்கிவிட்டது. தூதாக வந்தவனைக் கௌரவித்து, ஆசனம் இருத்தி வந்த செய்தியைக் கேட்பதை விடுத்து நிற்க வைத்துக் கொண்டு பேசு கிறாயே இதுதான் நீ கற்ற கல்வியோ?

சூரன்: ஆசனமா. உனக்கா? நான் கொடுக்கவா? பைத்தி யக்காறா.. அசுரர் குலத்தவர் அமரும் அரச சபையிலே மாற்றார் எவருக்கும் ஆசனமில்லையென்று அன்றே சாசனம் செய்துவிட்டேன், தேவைப்பட்டால் நின்று சொல்.. இல்லையேல் சென்றுவிடு.

வீரவாகு: நானாவது, உன்னோடாவது, நின்றாவது, பேசுவதாவது... முருகப்பெருமானே... அருள்கொடு (சிம்மாசனம் தோன்றுதல்)சூரபத்மா உனக்கும் சிம்மா சனம், எனக்கும் சிம்மாசனம், (சிம்மாசனத்தில் இருந்து கொண்டு) நீ சூரன், நான் வீரன் சரிதானா?

சூரன்: வீரவாகு இம்மாதிரி மந்திர ஜாலங்களைக் கண்டு பயந்துவிடுவான் சூரன் என்று எண்ணிவிடாதே மாயை என்பவள்தான் என்னைப் பெற்றெடுத்த தாய் தெரியுமா உனக்கு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரவாகு: அந்த மாயையைப் படைத்தவன் தான் வந்திருக்கும் முருகனின் தந்தை... அதை அறிந்தாயா நீ..

சூரன்: அவன் தந்தை ஈசனிடம்தான் உலகில் எந்த சக்தியாலும் என்னை வெல்லவோ, கொல்லவோ முடியாதென வரத்தைப் பெற்றிருக்கிறேன். அதை உணர்ந்தாயா நீ.

வீரவாகு: வரத்தைப் பெற்றபின் நடக்கும் தரத்திலே தாழ்ந்துவிட்டாய்.. அதனால்தான் ஆறுமுகத்தைப் படைத்திருக்கிறான் பரமன். அது புரிந்ததா உனக்கு.

சூரன்: ஆறுமுகமானால் என்ன? ஆயிரம் முகம் படைத்தவன் ஆனால் என்ன? இந்த சூரனை வெல்லவோ கொல்லவோ ஒருவன் பிறக்கவும் இல்லை. எனிப் பிறக்கப்போவதும் இல்லை.

வீரவாகு: உன்னைக் கொல்லவோ வெல்லவோ குமரன் தேவை யில்லை. ஆனால், நான் என் சொல்லினால் சுட்டுவிடுவேன். அது முருகனின் வேலுக்குப் பெருமை யில்லையென மன்னித்தேன். போ...

சூரன்: உன்னால் என்னை என்ன செய்துவிட முடியும்!

வீரவாகு: என்ன செய்துவிட முடியுமா? உனக்காகவே தாண்டி வந்தேன். கடலை, வாங்குவேன் உன் உடலை, அணி வேன்.. மாலையாய் குடலை, அனுப்புவேன் சுடலை, ஆனால், முருகன் கட்டளை இடலை, அதனால் உன்னைத் தொடலை.

சூரன்: சூரன் ஆத்திரத்துடன் அரியணையில் இருந்து எழுந்து) ஆ... சிறுவனே செத்து மடியாமல் வந்தவழியே சென்று விடு...

வீரவாகு: என்னையா? சிறுவன் என்று அழைத்தாய். சிறுமதி படைத்தவனே... நீ அழியப்போகிறாய். உன் அசுரர் குலமும் அழியப்போகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரன்: ஓடிப்பிடியுங்கள் அந்த வீரவாகுவை அவன் எங்கு ஒழித்து மறைந்தாலும் கொல்லாமல் கொண்டு வந்து என் கண்முன்னே நிறுத்துங்கள் எல்லாச் சித்திர வதைகளையும் செய்துவிடலாம்.

**(தப்பி ஓடிய வீரவாகு பின்தொடர்ந்த அசுரர் படையுடன் போர் புரிந்தான். போர் ஒலிகள்)**

பி. குரல்: வீரவாகு செய்த போரில் வீரமகேந்திரபுரம் அழிந்தது. ஐம்பது வெள்ளம் அசுரர் படை கொல்லப்பட்டது. வீர வாகு நடந்தவற்றை கூறுவதற்காக முருகனிடம் சென் றார். சூரபத்மன் ஆத்திரத்தில் கொதித்தான். போருக் கான ஆயத்தங்களை மேற்கொண்டான்.

காட்சி 03

**சூரன் மந்திராலோசனை:**

**தோன்றுவோர்: சூரன் ஒற்றன். பானுகோபன். சிங்கமுகன்.**

**சூரன்:** தூதுவரே பிரமாவை அழைத்து வாருங்கள்.

**ஒற்றன்:** **(சூரனை வணங்கியபடி)** மகாராசாவே பிரமா திருச் செந்தூரில் முருகனோடு இருக்கிறார்.

சூரன்: **(பெருமூச்சுவிட்டபடி)** நடப்பது நடந்தே தீரும்.. ஒற்றனே தற்போது களநிலையின் விபரத்தைக் கூறு.

ஒற்றன் : மகாராசாவே முருகன் திருச்செந்தூரில் இரண்டாயிரம் வெள்ளம் பூதசேனைகளோடும், நூற்றெட்டுப் படைத் தலைவரோடும், இலக்கத் தொன்பது வீரர்களோடும் வந்திருக்கிறார்.

சூரன்: ஒற்றனே உடனே சென்று சிங்கமுகன், பானுகோபன் ஆகியோர்களை அழைத்துவா.

**(ஒற்றன் செல்ல சூரபத்மன் சஞ்சலத்துடன் அங்குமிங்கும் நடத்தல்)(இருவரும் வந்து சூரனிடம் காலில் விழுந்து வணங்குதல்)**

சூரன்: **(பெருங்குரலில்)** நாம் பிறந்து வளர்ந்த புனித நகர் நாசக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்களால் எரிந்து சாம்பலாகிவிட்டது. எண்ணற்ற எம்சேனைகளும் அழிந்துவிட்டது. இரத்த ஆறு ஓடுகின்றது. எங்கும் எலும்பு மலைகள், பிணக்கு வியல்கள் என் மேன்மை, புகழ், கீர்த்தி எல்லாம் இல்லாமல் போய்விட்டது. தூதாக வந்தவனே இவ்வளவு அழிவுகளையும் செய்துவிட்டான். ஏன்னால் பொறுக்கமுடியவில்லை எமது அடுத்த திட்டம் என்ன?

பானுகோபன்: பிதாவே! கிரவுஞ்ச மலையையும் எங்கள் சிறிய தந்தையையும் முருகன் வதம் செய்த அன்றே என்னைப் போருக்கு அனுப்பியிருக்கவேண்டும். ஏன், எதற்காக அஞ்சுகிறீர்கள். கவலையை விடுங்கள் நான் இப்பொழுதே சென்று முருகனையும், அவன் கூட்டத் தையும் கூண்டோடு கட்டிவந்து தங்கள் பாதத்தடியில் போடுகிறேன்.

(பானுகோபன் புறப்படல்)

சிங்கமுகன்: அண்ணா நீங்கள் தேவர்களை வருந்தியது தப்பு. அவர்களை சிறையில் பூட்டி வருத்தினீர்கள். அவர்கள் செல்வங்களையும் நகரங்களையும் அழித்தீர்கள். இரக்கமற்றவனாக மாறினீர்கள். அதுவே எம் அழிவின் அத்திவாரம்.

சூரன்: சிங்கமுகா! நீ என்ன சொல்னிறாய்...

சிங்கமுகன்: அண்ணா சிவபொருமான் தமது சக்தியே உன்னை அழிக்கும் என்று கூறியதையும் மறந்துவிட்டாய், வந்தி ருப்பவர் சிவனின் மைந்தன் அண்ணா...

சூரன்: சிங்கமுகா திருமால் பிரம்மன் முதலிய தேவர்கள் எனக்கு அருகே வரத் தயங்குவார்கள் அப்படியிருக்க அந்தப் பாலகனா என்னை அழிப்பானென்று கூறுகி றாய்...

சிங்கமுகன்: என் அருமை அண்ணாவே... முருகப்பெருமான் சிவவெருமானுடைய நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றி யவர் அவரைப் பாலகன் என்று கூறாதீர்கள் கடவுள் என்று நினையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரன்: (கோபம் கொண்டு, கடுமூச்செறிந்து கொதித்துச் சிரித்து, கைதட்டி, இதழ்களைக் கடித்து தலையை அசைத்து) தம்பியே! மும்மூர்த்திகளாலும் வெல்வதற் கரிய சக்தி வாய்ந்த நீயா இப்படிக் கூறுகிறாய்? சிவ பிரான் எனக்கு அழியா வரத்தைத் தந்ததை நீ அறியாயோ அதற்கு நீ புதிய கருத்தையல்லவா பேசு கிறாய்..

சிங்கமுகன்: அண்ணாவே உன்பால் கொண்ட அன்பினால் நான் இப்படிக் கூறினேன். கோபிக்காதே. நான் இப்போதே போருக்குப் போகிறேன். விடைகொடு.

சூரன்: (தம்பியைத் தழுவி) என் தம்பியே, நீ சிங்கன் அல்லவா? வெற்றி எம் பக்கமே சென்றுவா.

(பின்னணிக்குரல்)

(போர் முருகனின் போர், அதர்மத்தை அழிக்கும்போர், முருகக் கடவுளுக்கும், சூரபத்மனுக்குமிடையே நடந்த போர், அண்டங்கள் அதிர்ந்து வீரமகேந்திரபுரம் போர்கோலம் பூண்டது...)

இடம் : போர்க்களம்:

(போர் ஒலிகள் கோசங்கள், தண்டாயுதங்கள், கதாயுதங்கள், வாட்கள், விற்கள், வேல்கள், யானைகள், தேர்கள் மோதும் ஒலிகள், எங்கும் பேரிரைச்சல்..)

(மேடையை இரண்டாகப் பிரித்தல்)

(ஒருபுறம் சூரன், பானுகோபன், சிங்கமுகன் மறுபுறம் முருகன், வீரவாகு காட்சிக்கேற்ப தோன்றுதல், இருட்டு, வெளிச்சம் மாறி மாறித் தோன்றுதல்)

பானுகோபன்: எமது நகரை அழித்தாய், மக்களைக் கொன்றாய், இப்போது என்னை எதிர்த்து போருக்கு வந்திருக் கிறாயா? நான் யார் தெரியுமா?

வீரவாகு: தெரியும்.. சூரனின் மைந்தன். மாஜையின் பேரன். திருமாலே உன் ஆணைக்கு அஞ்சுவார். ஆனால், வந்திருப்பவர் சிவனின் மைந்தர் நீ எம்மாத்திரம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பானுகோபன்: வாள்வீசத் தெரியாத கோழை நீ, வாய்வீரமா பேசுகிறாய்.

வீரவாகு: பானுகோபா அதிகம் பேசாதே. நீ எடுக்கும் ஆயுதத்தை நானும் எடுத்து போர் புரியத் தயாராக இருக்கிறேன்.. தொடங்கு போரை, எடுத்திடு வாளை, தந்திடு உன்சாவை.....

பானுகோபான்: **(வாளை எடுத்து வீரவாகு மீது வீசுதல்)** வீரவாகுவும் வாள் எடுத்து போர் புரிதல்.

**(வாள் போர் நடக்கிறது)**

**(பானுகோபன் இறத்தல்)**

சூரன்: என்மகனே பானுகோபா... நீ இறந்துவிட்டாயா? என் செல்வமே,.. அசுரகுலத்து இளம் நாயகனே... என் தெள்ளமுதே... உன்னை இழந்து நான் என்னடா செய்யப்போகிறேன்...

**(சிங்கமுகன் வருதல்)**

சிங்கமுகன்: அண்ணா பிள்ளைகளை இழந்தோம், மந்திரிமார் களையும் இழந்தோம், சேனாதி பதிகளையும், சுற்றத் தவர்களையும் இழந்துவிட்டோம். ஏன் அசுரர்குலமே அழிந்துவிட்டது... இனி அதிகம் பேசிப் பயன் இல்லை.

பகைவரை போர்செய்து கொன்று தின்பேன். முருகக் கடவுளை வென்றேன் என்றால் நான் இங்கே வருவேன்,... இல்லையேல் இறப்பேன்... நீ வந்து கான்... போர்... போர்...

---

**(சிங்கமுகன் போருக்கு வருதல்)**

சிங்கமுகன்: வீரபாகு! உன்னுடைய வலிமையையும், உன்னுடைய தலைவனாகிய முருகனுடைய வலிமையையும், சேனைகளின் வலிமையையும், தேவர்கள் மற்றும் இலக்கத்தெட்டு வீரர்களின் வலிமையையும் நான் அறிவேன்... உங்கள் அனைவரினதும் உயிரைப் பறிப்பேன், உதிரம் குடிப்பேன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(சிங்கமுகன் சூலத்தை வீசினான்)**
**(வீரபாகு சூலத்தைத் தடுத்து)**

வீரபாகு: அரக்கனே என்னை யாரென்று நினைத்தாய், அஞ்சாது செயல்முடிக்கும் வீரவாகுவடா நான்... வீரவாகு... கடவுளின் பெருமை அறியாக்கசடனே... ஆணவத் திமிர் பிடித்தலையும் அற்பனே... பூமியை நாசம் செய்ய வந்த பூதனே... உன்னையும், அசுரர் குலத்தையும் அழிக்காது முருகக்கடவுள் ஓய மாட்டார்...

சிங்கமுகன்: **(கோபமாகச் சிரித்து)** வீரபாகு வித்தையா கட்டுகிறாய்,.. கைக்கூலியே தொலைந்து போ... **(சிங்கமுகன் தண்டாயுதத்தை வீசினான். வீரபாகு மயங்கி விழுதல். முருகன் தோன்றுதல்)**
**(மயங்கி விழுந்த வீரபாகு மயக்கம் தெளிதல்)**

முருகன் : சிங்கமுகா....

சிங்கமுகன்: சிவகுமாரனே!... பகைவருடைய வலிமையைக் கெடுத்தல் அரசநெறிதானே, ஆதலால் தேவர்களை நாம் தண்டித்தோம்... நீங்கள் எங்கள் பகைவர் அல்ல, அப்படியிருந்தும் ஏன் எம்முடன் போர்செய்ய வந்தீர்கள்.

முருகன்: எளியவனை வலியவன் வருத்தினால், வலியவனைத் தண்டித்தல் இறைமைத் தொழிலைச் செய்யும் எம்கடமை... போர் செய்தலும் அதற்காவே...

சிங்கமுகன்: **(சிரித்து)** கடப்பமாலையை அணிந்த சிறுவனே! சிவபிரான் தந்த வேற்படையின் வலிமையையும், உனது வலிமையையும், பிறர் வலிமையையும் நான் அறிவேன்... தாரகனைப்போல் போரில் பேதை அல்லன் நான்... தொடங்கு உன் போரை...

அசரீரி: போர்... முருகனுக்கும் சிங்கமுகனுக்கும் நடந்தது போர் அல்ல... பிரளயம்... சிங்கமுகன் இறந்தான்,
**(சிங்கமுகன் இறந்த செய்திகேட்ட சூரபத்மன் கதறி அழுதான்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரன்: என் தம்பியே சிங்கமுகா! அசுரர் தாயே, அசுரருக்கு அருள் செய்யும் ஆண்டகையே... ஈசன் மைந்தன் உன்னைக் கொன்றுவிட்டானே... பொன்னைப் பெறலாம், பூமியைப்பெறலாம், புதல்வர்களைப் பெற லாம், மற்றைப் பொருள்களைப் பெறலாம், என் தம்பியே! இறப்பில் உன்னை இனியான் பெறுவேனோ! **(சூரன் போருக்கு செல்லல்)**

சூரன்: **(போர்க்கோலம் பூண்ட நிலையில் கோபாவேசத்தோடு. உக்கிரமாக)** வீரவாகு நீ எனது மகேந்திரபுரத்தை அழித்தாய்... எண்ணற்ற என் சுற்றத்தையும், சேனைகளையும் சிதைத்தாய். என் மைந்தர்களையும் சகோதரர்களையும் கொன்றாய். இன்று உன் உயிரைப் போக்குவேன். முருகன் போரை முடிப்பேன்..

வீரவாகு: **(கோபத்தோடு வேலை கையில் எடுத்து)** சூரபபத்மா கனவு காணாதே... வந்திருப்பவர் வலிமையை நீ அறிய வில்லை முட்டாள்.. **(என்று கூறியபடி வேலை எடுத்து சூரன் மீது வீசுதல்)**

சூரன்: **(ஏளனமாகச் சிரித்தபடி வீரவாகு வீசிய வேலை தனது தண்டாயுதத்தால் கட்டிவிட்டு)** பொடிப்பயலே என்னை யாரென்று நினைத்தாய்.. உன் செப்படி வித்தைகளால் என்னை அசைக்க முடியாதடா...

வீரவாகு: **(தண்டாயுதத்தை சூரன் மீது வீசியபடி)** ஆத்திரத்தில் அறிவிழந்த அற்பனே இதிலிருந்து நீ தப்பமுடியாது. ஆழிந்து போவாய்... உன் மத்தனே...

சூரன்: **(ஆத்திரங்கொண்டு தண்டாயுதத்தை வீரவாகு மீது வீசியபடி)** எந்தப் பரமனாலும் என்னை அசைக்க முடியாது! இந்தா தொலைந்தாய்... **(தண்டாயுதம் வீர வாகுவின் மார்பைத் தாக்குதல்)**

வீரவாகு: ஆ.. **(இரத்தம் வடிய வீரவாகு மயங்கிவிழுதல்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரன்: **(வெற்றிச் சிரிப்புடன்)** அழிந்தான் வீரவாகு. அடுத்தவன் யாரடா... இது தான் சூரனின் போர்.

**(முருகன் தோன்றுதல்) வீரவாகு மயக்கம் தெளிதல்) தேவர்கள் ஆரவாரம். மேடையில் செந்நிற ஒளி)**

சூரபத்மன்: பாலகனே! என்னை நீ கிரவுஞ்சமலை என்றோ தாரகன் என்றோ எண்ணாதே. இக்கணமே உன்னை அழிப் பேன். ஆனால், பிரமதேவனும், திருமாலும், இந்திரனும், உமாதேவியாரும் வருந்தக்கூடாது என்ப தற்காக உன்னை விடுகிறேன். தப்பிப்போ...

முருகன்: **(புன் சிரிப்புடன்)** சூரனே கேள்! நீ பெற்ற வெற்றிகள் நிலையானதல்ல. உன் உடல் வலிமையும் நிலையான தல்ல. உன் மேன்மை, புகழ், செருக்கு, அகங்காரமும் நிலையானதல்ல. உன் எண்ணில்லாப் படை, யாரா லுமே அழிக்க முடியாத வரம். சேனா சமுத் திரங்களும் நிலையானதல்ல. அகந்தை கொள்ளாதே அழியப் போகிறாய்.

சூரன்: பாலகனே என்னை நீ அறியவில்லை. உன் தந்தை ஈசனாலும் என்னை அழிக்கமுடியாது என்ற வரத்தைப் பெற்றதையும் நீ அறிந்திருக்கவில்லை. என் வீரதீர பராக்கிரமங்களையும் நீ கேள்விப்படவில்லை. பாலகனான படியால் என்னை எதிர்க்க வந்திருக்கிறாய்.

முருகன்: தர்மத்தைக் காக்கவும், அதர்மத்தை அழிக்கவும், படைக்கப்பட்ட சிவனின் மைந்தன் நான். உன்னை அழிக்க வந்திருக்கிறேன். எங்கே உன் வீரத்தைக் காட்டு.

பின்னணிக்குரல்:**(போர் உக்கிரமான போர்... சூரன் தனது வில்லை வளைத்து பாணங்களை விட்டான். முருகக் கடவுளும் வில்லை வளைத்து பாணங்களைச் செலுத்தினார். சூரன் பெரிய சூலங்களை ஏவி முருகப் பெருமான் விட்ட பாணங்களைத் தடுத்தான். முருகக் கடவுள் வேறு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாணங்களை விட்டார். முருகன் அம்பு விடுதல்... சூரன் பதில் அம்பு விடுதல்.)

முருகன்: சூரபத்மா இதோ உன் தேர் அழிந்தது.. உன் படையும் பின்வாங்குகிறது. அடுத்து என்ன செய்யப்போகிறாய்.

சூரன்: (சூரன் ஆவேசமாகச் சிரித்தல்) மாயப்போர் புரிதல் மறைந்து மறைந்து தோன்றுதல்
(முருகன் பாணம் விடுதல்)

முருகன்: சூரனே இதோ உன் கிரீடமும் தொலைந்தது. சூரனே கேள்.. நான் அனுப்பிய தூதுவனையும் நீ மதிக்க வில்லை. தாரகனை அழித்தேன். சிங்கமுகனை அழித்தேன் பானுகோபனை அழித்தேன் உன் சேனை படைகளையும் அழித்துவிட்டேன். நீ இப்போது ஆயுதமின்றி நிற்கிறாய். தேவர்களை சிறையிலிருந்து விடு, உன்னை மன்னிக்கிறேன். நன்றாக யோசி. இன்று போய் நாளை வா. நல்ல முடிவோடு வா.

காட்சி: 04

(சூரன் போர்க்களத்தில் வருதல்) பெரும் போர் ஒலிகள்

சூரன் : (கோபம் கொண்டு) முருகா என்னுடைய சேனை படைகளை கொன்றாய். என் அசுரர் குலத்தையே அழித்தாய்.. உன்னை பாலன் என்று பாராமல் கொல் வேன். தேவர்களையும், பூதர்களையும் அழிப்பேன். அழிப்பேன்.

முருகன்: சூரபத்மா நீ திருந்தவே மாட்டாய்.
(வேலாயுதத்தைத் தூக்கி சூரன் மீது ஏவினார்.)
உன்மத்தனே எனியும் உன்னை விட்டுவைக்கக்கூடாது.
அழிந்தான் சூரன். (அண்டங்கள் அதிர்ந்தன)
(சூரன் விழுதல் சேவலும் மயிலும் தோன்றுதல்)

முற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடுகல் பேசும்

### காட்சி 01

**இடம் : இலங்கைக் கடல்**

பாத்திரம் **: மீனவர் இருவர் கடலில் வீசிய வலையை இழுத்தல்:**

**மீனவன் 01:** அண்ணை வலை பாறையிலை சிக்கிப்போட்டுது. இழுக்க முடியாமல் இருக்குது.

**மீனவன் 02:**என்ன சொல்றாய். படகை முன்னுக்கு ஓட்டுறன். வலையை இழுத்துப்பார்.

**மீனவன் 01:** ஐயோ அண்ணை பாரமா ஏதோ இழுபட்டு வருது.

**மீனவன் 02:** ஓம் தம்பி பெட்டி மாதிரித் தெரியுது பலமா இழு..

**மீனவன் 01:** ம...அண்ணை கிட்ட வருது, படகை நிப்பாட்டுங்கோ பெட்டி... மேலை வந்திட்டுது.

**மீனவன் 02:**தண்ணிக்கை கிடந்து பெட்டி கறள் பிடிச்சுப் போச்சு...பெரிய பூட்டும் பூட்டியிருக்குது.

**மீனவன் 01:**அண்ணை கனகாலமாக் கிடக்குது போல, பூட்டை உடைச்சுப் பாப்பம்...

**(உடைச்சுப் பார்த்தல் பூட்டு உடையவில்லை)**

**மீனவன் 02:**பூட்டும் உடையாதாம்...சரி கிடக்கட்டும் சம்மாட்டி யாரிட்டைக்காட்டுவம்..படகைக் கரைக்கு விடுவம்.

**கடற்கரையில்.....**

பாத்திரங்கள் **:- மீனவன், சம்மாட்டி, பண்டிதர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மீனவன் 01 பெட்டியைச் சுமந்து கொண்டு வருதல்)

**மீனவன் 02:** சம்மாட்டியார் பெரிய பெட்டியொன்று வலையில் பட்டுது....

**சம்மாட்டி:** என்ன பெட்டியடா இப்பிடி வை.... உடைச்சுப் பாப்பம்... கொண்டுவா சுத்தியலை....

**மீனவன் 01:**(சுத்தியலைக் கொண்டுவந்து சம்மாட்டியாரிட்டைக் கொடுத்தல்) இந்தாங்கோ சுட்டியல்

**மீனவன் 02:** சம்மாட்டியார் உடையுங்கோவன்...

**சம்மாட்டியார்:** (ஓங்கி அடித்தபடி) உடைக்க முடியேல்லை... எல்லாம் துருப்பிடிச்சுப்போச்சுது.....

**மீனவன் 01:** ஓம் சம்மாட்டியார்...

**சம்மாட்டியார்:** பல வருசமாக கடலுக்கை கிடந்திருக்கு, உடைக்கவும் ஏலாமல் இருக்கு.. ஆ.. அதோ எங்கட பண்டிதர் வாறார், அவரிட்டை பெட்டியைக் காட்டுவம்..

**பண்டிதர்:** என்ன பாவிலுச் சம்மாட்டி பெரிய தகரப் பெட்டியோடை,

**சம்மாட்டி:** வலையில பட்டது பண்டிதர் ஐயா... உள்ளுக்கை என்ன கிடக்குதெண்டே தெரியேல்லை... உடைக்கவும் முடியாமல் இருக்குது..

**பண்டிதர்:** அலவாங்கைக் கொண்டு வாங்கோ... உடைச்சுப் பாப்பம்..(அலவாங்கால் நெம்ப பெட்டி களண்டு விட்டது)

**சம்மாட்டி:** ஆ...என்ன பண்டிதர் இது.... தண்ணி போகாமல் பொதி செய்யப்பட்டிருக்குது...(பண்டிதர் எடுத்துப் பார்த்து)

**பண்டிதர்:** ஏட்டுச்சுவடு, பழைய ஏட்டுச்சுவடு...(பண்டிதர் வாசித்தல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் சரிதம் சொல்வதென்றால் தசையெல்லாம் ஆடுதையோ! திசையெட்டும் புகழ் சேர்த்த தென்னிலங்கைக் கோமான், திராவிடரின் மூதாதை! பழந்தமிழின் பால் பற்றுதலை வைத்த நம் பாட்டன், கண்ணுக்குள் பாவைபோல் இலங்கைத்தீவு, கருவிழிதான் ஆழ் கடல்கள்! தமிழ் மண்ணுக்குப் புகழ் தந்த பெருவீரன், உருவில் சிங்கம், உள்ளம் தங்கம்! யாழ்ப் பண்ணுக்கு யாரும் நிகரில்லையென வாழ்ந்த யாழ்ப்பாணத் திருநாட்டான் .. மலைத் தமிழன்.. மன்னுயிர் காப்பதுவே மாந்தமிழர் இலக்கணமாம் எனக்கூறும் தென்னிலங்கைப் பெருங்குடியின் வழிகாட்டி, தன்மானச் சுடர்விளக்கு! தமிழர் தலைவன் எந்நாளும் புகளேட்டில் வாழுகின்ற... மாமன்னன்......

குஞ்சரம் பொருத மார்பும்
குன்றினை எடுத்த தோழும்
நெஞ்சினை அள்ளும் வீணை
நெடுகரம் பிசைத்த கையும்
அஞ்சுதலென் ணெண்ணத்து அண்ணலாம்
அந்த மாவீரன்... மறத்தமிழன்...

## காட்சி 02

**இடம்:—இராவணன் சபை**
**பாத்திரங்கள்:- இராவணன், விபீசணன்...**
**(இராவணன் வந்துகொண்டே...)**

**இராவணன்:** கடல் மேவிவந்து நாட்டை அழித்தாலும்,உடல் மீது ஊசிகளாய் பாணங்கள் துழைத்தாலும், குருதி ஆற்றிலே உடல் மிதக்கும் இறுதியே நேர்ந்தாலும், கலங்கமாட்டேன் இந்த மண் இலங்கை மண்...

**விபீசணன்:** அண்ணா வந்திருப்பவர் இராமபிரான், அந்தத் தெய்வத்தின் மனைவியை நீங்கள் அபகரித்து வந்துள்ளீர்கள்... அது தங்கள் புகழுக்கு பங்கமானது அண்ணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராவணன்:** தம்பி சினத்தைத் தூண்டாதே, சிறை செய்து வந்திருக்கிறேன், அவளை முறைகெட்ட நோக்கோடு முயங்குவதற்கல்ல..

**விபீசணன்:** மாற்றான் மனைவியைக் கடத்தி வந்தமைக்கு எந்தக்காரணமும் கூற முடியாது அண்ணா அது பிழைதானே....

**இராவணன்:** தாடகை மாண்டது சரி, தங்கையின் வனத்திற்குள் கள்ளமாக வந்தவர்கள் அவள் நாசியையும் நகிலையும் அறுத்தது சரி, ஆனால் சீதையை சிறை செய்தது மட்டும் பிழை.. அப்படித்தானே விபீசணா....

**விபீசணன்:** அண்ணா எங்கள் சகோதரி பிழையேதும் விட்டிருப்பாள்..

**இராவணன்:** (கோபமாக) வேங்கை மரத்துப் புல்லுருவி நிறுத்தடா உன் பேச்சை...எங்கள் சகோதரியையா குறை கூறுகிறாய்...

**விபீசணன்:** அண்ணா ஆத்திரத்தில் அறிவிழக்காதீர்கள்... இராம இலக்குவர்கள் மிகவும் பலம் பொருந்தியவர்கள், தெய்வாம்சம் படைத்தவர்கள், அவர்களைப் பகைத்து நாம் என்ன செய்வது...

**இராவணன்:** (கோபமாக சிரித்து) விபீசணா நகிலரிந்து முத்திரை குத்தியவன் தலை இங்கே சரிய வேண்டும், அதற்காகவே இந்தச் சிறை இதிலே என்னடா கண்டாய் குறை...

**விபீசணன்:** அண்ணா குறையொன்றும் பேச நானிங்கு வரவில்லை, எம் குலம் தழைக்கும் வழியைத்தான் கூறுகிறேன் இராமபிரான் கடவுள் அதை மறக்கவேண்டாம்.... அவர்களைப் பகைக்க வேண்டாம்.

**இராவணன்:** (ஆத்திரம் கொண்டு) அவன் யாராக இருந்தாலும் நான் அஞ்சமாட்டேன், ஈசனிடமே வாளைப் பெற்றவன் நான்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னையா எதிர்க்கத் துணிந்தான் அந்தப் பேடி இராமன்.

**விபீசணன்:** அண்ணா ஆத்திரம் உங்கள் கண்ணையே மறைக்கின்றது, உங்கள் செயல் எங்கள் வம்சத்தையே அழிக்கப் போகிறது... இலங்காபுரி சாம்பல் மேடாகப் போகின்றது.

**இராவணன்:** விபீசணா கோபத்தைக் கிளறாதே.. வால் நீட்டி எரித்த கதையை நீ சொல்கிறாய், தோள் தட்டி சமர்செய்யும் வீரத்தைப் பற்றி நான் கூறுகிறேன்..

**விபீசணன்:** அண்ணா சீதையை ஒப்படைப்போம் இராமபிரானிடம் நடந்தவற்றிற்கு மன்னிப்புக் கேட்போம்... படை திரட்டிப்பயனில்லை, எம் தேசம் பாழாகும் அண்ணா

**இராவணன்:** **(ஆத்திரம் கொண்டு)** கோழையே நீ என்னடா பேசுகிறாய். நூறு யானை பலம் கொண்ட என்னையா மன்னிப்புக் கேட்கச் சொல்கிறாய். சங்கரனிடம் வாளைப் பெற்றேன். வெள்ளிமலையைப் பெயர்தெடுத்து என் தாய்க்கு சமர்ப்பணம் செய்தேன். அந்த வரலாறுகளை நீ மறந்துவிட்டாயா?

**விபீசனன்:** அண்ணா உங்களை வரலாறு இகழப்போகிறது.

**இராவணன்:** பொய்களால் வரைந்த வரலாறு- இகழட்டும்.. புழுதி வாரித் தூற்றட்டும்.. கலங்கேன். நீ போகலாம். கொஞ்சம் நில். கூரிய கணைபட்டு ஒரு வேளை, நான் போரிலே மாளலாம். வானரத் தம்பி பெற்ற வாழ்வை கூனிய அறத்தோனே நீயும் காணலாம். உண்மை வரலாறு பொய்மைக் கதைகளுக்கு சிறைப்பட்டுப் போகலாம். ஆனால், மானவீரர் எனக்கமைக்கும் நடுகல் ஒரு நாள் பேசும். உண்மையைப் பேசும். அந்த நாள் நீ இகழப்படுவாய். வண்ண முடிச்சுகம் காண அண்ணனைக் கொன்றவன் நீயென்று இகழப்படுவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விபீசணன்:** இகழப்படமாட்டோம் அண்ணா சமாதானமாகப் போனால் போற்றப்படுவோம்.ஆட்சியை மீளப்பெறு வோம்.

**இராவணன்:** நிறுத்தடா துரோகக் கும்பலின் துணைவனே. ஓடிப்போ வேவுக்காறனின் வேலைக்காறனே. நீ யாரை வல்லவனென்றும், வலியனென்றும், வாய் இழிக்க வாழ்த்தினாயோ அந்த இராமனின் கும்பலுக்கு பாடம் புகட்டுவேன்.

**விபீசணன்:** அண்ணா போர் வேண்டாம். அவர்களிடம் சரணடைவோம். நாட்டைப் பாதுகாப்போம்.

**இராவணன்:** குலங்கெடுக்க வந்தவனே, கோடரிக் காம்பே, கொடிய உன் நாக்கை அறுத்தெறியாமல் இருந்ததிற்கு நன்றி சொல், போ, நீ போ..

**விபீசணன்:** அண்ணா தரணியில் தங்கள் புகழ்...

**இராவணன்:** நஞ்சிட்டுக் கொல்ல நீயிருக்கும்போது வேண்டாம் நீ போ.

**விபீசணன்:** அண்ணா

**இராவணன்:** போ, போ.. இங்கிருந்து போய்விடு.
(விபீசணன் வெளியேறுதல்)
**(இராவணன் சிந்தனை வயப்பட்டவனாக அங்குமிங்கும் நடத்தல். கும்பகர்ணன் அண்ணனைத் தேடி வருதல்)**

**கும்பகர்ணன்:** வெள்ளி மலை எடுத்த வீரத்தமிழனே சுள்ளியில் உறங்கும் குரங்கினத்தின் தோள் வலிமையை எள்ளி நகைத்து போராட வேண்டிய நீ தன்னந் தனியனாய் தவிக்கும் மனதுடன் நிற்க காரணம் என்ன? உங்கள்வாழ்க்கையில் வேண்டாதது நடந்துவிட்டதா? விரும்பாதது நிகழ்ந்துவிட்டதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராவணன்:** தம்பி கும்பகர்ணா கூடிப்பிறந்தவனே கூட்டுப்பாலைஉண்டவனே. மடை திறந்த வெள்ளம் போல் பகைவர் படை நெருங்குதடா.. உரங்கொண்டு போராடி உதிரத்தே நீராடி திடம்பெற்ற திராவிடர் கூட்டத்தில், எம் கடைக்குட்டித் தம்பி விபீசணன், பகைவர்களின் கைக்கூலி ஆகிவிட்டான்.

**கும்பகர்ணன்:** அண்ணா எம் கடைக்குட்டி தம்பி குலங்கெட்டுப் போனான் தரங்கெட்ட அவன் பேச்சை விடுங்கள். கடை கட்டி வாழுகின்ற துரோகி அல்ல நான்,உங்கள் இடையில் தொங்கும் போர் வாள் உங்கள் உடல் காக்கும் கவசம், கலங்காதீர்கள்.. வனவாசம் வந்தவன் எம் மண்வாசம் நுகரவிடமாட்டேன். அவனையும் அவன் கூட்டத்தையும் சிரசறுத்து சிங்காரத் திருநாட்டின் புகழை உயர்த்துவேன்.

**இராவணன்: (கண்கள் பனிக்க)** தம்பி கும்பகர்ணா மலையை நிகர்த்தவனே, குணக் குன்றே உன்னை நிகர்த்தவன் உலகில் யாருமில்லை.

**கும்பகர்ணன்:(அண்ணனை வணங்கி)** நெய்பூசித் தலைவாரி அறுசுவை உணவூட்டி என்னை வளர்த்தெடுத்த அன்புத் தெய்வமே.. மாற்றாரின் போர் முரசம் அதிர, அதைக் கேட்டுத் தினவெடுத்த தோள்களுக்கு வெற்றிக் கவசம் அணிந்துவிடும் தாங்கள் ஏன் தயங்குகிறீர்கள் கவசத்தை அணிந்துவிடுங்கள்..(இராவணன் கவசத்தைக் கும்பகர்ணனுக்கு அணிந்துவிடுதல்) தென்னவன் பிறந்தநாடு, வல்லவர் வாழ்ந்த நாடு அண்ணனாம் இராவணேஸ்வரன் யாழிசை மீட்டு கொடி ஏற்றிவைத்த நாட, குள்ளநரிக் கும்பலின் பாதம் படவைப்பதா....? விட மாட்டேன் அவர்களின் கொட்டத்தை அடக்குவேன் **(போருக்குப் புறப்படுதல்)**

**மேகநாதன்:** தந்தையே. மாதரில் சிறந்த மண்டோதரியின் மணி வயிற்றிலே. மைந்தனாகப் பிறந்து.வீரமா நகரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரருள் வீரனாக வளர்ந்த என்னை ஏன் போருக்கு அனுப்ப மறந்தீர்கள்.

**இராவணன்:** மேகநாதா, வில்லின் செல்வனே. புடம் போட்ட பொன்னே, நான் பெற்றெடுத்த கண்ணே போருக்குப் போய்வா, வேதியர் கும்பலை பொடிப் பொடியாக்கு, புறப்படு.

**மேகநாதன்:** தந்தையே.... தினவெடுத்த எம் தோள்களைத் தேடிவருகிறது பகைவர் கூட்டம் வால் நீட்டி எரிக்க வந்தவனின் வால்நறுக்கி ஓடவைத்தவன் நான் தேவலோகத்து இந்திரனைப் போரில் வென்றேன். தாய் நாடு காப்பதற்கு என் தலைதருவேன்..... தந்தையின் மானங்காக்க உயிர் தருவேன் இலங்கை மண் காக்க எம் குலத்தையே தருவேன்.

**(மேகநாதன் போருக்குப் புறப்படல்)**

**இராவணன்:** (போர்க் கோலம் பூணுதல்)

என்னருமை வீரர்களே, ஏற்றங்கொண்ட தோழர்களே . எம் மண்ணை அபகரிக்க எத்தர் படை திரண்டு வந்துள்ளனர் எம் தேசத்தை நாசம் செய்ய வந்துள்ளனர். பண்பிளந்தோர், எத்திப்பிழைப்போர், அவர்களை நத்திக்கிடப்போர், அவர்களுக்கு சாமரம் வீசுகின்றனர் அனைவரையும் அரை நொடியில் அழித்துவிடப் போர்க்களம் புறப்படுகிறேன். போர்-

**பி.குரல்:** போர் இராவணனுக்கும் இராமனுக்கும் நடந்த போர் இருவரும் சமமாகப் போரிட்டனர். இருவரும் அம்பை வீசுகின்றனர். பின்னால் வந்த அம்புபட்டு இராவணன் சாய்கின்றான்.

கொன்றவன் யார்?.. வேறு உயிரில்லை அங்கு போரில் இழப்பதற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சங்கிலியன்"

காட்சி:01

**இடம்: நல்லூர் இராசதானி**

**பாத்திரங்கள் : சங்கிலியன், காக்கை வன்னியன், வீரமாணிக்க தேவன், அப்பாமுதலி**

யாழ்ப்பாண இராட்சியம் மீது வெள்ளையர்கள் ஆக்கிரமிக்கத் துடிக்கும் நேரமது சங்கிலியன் போர் ஆயத்தம் செய்கிறான்.

**சங்கிலியன்:** வீரர்களே இமயக்கல்லை வீரம் செறிந்த கனகவிஜயர் தலையிலே சுமத்திய தமிழ்க் குலத்துக்காளைகளே. அன்னமிட்டோம் ஆனால் கன்னமிட்டார்கள் அந்நியர்கள், அறம் வளர்த்த நாட்டிலே மறம் தாண்டவ மாடுவதா, பெற்று வளர்த்து பாலூட்டி தாலாட்டிய தாய்த்திரு நாட்டை பழிகாறன் பாதங்கள் தீண்டுவதா, உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லா ஆண்மைத் தோழர்களே போர்க்களம் செல்லத் தயாராகுங்கள்.வாழ்வா அல்லது சாவா, வெற்றியா அல்லது வீர மரணமா, ஏர் பிடிக்கும் செங்கரங்கள் என ஏமாந்த கூட்டத்திற்கு இது வாள்பிடிக்கும் வன்கரங்கள் என படைமுகத்தே காட்டுவோம். மறத்தமிழ் வீரர்களே அணி அணியாகத் தயாராகுங்கள், வெற்றிவாகை சூடுவோம்..காக்கை வன்னியா விரைந்து செயல்படுங்கள்...

**கா.வன்னியன்:** மாமன்னா போருக்குத் தயாராய் இருப்போம், படையினரைத் தயார் செய்வோம்.. பகைவர்களின் படைப்பலத்தை நான் கண்காணிக்கின்றேன்.

**சங்கிலியன்:**: வீரமாணிக்க தேவா, நீ என்ன சொல்கிறாய்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீ.மா.தேவன்:** மன்னா பரந்திருக்கும் போர்வீரர்களை ஒன்று சேர்த்து அணிகளைப் பிரிப்போம், ஆயுதசாலைகளை நிரப்புவோம்.. அத்தோடு களஞ்சியங்களையும் நிரப்புவோம்..

**சங்கிலியன்:** அப்பா முதலியாரே ஏன் மௌனமாக இருக்கிறீர்கள்

**அப்பாமுதலி:** மன்னர் மன்னா சகலதையும் நிறைவேற்றுவதே எமது பணி.. மக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை நான் பார்த்துக்கொள்கிறேன்.

**சங்கிலியன்:** இன்றிலிருந்து போருக்கான ஆயத்தங்களைச் செய்யுங்கள், விரைந்து செயற்படுங்கள..வெற்றி அல்லது மரணம்..

காட்சி:02

**இடம்:அடர்ந்தகாடு**

**(வீரமாணிக்க தேவன் குதிரையில் வருதல். காக்கை வன்னியனும் வீரநாயக்கனும் சதித்திட்டத்துடன் வீரமாணிக்க தேவரை எதிர்கொள்ளல்)**

**(காக்கை வன்னியனும், வீரமாணிக்க தேவனும் உரையாடுதல், வீரநாயக்கன் பற்றைக்குள் மறைந்திருத்தல்)**

**கா.வன்னியன்:** தளபதி

**வீர.தேவன்:** சிற்றரசே எங்கிருந்து இந்தநேரத்தில் இம் மார்க்கமாக வருகிறீர்கள்..

**காவன்னியன்**: வேந்தனைப் பார்க்க வந்தேன்,அவர் குமரக்கோட்டம் சென்றதாக அறிந்தேன், ஆதலால் இத்திசையாக வந்தேன். தளபதியாரே தங்களுடன் மிக முக்கியமான விடயமொன்று ஆலோசிக்க வேண்டும்.

**வீர.தேவன்:** என்னுடனா அப்படி முக்கியமான காரியம் என்னதான் இருக்கிறதோ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கா.வன்னியன்:** நாட்டை நேசிக்கும் வீரனான தங்களை வேந்தன் சந்தேகக் கண்களுடன்.

**வீர.தேவன்:** நெஞ்சுரமற்றோனுக்கு வாளும், நீதி உரைக்கத் தெரியாதவனுக்குச் சட்டமும் பதவி மோகக்காறனுக்கு இன உணர்ச்சியும் ஆபத்தானவை. வேந்தன் எதையும் கூறட்டும், எனது பதவியையும் பொறுப்பையும், உதாசீனம் செய்ய மாட்டேன்...

**கா.வன்னியன்:** வீரமாணிக்க தேவரே கள்ளம் கபடமற்ற தங்கள் உள்ளத்தை சோதிப்பதற்காக நான் கூறிய அலட்சிய வார்த்தைகள் அவற்றை

**வீர.தேவன்:** நடைபெறப்போகும் சம்பவங்களின் எதிரொலிதான் இந்த அலட்சியவார்த்தைகள்..

**கா.வன்னியன்:** என் மீது சந்தேகமா?

**வீர.தேவன்:** சந்தர்ப்பவாதிகளைச் சந்தேகிக்காமல் பகுத்தறிவு வாதிகளையா சந்தேகிப்பது.

**கா.வன்னியன்:** அந்தப் பகுத்தறிவைப் பரிசீலிக்கும் படிதான் தங்களைக் கேட்கிறேன்.

**வீர.தேவன்:** பகுத்தறிவை பரிசீலித்தபடியால் தான் தமிழன் என்றொரு இனமுண்டு என்பதையும், தனியே அதற்கொரு குணமுண்டு என்பதையும் இன்றுவரை காத்துவருகிறோம்..

**கா.வன்னியன்:** அந்நியருடன் நாம் ஏன் கலந்து வாழக் கூடாது.

**வீர.தேவன்:** கல்லோடு கல் சேர்த்து கனல் கண்ட கற்காலம் முதல், மண்விட்டு விண்ணின்று மாயப்போர் செய்யும் இக்காலம் வரை தனிமையில் தரணியாண்ட தமிழன் இனிமேலும் பிணைந்து வாழ முடியுமா?

**கா.வன்னியன்:** வீரமாணிக்கதேவா.. நீ அளவுக்கு அதிகமாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுகிறாய்.. ஏன் சேர்ந்து வாழக்கூடாதுதா?

**வீர.தேவன்:** எமக்கொரு வரலாறு உண்டு, அந்த வரலாறுகளை நீங்கள் மறந்துவிடாதீர்கள்....

**கா.வன்னியன்:** வீரமாணிக்கதேவா முதலில் உன் வாய்ப்பேச்சை நிறுத்து

**வீர.தேவன்:** காக்கைவன்னியா பேச்சோடு செயலும் என்னிட முண்டு.

**கா.வன்னியன்:** நான் சிற்றரசன் நீ தளபதி மறந்துவிடாதே..

**வீர.தேவன்:** அது பதவியில், செயலில் அல்ல.

**கா.வன்னியன்:** நான் வாள் வீச்சில் வல்லவன்..

**வீர.தேவன்:** நான் வாள் வீச்சோடு, வாள் தடுப்பதிலும் வல்லவன்.

**கா.வன்னியன்:** நான் இட்ட ஆணையை நீ செய்பவன்.

**வீர.தேவன்:** உன் உதவாக்கரை ஆணையை நான் ஏற்கமாட்டேன்..

**கா.வன்னியன்:** வாள் போரில் ஆசையிருந்தால். (வாளை எடுத்து வீசுகிறான்)

**வீர.தேவன்:** பார்ப்போம்..(**வீரமாணிக்கதேவனும் தடுத்துப்போர் புரிகிறான்.... காக்கை வன்னியன் வாள் வீழ்ந்த நிலையில் பின்பக்கம் பார்க்கிறான் மறைவிலிருந்து எதிர்ப்பட்ட வீரமாணிக்க தேவரின் முதுகில் குத்துகிறான்.**)

**வீர.தேவன்:** (**காயம்பட்ட நிலையில்**) ஆ.. தாழ்ந்த தமிழினமெ சதிகாறக் கும்பலே, பதவி மயக்கத்தின் பரிசு இதுதானா, சத்தியத்திற்குச் செய்யும் பாத காணிக்கை இதுதானா.. அல்லுறும் தமிழினத்திற்கு ஆலகால விசத்தை ஊட்டி அக்குவேறு ஆணிவேறாகப் போட்ட சதித்திட்டம் இதுதானா? காக்கைவன்னியா வஞ்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்க்கும் வெள்ளையரின் வாசாலங்காரத்தில் மதிமயங்கி இனத்தை அழிக்கும் தனிப்பெரும் தலைவன் நீதானா? உன் கரத்தால் உனது வாளை என்மீது பாச்சியிருந்தால் இனக்கத்தி பாய்ந்ததே என்று எண்ணி நிம்மதியாக இறந்திருப்பேன்... என்ன செய்வது முதுகில் குத்தவைத்துவிட்டாய்... வீரவேந்தே சங்கிலிமன்னா உன் ஆபத்துக்காலத்தில் என் ஆவி பிரிகிறதே...

காட்சி:03

**இடம்: அரண்மனை அந்தப்புரத்து நந்தவனம்**

**பாத்திரங்கள்:** அப்பாமுதலியின் மகள் வானதி நந்தவனத்தில் **உலாவுதல்.காக்கை வன்னியன்** மது போதையுடன் **கள்ளத்தனமாக உள்ளே புகுதல்)**

**கா.வன்னியன்:** உள்ளே வரலாமா..

**வானதி:** ஏ... நீ ஏன் இங்கு வந்தாய்..

**கா.வன்னியன்:** உன்னைத் தேடித்தான் வந்தேன் வானதி..

**வானதி:** ஏன் எதற்காக என்னைத் தேடிவந்தாய்..

**கா.வன்னியன்:** உன் காதலன் வீரமாணிக்க தேவனை எங்கு தேடியும் காணவில்லை, உனக்கு ஏதாவது தெரிந்திருக்கும் என்று தான் கேட்க வந்தேன்..

**வானதி:** அவர் தக்க நேரத்தில் வருவார், நீ நடையைக் கட்டு..

**கா.வன்னியன்:** நான் நடையைக் கட்ட வரவில்லை, உன் உடலை கட்ட வந்துள்ளேன்.. **(காக்கைவன்னியன் வானதியை கட்டியணைக்க முயலுதல்)**

**வானதி:** மோசக்காறா, உன்மத்தனே... கிட்டவராதே...

**கா.வன்னியன்:** அப்படிப் பேசாதே கண்ணே தண் வெண்ணம் நிலவு, விண்ணெணணன்னும் தாமரை தருமின்பம் பலகோடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகா கற்பனைத் தேரிலே சிற்பமாய் தவழும் பொற்புடைப் பெண்ணே உன் அற்புதக் கோலம் காண்பதற்கு என் விழிகள் போதாதென்பேன்.

**வானதி:** உனக்கு பித்தம் தலைக்கேறிவிட்டதா.. நீசனே இங்கிருந்து போய்விடு..

**கா.வன்னியன்:** (அவளை நெருங்கியபடி)
சிரித்திட்டாய், சித்தத்தை எரித்திட்டாய், மொத்தத்தில் நெரித்திட்டாய், நிழல்வில்லை.. பறித்திட்டாய் தமிழ்ச்சொல்லை, கரித்திட்டாய் படும் மேகம்.. முடித்திட்டாய் குழல் அகம்.. தரித்திட்டாய் எனக்காக, வெறுத்திட்டாய் எதற்காக..(கிட்ட நெருங்குதல்)

**வானதி:** (விலகியபடி) நீசனே பைத்தியக்காறா என்னை நெருங்காதே.. நெருங்காதே...

**கா.வன்னியன்:** காவினிலே இசைபயிலும் கருங்குயிலும் நீ என்பேன் மேகம் பொழிந்திட நின்றாடும் மயில் நீ என்பேன், தாகம் தணித்திடவா... தோகை விரித்தாடிடவா.. மேவும் துயர் துடைக்க மேனிதனில் சாய்ந்திட வா.. வா.. கண்ணே வா.., வா.. கண்ணே வா... **(வானதி நந்தவனத்தை விட்டு ஓடுதல்)**

## காட்சி: 04

**இடம்: அரண்மனை..**

**(வீரமாணிக்கதேவன் இறந்த செய்திகேட்டு சங்கிலியன் துயரத்துடன் நிற்க. காக்கைவன்னியன் ஆலோசனையுடன் பறங்கியர் சங்கிலியன் அரண்மனையை முற்றுகையிடல்)**

**சங்கிலியன்:** பறங்கியர் சூழ்ச்சியால் தமிழன் அடிமைப்படாதவாறு உற்ற நேரத்தில் மானம் காக்க வந்த வீரனே, என் ஆருயிர் நண்பா **(காக்கைவன்னியனைக் கட்டியணைத்தல் காக்கைவன்னியனும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியணைத்தபடி பறங்கியர் உதவியுடன் சங்கிலியனுக்கு விலங்கு மாட்டல்)

**காக்கைவன்னியன்:** (ஏளனமாக) வீரத்தமிழ் வேந்தன் ஈனப்பறங்கியிடம் மண்டியிடவா, அஞ்சவேண்டாம்..

**சங்கிலியன்:**(கைவிலங்குடன் ஆவேசமாக) ஆ... துரோகி எமது மூதாதையான இராவணனைக் காட்டிக் கொடுத்தான் அவன் தம்பி விபீசணன், குலோத்துங்க சோழனை அழகேஸ்வரன் காட்டிக்கொடுத்தான். சங்கிலி வேந்தனை நீ காட்டிக்கொடுத்தாய்.

**கா.வன்னியன்:**மதியிழந்த மன்னா தமிழகத்திற்கு நேர்ந்த ஆபத்தை காக்கைவன்னியன் காப்பாற்றினான் என்று இறக்கப்போகும் இந்த நேரத்தில் உன் ஆன்மா நினைவு படுத்தட்டும்..

**சங்கிலியன்:**தமிழினத்திற்கு நேர்ந்த ஆபத்தை நீ காப்பாற்றினாயா, ஏகாதிபத்திய வாதிகளின் பாதம்தாங்கியே, ஈனப்பிறவியே என் முன் நிற்காதே போ..

**பறங்கித்துரை:** நீ கைதி அதிகம் பேசாதே..

**சங்கிலியன்:** கைதி.. யாரடா கைதி..

**கா.வன்னியன்:**நாட்டை சுடுகாடாக்கிய நீதான் கைதி, துரையிடம் சரணடை ... தாய் நாடு காப்பற்றப்படும்.

**சங்கிலியன்:**துரோகி, பெற்ற தாய்க்கும் பிறந்த பொன்னாட்டிற்கும் வசை தேடிய வஞ்சகனே, துரோகத்தின் களஞ்:சியமே, அந்நியரின் அடிவருடி வாழ வழிவகுத்த பதறே மாற்றார் முன் மண்டியிடும் வர்க்கம் இதுவல்ல.

**கா.வன்னியன்:**மண்டியிட வேண்டாம் மா மன்னா மரணத்தை அரவணைக்கத் தயாராகுங்கள்.

**சங்கிலியன்:** (**சங்கிலியன் பேச, காக்கைவன்னியன் சிரித்தல்**) பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயைக் கையில் பிடித்து மாற்றாரிடம் விலை கூறுவது போல்,கட்டித்தழுவிய நண்பனுக்கு விலங்குமாட்டுவித்த சண்டாளா..நயவஞ்சகப் புன்சிரிப்புடன் இனவஞ்சகம் செய்த பாதகா.. வீரத்தமிழன் சரித்திரத்தை மாற்றிப்படைத்த பாவியே.. அழியாப் புகழ்படைத்த தமிழினத்துக்கு சவக்குழி தோண்டிய சண்டாளா எதை எண்ணி எவன் காலை வருடினாயோ, அதேகால் உன் திருமுகத்தை முத்தமிடப்போகும் காலத்தின் கோலம் தான் இது..

**கா.வன்னியன்:** மரணம் உன்னை அரவணைக்கும் போது மதி பேதலிப்பது இயற்கை தானே..

**சங்கிலியன்:** போர்க்களத்தே வாட்படை கொண்டு எதிரிகளை சின்னா பின்னமாக்கும் மன்னர் மரபின் தகுதி அறியா வஞ்சகனே..

**கா.வன்னியன்:** வாட்படையின் பதில் முடிந்துவிட்டது, உன் உயிர்ப்பதிலைச் சொல்..

**பறங்கித்துரை:** சங்கிலியா எம்மிடம் மன்னிப்புக் கேட்டால் உங்கள் ஆட்சி தொடரும்..

**சங்கிலியன்:** மன்னிப்பா.. யார் யாரை மன்னிப்பது.. மரபு தெரியாத உங்களிடமா மன்னிப்புக் கேட்பது..

**கா.வன்னியன்:** துரை அவர்களே இவன் திருந்தமாட்டான், இவன் செய்த குற்றங்களை மக்களிடம் சமர்ப்பிப்போம்.

**பறங்கித்துரை:** சங்கிலியா உன்மீது குற்றப்பத்திரிகை எழுதப்பட்டிருக்கிறது.

**சங்கிலியன்:** குற்றப்பத்திரிகை தலைவணங்கி அறியாத தமிழினத்திற்கு குற்றப்பத்திரிகை, ஊர் தேசம் அறியாத உலுத்தர்களே அபகீர்த்தியுடன் தமிழ் வேந்தர் அழிந்து பட்டாரென்ற அபவாதத்தை சரித்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கவேண்டுமா? அல்லது சதி உருவான வன்னியனால் தகர்த் தெறியப்பட்டதென்றிருக்க வேண்டுமா?

**கா.வன்னியன்:** மதி கெட்ட மன்னா நான் தான் இந்த நாட்டை மீட்டிருக்கிறேன்.. அதை மறந்துவிடாதே..

**சங்கிலியன்:** பறங்கியரின் கைக்கூலியே அதிகம் பேசாதே..

**பறங்கித்துரை:** சங்கிலியா நீ மன்னிப்புக் கேட்டால் மரணத்தில் இருந்து தப்புவாய்.. என்ன முடிவு செய்திருக்கிறாய்..

**வீரநாயக்கன்:** மன்னா துரையின் ஆலோசனையை ஏற்போம், அவர்கள் சொற்படி நடப்போம்.

**சங்கிலியன்:** நிறுத்தடா.. உன் பேச்சை. காக்கை வன்னியனின் சூழ்ச்சியில் சிக்கிய விட்டில் பூச்சியே...

**வீரநாயக்கன்:** ஆக்கிரமிக்கப்பட இருந்த நாட்டை மீட்ட பெருமை காக்கைவன்னியனையே சாரும்.

**சங்கிலியன்:** காக்கைவன்னியன் காட்டிக் கொடுத்தான் நான் காட்டிக்கொடுக்கப்பட்டேன்.

**பறங்கித்துரை:** சங்கிலியா... அப்ப நீ சாகத்தான் போகிறாயா?

**கா.வன்னியன்:** சங்கிலிமன்னா நீங்கள் செய்த குற்றங்கள் மக்களுக்கும் தெரிந்துவிட்டது...

**சங்கிலியன்:** வீரம் பிறந்த நாட்டிலா நீயும் பிறந்தாய், அறநெறி தவறாது ஆட்சிகண்ட என் மீதா குற்றங்கள் இனத் துரோகிகள் வஞ்சக நெஞ்சினர் பரிசுதான் இந்த நிலை.

**பறங்கித்துரை:** சங்கிலியா இது உனக்கு இறுதிச் சந்தர்ப்பம்... மன்னிப்புக் கேட்டுக்கொள்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சங்கிலியன்:** வீரத்தாயின் வயிற்றிலே பிறந்து, சுதந்திர உணர்ச்சிப்பாலை உண்டு மானக்கரங்கள் ஏந்தி ஆண்மைத்தாய் சீராட்ட அறத்தின் அரவணைப்பிலே சிறப்புடன் வாழ்ந்த தமிழினம் பழிக்குலப் பறங்கியரிடம் உயிர்ப்பிச்சை கேட்பதா... சீ வேண்டாம்.

**காக்கைவன்னியன்:** வேண்டாம் இராவணன் காலம் முதல் இன்றுவரை வீரத்துடன் வாழ்ந்து வந்த வீராதி வீரர்கள், வீராங்கனைகள் வாழும் திரிசங்கு சுவர்க்கத்தில் எம் மன்னன் மணிமுடிதாங்கி அரியாசனத்தில் அமரப்போகும் நாள் நெருங்கிவிட்டது. அந்த வைபவத்தைத் தொடங்குவோம்..

**பறங்கித்துரை:** இவனைத் தூக்குமேடைக்கு இழுத்துச் செல்லுங்கள்..

**(இரு காவலர் சங்கிலியனை இழுத்துச் செல்லல்)**

**சங்கிலியன்:** தாய்த் திருநாடே, தமிழ்ப் பெருநிலமே, அடிமைச் சாசனத்தைத் தீட்டி அந்நியன் உன் பாதங்களில் விலங்கிடும் பழிக் கும்பல் முன்னிலையிலா நான் இறக்க வேணடும்..பழித்தாயின் கருவிலே உருவாகி, சதித்தாயின் அரவணைப்பிலே வளர்ந்து, வஞ்சகச் செவிலியின் ஈஞ்சுமொழி பயின்று பண்பில்லாக் காட்டு மிராண்டிக் கூட்டம் பகட்டிய அடிமை விலங்கை உடைத்தெறிய ஓடி வாருங்கள், விரைந்து வாருங்கள், காக்கைவன்னியா நான் இறக்கப் போகிறேன்... உனக்கு இந்த நாடே சொல்லட்டும் போ..

**(காக்கைவன்னியனும், பறங்கித்துரையும் வீரநாயக்கனும் வெற்றிச் சிரிப்பு சிரித்தல்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூலியஸ் சீசர்

## காட்சி: 01

**இடம்:றோமில் நடக்கும் நகரவிழா**

(மாவீரன் ஜூலியஸ் சீசர் றோமின் பகை நாடுகளையெல்லாம் வெற்றிகொண்டு றோம் நகர் திரும்பியுள்ள நிலையில் றோமில் நடக்கும் நகரவிழாவில் கலந்து கொள்கிறான்)

**தோன்றுவோர்:** ஜூலியஸ் சீசர், சீசரின் மனைவி கல்போர்னியா, மார்க் அன்ரனி, தத்துவஞானி பிண்டறஸ்..

(வாத்திய இசை ஒலிக்கிறது)

**அன்ரனி:** நண்பா பத்தாண்டுகாலம் பார்புகளும் றோமைவிட்டுப் பிரிந்து பகைவருடன் போரிட்டு அலுத்துக் களைத்து வந்திருக்கும் நீ இன்று இந்த நகரவிழாவைப் பார்த்து ரசிக்கும் பாக்கிய சாலியாகி விட்டாய், அதனால் தான் றோமில் நடக்கும் இந்த நகரவிழா இவ்வருடம் வெகு சிறப்பாக அமைந்துவிட்டது.

**ஜூலியஸ் சீசர்:** அன்ரனி பத்து வருடகாலம் படாத பாடுபட்டு பனியென்றும், பாறையென்றும், மழையென்றும், குளிரென்றும் நான் நடந்து சென்ற பாதையிலே இடராக வந்தன.. அத்தனை இடரையும் துச்சமென மதித்து றோமின் புகழை உலகறியச் செய்துவிட்டேன், அதன் பலன் இன்று இந்த நகரவிழா வெகுசிறப்பாக அமைந்து விட்டது. அது கண்டு என் நெஞ்சம் பூரிக்கிறது, உள்ளம் உவகையடைகிறது, என்னை அறியாமலே நான் ஒரு இன்பநிலைக்கு ஆளாகின்றேன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்ரனி:** நண்பா அந்த இன்பத்தைப் பெற்றுந்தந்தவர்கள் றோம் நாட்டின் படைவீரர்கள்தான்..

**ஜூலியஸ் சீசர்:** உண்மைதான் அன்ரனி கத்திவீச்சு, சுழன்றாடும் வேகம், வற்றவைக்கும் பகைவர் சேனையை, றோமானியரின் இலக்கணம் அதுதான்.

**அன்ரனி:** நண்பா மொம்பேயின் முடிவு தங்களுக்கு ஆச்சரியம் தரவில்லையா?

**ஜூலியஸ் சீசர்:** அன்ரனி என்னை எதிர்ப்பவன் எவனும் வாழ்ந்ததில்லை எங்கே இவன் வாழ்ந்து விடுவானோ என்று எண்ணினேன் அவனுக்கு ஏற்ற தண்டனை எகிப்திலே கிடைத்து விட்டது...

**அன்ரனி:** நண்பா சிதைய இருந்த றோமைக் கட்டிக்காத்த காவல் தெய்வம் நீ.. உன்னால்தான் இந்த றோமாபுரியே பெருமை அடைகிறது, றோமின் புகளை உலகறியச் செய்ய நீ பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல.

**ஜூலியஸ் சீசர்:** உண்மைதான் அன்ரனி உண்மைதான் எல்லையற்ற இடர்களை அனுபவித்த நான் இன்று இந்த இன்பத்தை அனுபவிக்கிறேன். இந்த இன்பத்தைப் பெற்றுத் தந்தவர்கள் றோம் நாட்டின் படைவீரர்கள் தான், அவர்களால் அவர்கள் தியாகத்தால் தான் றோம் நாடு தலைநிமிர்ந்து நிற்கிறது கால்நாட்டுப் பகைவரால் அவர்தம் பகையால் எங்கே நம் பார்புகளும் புகள் அழிந்துவிடுமோ என்று நான் அஞ்சியவேளையிலே அஞ்சவேண்டாம் தலைவா நாமிருக்கிறோமென்று மார்தட்டி போர்களம் சென்றார்களே அந்த வீரர்களை நாம் மறந்துவிடமுடியுமா?

**கல்போர்னியா:** பிரபு அதோ பாருங்கள், நகர விளக்குகள்.. மின்னும் தாரகையாக, மிளிரும் ஒளி விளக்காக, வானவில்லே தோற்றுவிடும் பாருங்கள்.

**ஜூலியஸ் சீசர்:** பார்க்கிறேன் றோமின் கலையழகைப் பார்க்கிறேன், வானத்து வெண்ணிலவு வையத்தில் தவழ்வதைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கிறேன். வானத்துத் தாரகைகள் ஊரெல்லாம் மின்னுவதை ரசிக்கிறேன்.. பாவையே பாரெல்லாம் புகழ்பாட ஊரெல்லாம் கதைபேச எம் நகரவிழா நெஞ்சே நிறைகிறது கண்ணே..

**கல்போர்னியா:** பிரபு.. (ஜுலியஸ் சீசரின் கையைப் பிடித்துக்கொண்டு) நான் வானத்தில் மிதப்பது போன்று உணர்கிறேன் தங்களை மணாளனாகப் பெற்றதையிட்டு. நான் பெரும் பேறு பெற்றுவிட்டேன்..

**ஜுலியஸ் சீசர்:** கல்போர்னியா...பெற்ற சுதந்திரம் பேணிக்காப்பேன், பெற்ற றோமானியருக்கு பெருமை சேர்ப்பேன்...

**அன்ரனி:** நண்பனே நகரவிழா முடிந்தகையோடு, மார்ச் மாதம் பதினைந்தாம் நாள் உன் முடிசூட்டுவிழா.. அதுவே என் நெஞ்சம் நிறைந்த விழா..

**ஜுலியஸ் சீசர்:** அன்ரனி நீ என் உயிரிலும் மேலான நண்பன், எனக்காக வாழ்பவன், உன்னை நண்பனாக அடைந்தற்கு நானே பாக்கியம் செய்தவன்..

**அன்ரனி:** நண்பா மார்ச் மாதம் பதினைந்தாம் நாளை மறக்கமாட்டேன்..

**ஜுலியஸ் சீசர்:** மார்ச் மாதம் பதினைந்தாம் நாள், முடிசூட்டு விழா என் அருகில் நீயிருப்பாய்..

**அன்ரனி:** அந்த நாளை எதிர்பார்த்து நான் காத்திருப்பேன்.. நண்பா எனக்கொரு வேலை இருக்கிறது.. நான் போய் வருகிறேன்..
**(அன்ரனி புறப்படல்)**

**ஜுலியஸ் சீசர்:** கல்போர்னியா நேரமாகிவிட்டது... வா போகலாம்..
**(ஜுலியஸ் சீசரும், கல்போர்னியாவும் புறப்படுதல், அப்போது பின்னால் இருந்து ஒரு குரல்)**

**பிண்டறஸ்:** ஏ.. சீசரே, ஜுலியஸ் சீசரே..

**ஜுலியஸ் சீசர்:** (திகைப்புடன் திரும்பி) யார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிண்டறஸ்:** ஜுலியஸ் சீசரே, எங்கே போகின்றீர்..

**ஜுலியஸ் சீசர்:** யார் என்னைப் பெயர் சொல்லி அழைக்கும் இவன் யார்... (கல்போர்னியா பயத்துடன் சீசரின் கையைப் பிடிக்கிறாள்..)

**பிண்டறஸ்:** (மேடைக்கு வந்து) ஏ சீசரே எங்கே போகிறாய்..

**ஜுலியஸ் சீசர்:** ஏ கிழவா.. என்னைப் பெயர் சொல்லி அழைக்கும் நீ யார்..

**பிண்டறஸ்:** நானா, நான் தான் பிண்டறஸ்... தத்துவஞானி பிண்டறஸ்..

**ஜுலியஸ் சீசர்:** என்னை எதற்காக அழைத்தாய்..

**பிண்டறஸ்:** ஜுலியஸ் சீசரே, மார்ச் மாதம் பதினைந்தாம் நாள் உனக்கு ஆபத்து நிகழப்போகிறது..

**ஜுலியஸ் சீசர்:** எனக்கு ஆபத்தா, உனக்கு பயித்தியமா?

**பிண்டறஸ்:** எனக்குப் பயித்தியமில்லை.. நான் சொல்வதெல்லாம் உண்மை... என்னை நம்பு.

**ஜுலியஸ் சீசர்:** டே... நீ என்ன சொல்கிறாய்

**கல்வோர்னியா:** (பயத்துடன்) ஆ..பிரபு.

**பிண்டறஸ்:** மார்ச் மாதம் பதினைந்தாம் நாள் முடிசூட்டு விழாவை நிறுத்து... உனக்கெதிராக சதி நடக்கிறது.

**ஜுலியஸ் சீசர்:** ஏ.. கிழவா அதிகம் பேசாதே...

**கல்போர்னியா:** பிரபு..நீங்கள் வாருங்கள் போவோம்...
**பிண்டறஸ்:** சீசரே நான் சொல்வதைக் கேள்...நில்.

**ஜுலியஸ் சீசர்:** கிழவா.. போடா அப்பால்..
**(சீசர் பிண்டறசைத் தள்ளிவிடல்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்போர்னியா:** பிரபு நீங்கள் வாருங்கள்..
**(சீசரும் கல்போர்னியாவும் புறப்படுதல்)**

## காட்சி:02

இடம்: **காசியசின் அரண்மனை.. காஸ்கா வருதல்.**

**காசியஸ்:** வா.. காஸ்கா வா.. என்ன சிந்தனையுடன் வருகிறீர்.

**காஸ்கா:** (வந்து கொண்டே) காசியஸ் மார்ச் மாதம் பதினைந்தாம் நாள்... சீசர் அன்றுதான் முடிசூடப் போகின்றான்...

**காசியஸ்:** காஸ்கா எனக்கும் அதில் உடன்பாடில்லைத்தான்...

**காஸ்கா:** அப்போ என்ன தான் செய்யப் போகிறீர்கள்... குடி ஆட்சியா? முடியாட்சியா..

**காசியஸ்:** (சிரித்து) குடியாட்சி, முடியாட்சி.. எல்லாம் எம் கையில் தான்.

**காஸ்கா:** காசியஸ் நீ என்ன சொல்கிறாய்..

**காசியஸ்:** சீசரின் முடிசூட்டு விழாவை நாம் தடுக்க வேண்டும், அதற்கு உன் ஒத்துளைப்புத் தேவை..

**காஸ்கா:** அதற்காகத்தானே தங்களிடம் வந்திருக்கிறேன..

**காசியஸ்:** காஸ்கா சீசரின் முடிசூட்டுவிழாவைத் தடுப்பதற்கு நாம் புரூட்டஸின் உதவியைப் பெறவேண்டும்..

**காஸ்கா:** அதற்கு வழி..

**காசியஸ்:** சீசர் முடிசூடப்போவதை அறிந்து புரூட்டஸ் கவலை அடைந்துள்ளார், இது தான் எமக்கு தக்க தருணம்..

**காஸ்கா:** புரூட்டஸை எம் வழிக்கு மாற்றுவோம்...

**காசியஸ்:** காஸ்கா சிம்பரின், சகோதரனை சீசர் நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடத்தியதால் சிம்பரும் சீசர்மேல் கோபமாக இருக்கிறான், அவனையும் எம் வழிக்குத் திருப்ப வேண்டும்..

**காஸ்கா:** காசியஸ் நல்ல யோசனைதான்.. சீசரின் எதிரிகள், எமக்கு நண்பர்கள்..(சிரித்தல்)

**காசியஸ்:** சிம்பரையும் அழைத்துக்கொண்டு புரூட்டஸிடம் செல்வோம்... சீசரை ஒழிக்கும் திட்டத்தை வகுப்போம்.. (இருவரும் சிரித்தல்)

## காட்சி:03

இடம்: **புரூட்டஸின் அரண்மனை**

**பாத்திரங்கள்: புரூட்டஸ், காசியஸ், காஸ்கா, சிம்பர்.**

**(புரூட்டஸ் சிந்தனையுடன் அங்குமிங்கும் உலாவுதல்)**

**காசியஸ்:** பெருமை மிகு மார்க்கஸ் புரூட்டஸ் பெருமளவில் சிந்திக்கிறார் போலும்.

**புரூட்டஸ்:** காசியஸ் மார்ச் மாதம் பதினைந்தாம் நாளைப் பற்றிச் சிந்திக்கிறேன்.

**காஸ்கா:** அதைப்பற்றி என்ன யோசனை.

**புரூட்டஸ்:** ஒன்றுமில்லை ஜூலியஸ் சீசரின் முடிசூட்டுவிழா

**காசியஸ்:** புரூட்டஸ் நீங்கள் பெருங்குடியில் பிறந்தவர், முடியாட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து குடியாட்சிக்கு முரசறைந்த ஜூனியஸ், யூலியஸ், புரூட்டசின் வழிவந்தவர், நீங்கள் இருக்கும் போது ஜூலியஸ் சீசருக்கு முடிசூட்டு விழாவா? நாங்கள் இதனை ஏற்க முடியுமா?

**காஸ்கா:** ஏற்க முடியாது.

**சிம்பர்:** புரூட்டஸ் சீசர் முடிசூடிக்கொண்டால் றோமில் கொடுங்கோல் ஆட்சிதான் நடக்கும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காசியஸ்:** றோம் நகர் இப்போது ஜூலியஸ் சீசரிடம் அகப்பட்டுக் கொண்டது. புரூட்டஸ் றோமை நீங்கள் தான் மீட்க வேண்டும்..

**சிம்பர்:** றோமின் ஆட்சியை நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும்.. சீசரால் நாடுகடத்தப்பட்ட எனது சகோதரனை மீட்டுத் தரவேண்டும் (கடிதத்தை காசியசிடம் கொடுத்தல்)

**புரூட்டஸ்:** அப்போ சீசரின் முடிசூட்டு விழாவை தடுத்து நிறுத்த என்னதான் வழி..

**காசியஸ்:** தடுத்து நிறுத்துவதல்ல, அவனைக் கொல்ல வேண்டும்..

**புரூட்டஸ்:** காசியஸ் இது வீண் யோசனை..

**காசியஸ்:** புரூட்டஸ் இது வீண்யோசனை அல்ல.. சீசரை முடிசூடாமல் தடுப்பதென்றால், நான் சொல்வதை நீ கேள்..

**புரூட்டஸ்:** சொல்..காசியஸ்

**காசியஸ்:** சீசர் உயிருடன் இருக்கும் போது உன்னால் முடிசூட்டத்தான் முடியுமா? அல்லது ஆட்சியைப் பிடிக்கத்தான் முடியுமா? அவன் சாகத்தான் வேண்டும்..

**புரூட்டஸ்:** நேரமோ நடுநிசி, நாம் கூடியிருக்கும் காரியமோ நாட்டு விடுதலை கருதி.. இதை யாரும் மறக்கக்கூடாது.. நம் திட்டம் வெளியே தெரிந்தால் இருக்கும் பட்டம் பதவியுடன் நம் கொட்டத்தையும் அடக்கிவிடுவான் சீசர்..

**காசியஸ்:** பட்டம் சூட்டிக்கொள்ளும் அவன் கெட்ட எண்ணத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிக்கத் திட்டமிடும் நாம் வெட்டவெளியில் நிற்கவில்லையே தங்கள் வீட்டில் அல்லவா நிற்கிறோம்...

**புரூட்டஸ்:** காசியஸ் சீசர் பெருவீரன் எச்சரிக்கை மிகுந்தவன்.. அவன் விடயத்தில் நாம் நிதானமாகத் தான் செயல்ப்பட வேண்டும்.

**காசியஸ்:** புரூட்டஸ், காஸ்கா, சிம்பர் நான் சொல்வதைக் கேளுங்கள்.. மார்ச் மாதம் பதினைந்தாம் நாள் நடக்கும் முடிசூட்டு விழாவிற்கு முன் நடக்கும் அரசியல் மன்றக் கூட்டத்திற்க சீசரை அழைப்போம்..

**காஸ்கா:** புரூட்டஸ் அன்ரனி மாவீரன் றோமில் மக்கள் செல்வாக்கு மிக்கவன், உன்னிலும் பாசமுள்ளவன் சீசரின் உயிர் நண்பன் அவனை என்ன செய்வது...

**புரூட்டஸ்:** காசியஸ் அரசியல் மன்றக் கூட்டத்திற்கு சீசர் ஆயுதம் இல்லாமல் வருவான். அதற்கு முன் அன்ரனியை வெளி வேலையாக அனுப்புவோம் .. நீங்கள் கட்டாரிகளை பின்னால் மறைத்துக் கொண்டு வாருங்கள்.

**காசியஸ்:** சபாஸ் புரூட்டஸ் சபாஸ் இது சரியான யோசனை தான்..சீசர் வந்தவுடன் சிம்பரின் சகோதரனை நாடு கடத்தியது தொடர்பான விடயத்தைப் பேசுவோம் இதோ கடிதம..**(காஸ்காவிடம் கடிதத்தைக் கொடுத்து)** காஸ்கா கடிதத்தைக் கொடுப்பான்.. கடிதம் கண்டு சீசர் ஆர்ப்பரிப்பான், ஏற்கமறுப்பான்... ஆத்திரத்தில் அறிவிழப்பான்..

**புரூட்டஸ்:** அப்போது காஸ்கா ஜூலியஸ் சீசர் மீது கட்டாரியால் குத்துவான் தொடர்ந்து சிம்பர், காசியஸ் அனைவரும் குத்துங்கள்..(எல்லோரும் சிரித்தல்) இறுதிக் குத்து நான் குத்துவேன்.... ஒழிந்தான் சீசர்..**(சிரிப்பு)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசியஸ்: றோமின் பகைவன் இத்தாலியின் கொடுங்கோலன
(எல்லோரும் சிரித்தல்..)

## காட்சி: 04

இடம்: **சீசரின் அரண்மனை**

**பாத்திரங்கள்: ஜூலியஸ் சீசர், கல்போர்னியா**

**(இடிமுழக்கம், மின்னல்)**

**(ஜூலியஸ் சீசர் புறப்பட கல்போர்னியா தடுக்கிறாள்)**

**கல்போர்னியா:**(பதட்டமாக) பிரபு எங்கே இவ்வளவு அவசரமாகப் புறப்படுகிறீர்கள் கடும்மழை, இடி மின்னல், ஊழிக்காற்று, அபசகுனமாகத் தெரியவில்லையயா உங்களுக்கு..

**ஜூ.சீசர்:** கல்போர்னியா இயற்கையின் மாறுதலெல்லாம் உனக்கு அபசகுனமாகவா தெரிகிறது இடியும் மின்னலும் இயற்கையின் பெரும் செல்வம் இது எப்படி அபசகுனமாகும்...

**கல்போர்னியா:**பிரபு நான் பயங்கரக் கனவு கண்டேன். அந்தத் தத்துவஞானி கூறிய நாளும் இன்றுதானே இதனை மறந்துவிட்டீர்களா?

**ஜூ.சீசர்:** கல்போர்னியா அஞ்சினவனுக்கு நூறு மரணம்... அஞ்சாத நெஞ்சத்து ஆடவனுக்கு மரணமே இல்லை..அது தெரியாதா உனக்கு...

**கல்போர்னியா:**இருந்தாலும், பிரபு பெரியோர் வார்த்தையும், இயற்கையின் சீற்றமும், எமக்கு விடும் எச்சரிக்கை அல்லவா?

**ஜூ.சீசர்:** கல்போர்னியா இன்று அரசியல் மன்றக் கூட்டம், நான் கட்டாயம் போக வேண்டும்..

**கல்போர்னியா:** இன்று நான் போக விடமாட்டேன்..போக விடமாட்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூ.சீசர்: கல்போர்னியா ஒரு பெண்ணின் சொல்கேட்டு றோமானிய மாவீரன் ஜூலியஸ் சீசர் அரசியல் மன்றக் கூட்டத்திற்கு வரவில்லையென்று வரலாறு என்னை இகழ வேண்டுமா?

கல்போர்னியா:இன்று மட்டும் போகாதீர்கள்.. எனக்கு பயமாக இருக்கிறது..

ஜூ.சீசர்: பயமா? கல்போர்னியா பார்புகளும் சீசரின் மனைவியா இப்படி நடந்து கொள்பவள், ஒரு வீரனின் மனைவியா இப்படிப் பேசுபவள்.. (சீசர் புறப்பட கல்போர்னியா தடுக்க காஸ்கா வருதல்)

காஸ்கா: பார்புகளும் சீசர் ஒர பாவை சொல்லுக்கு இணங்கி பாராளுமன்றம் செல்லத் தயங்குவது அவமானத்திலும் அவமானம் உதறிவிட்டு வாருங்கள்

ஜூசீசர்: வா காஸ்கா வா... கல்வோர்னியா ஏதோ பயங்கரக் கனவு கண்டாளாம் அதனால் என்னைப் போகவேண்டாமென்று தடுக்கிறாள்..

காஸ்கா: சீசரே நேரமாகிவிட்டது புறப்படுவோம்

கல்போர்னியா: போகாதீர்கள் போகாாதீர்கள்..(காலைப் பிடித்தல்)

ஜூ.சீசர்: வழியை விடு கல்போர்னியா கட்டாயம் நான் போகவேண்டும்... (இடரிவிட்டுப் போதல்)

கல்போர்னியா:ஐயோ போகாதீர்கள் போகாதீர்கள்..

## காட்சி: 05

இடம்: **அரசியல் மன்றக் கட்டிடம்**

பாத்திரங்கள்: **ஜூலியஸ் சீசர், புரூட்டஸ், காசியஸ், காஸ்கா, சிம்பர்..**

ஜூ.சீசர்: புரூட்டஸ் இன்று அரசியல் மன்றக்கூட்டம், இந்த நாட்டின் ஏட்டிலே ஒரு முக்கியமான கட்டம்.. இந்த வேளையில் என் அரிய நண்பன் அன்ரனியைக் காணவில்லையே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரூட்டஸ்: முக்கிய வேலையாகப் போயிருக்கிறான், விரைவில் வந்துவிடடவான், அதற்கு முன்னால் ஒரு விண்ணப்பம்..

ஜூ.சீசர்: என்னது..

புரூட்டஸ்: காஸ்கா அதைக் கொடு...

காஸ்கா: ம்.. இந்தா...

ஜூ சீசர்: என்ன இது....

புரூட்டஸ்: வாசித்துப் பாருங்களேன்..

ஜூ.சீசர்: **(கடிதம் வாங்கி வாசித்தல்)** தங்களால் நாடு கடத்தப்பட்ட எனது அன்புச் சகோதரனுக்கு தாங்கள் கருணை கூர்ந்து **(சீசர் சிம்பரைப் பார்த்தல் பின் எல்லோரையும் பார்த்தல். மீண்டும் கடிதத்தை வாசித்தல்)** இந்த நாட்டின் பிரஜையாக்க வேண்டுமென்று இத்தால் அறியத்தருகிறேன். இங்ஙனம் தங்கள்பால் உண்மையுள்ள மெற்றலஸ் சிம்பர்....சிம்பர்... சிம்பர்.. காஸ்கா..**(கடிதத்தைக் கிழித்தல்)** காஸ்கா என்னை ஒரு முட்டாளென்று எண்ணிவிட்டாயா? அல்லது முட்டாளாக்க எண்ணிவிட்டாயா? காஸ்கா நீ தந்த இந்தக்கடிதத்தைக் கண்டு நானொன்றும் அஞ்சிவிடப்போவதில்லை... மெற்றலஸ் சிம்பரின் சகோதரனுக்கு கொடுத்த தண்டனை, ஏற்ற தண்டனை அதற்கு பிராயச் சித்தம் வேண்டுமென்றால் இறைவனிடம் போய் இரந்து நில்லுங்கள்... நான் மட்டும் மனம் மாறிவிடுவேனென்று தப்புக் கணக்குப் போடாதீர்கள்.

காஸ்காட்: சீசரே தாங்கள் இந்த விடயத்தை கருணை கூர்ந்து ஆராய வேண்டும்...

ஜூ.சீசர்: நான் நினைத்தால் நினைத்தது தான், சொன்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னது தான், நினைத்தபின், சொன்னபின் அதற்கு மாற்றமே கிடைக்காது காஸ்கா...

**காசியஸ்:** சீசரே... ஆத்திரம் கொள்ளாதீர்கள், நிதானமாகச் சிந்தியுங்கள்.

**ஜூ.சீசர்:** எவர் எதைச் சொன்ன போதும் என் எண்ணம் மாறாது.. என்னை இங்கிருக்கும் எவராலுமே அசைக்க முடியாது, என் அரிய நண்பன் புரூட்டசால் கூட அசைக்க முடியாதென்பதை நீ காணவில்லையா காசியஸ்....

**காஸ்கா:** **(பின்னால் மறைத்து வைத்திருந்த கட்டாரியால் சீசரின் முதுகில் குத்துகிறான்)** இதனால் அசைக்க முடியும் சீசரே...

**சிம்பர்:** றோமின் பகைவன் **(கட்டாரியால் குத்துகிறான்)**

**காசியஸ்:** இத்தாலியின் கொடுங்கோலன் **(கட்டாரியால் குத்துகிறான்)**
**(புரூட்டஸ் பின் அங்கியால் தனது முகத்தை மூடிக்கொண்டு நெஞ்சில் குத்துகிறான்)**

**புரூட்டஸ்:** றோமின் சர்வாதிகாரி ஒழிந்தான்..**(எல்லோரும் சிரித்தல்)**

**எல்லோரும் சேர்ந்து :** ஒழிந்தான் பகைன் **(சிரித்தல்)**

**ஜூ.சீசர்:** **(தள்ளாடியபடி நெஞ்சைப் பொத்திக் கொண்டு)** ஆ.... புரூட்டஸ்.... நீயுமா புரூட்டஸ்..
**(நிலத்தில் வீழ்ந்து இறக்கிறான்)**

**புரூட்டஸ்:** றோமிற்கு விடுதலை, றோமிற்கு விடுதலை, றோம் விடுதலை பெற்றுவிட்டது..
( எல்லோரும் சிரித்தல்)

**காசியஸ்:** ஒழிந்தான் பகைவன், **(எல்லோரும் சிரித்தல்)**
**(அன்ரனி வருதல்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்ரனி:** நண்பர்களே றோம் நாட்டு மக்களே என்னரிய நண்பன் சீசர் இறந்துவிட்டான்.. இல்லை கொல்லப் பட்டுவிட்டான்.. **(சீசரைத் தூக்கி வைத்துக் கொண்டு)** ஐயகோ அடுக்குமா இந்தஅநியாயம், அஞ்சாத சிங்கமே ஆழ்ந்த நித்திரையில் ஆழ்ந்து விட்டீர்களா? கனவிலும் நினைவிலும் றோம் றோம் என்று புலம்பினீர்களே.. அந்த றோம் தந்த பரிசா இது.....

நீசர்களே நீங்கள் சீசரை அச்சத்தால் கொன்றீர்கள், ஆத்திரத்தால் கொன்றீர்கள், பொறாமையால் கொன்றீர்கள்.. இன்று சீசர.... நாளை நாங்கள்... வருகிறேன் ..**(சீசரைத் தூக்கிக் கொண்டு வெளியேறுகிறான்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகுட பங்கம்

**பின்னணிக்குரல்: போர் வெறியனாக இருந்த அசோகன் புத்தர் தர்மத்தை புவனம் எங்கும் எடுத்து ஓதுவதற்கு முன்னால் இமயம் முதல் குமரி வரை பரவியுள்ள இதே உபகண்டத்தை ஒரு குடைக் கீழ் கட்டியாள நினைத்தான். ஆனால் கலிங்கமென்னும் சின்னஞ் சிறிய சுதந்திரமான நாட்டினை நோக்கி அடிபணியச் சொன்னான் கலிங்கமோ அடிபணிவது ஆகாத காரியம் என்று ஆர்ப்பரித்து நின்றது. ஆதன் பிறகு ஓர் நாள்...**

**அசோகன்:** நீ என்ன சொல்கிறாய் அமைச்சரே கலிங்கப் படைகளைத் தோற்கடிக்கும் வலிமை இந்த சாம்ராட் அசோகனுக்கு இல்லையென்று சொல்கிறீரா, அல்லது சீறிக்கிழம்பும் மௌரியப் படைகள் கலிங்கன் வாழுக்கு பணிந்துவிடும் என்கிறீரா?

**அமைச்சர்:** மன்னா கலிங்க நாட்டவர்களிடம் வீரமும் இருக்கிறது, அதற்கு மேலாக மானமும் இருக்கிறது அந்த இரண்டு சக்திகளும்..

**அசோகன்:** இரண்டு சக்திகளா, என் கத்திகளை விட அது வலிமையானதா அமைச்சரே..

**அமைச்சர்:** அசோக மன்னா உன் தந்தை பிந்துசாரன், பாட்டனார் சந்திரகுப்த மௌரியர் கலிங்க நாட்டின் மீது படையெடுத்து தோற்ற வரலாறுகள் எமக்கு பாடமாக இருக்கிறது மன்னா..

**அசோகன்:** பாடம்..பாடம்..பாடம்.. அதை மறக்காததால் தான் இப்படி மறக்கோலம் பூண்டிருக்கிறேன் நான் என் தாத்தா விந்தியம் தாண்டிப் படையெடுத்து செல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயன்றார் புறமுதுகிட்டு ஓடி வந்தர், என் தந்தை
பிந்துசாரனும் படை கொண்டு சென்றார் தோல்விப் புயலைத் தாங்காது திரும்பி வந்தார் இதோ இப்பொழுதே வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு போலப் புறப்பட்டு விட்டான் அசோகன். நந்த வம்சத்தையே பூண்டோடு துவம்சம் செய்த அந்தணகுல சிரேஸ்ரராம் அவனியெங்கும் தேடியலைந்தாலும் காணமுடியாத அரும் பெரும் பண்டிதராம் சாணக்கியரின் இராஜதந்திர மூளையிலே ஊறி வளர்ந்த இந்த அசோக வர்த்தனன் கலிங்க நாட்டை அழித்து சாம்பல் மேடாக்குவேன் இது உறுதி...

**அமைச்சர்:** மாமன்னா விந்தியத்தின் விழிம்பிலே ஆரியவர்க்கத்தார் அடியெடுத்து வைத்ததில்லை என்ற குறையைப் போக்குவதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம்..

**தளபதி:** அசோக மன்னா கட்டளை இடுங்கள் கண்ட துண்டமாக்குகிறேன் கலிங்கப்படைகளை... கருவறுத்துவிடுகிறேன் அவர்கள் வம்சத்தை...

**அசோகன்:** சீறி வந்த பெரும் படையைக் கூறுசெய்து, அடுத்து வந்த பகை வெள்ளத்தை இடுப்பொடிய வைத்து, தருக்குடன் போர் செய்த உருக்கனைய நெஞ்சோரை நொருக்கி எறிந்து குருதிச் சேற்றிலே மௌரியக் கொடியைப் பறக்கவிடுவான் இந்த சாம்ராட் அசோகன் வாழ்வா சாவா பார்த்துவிடுவோம் ஒரு கையென வரும் வீரர்களே என்னைப் பின்தொடர்ந்து வாருங்கள் போர்.. போர்.. ஒலிக்கட்டும் போர் முரசம், அணிவகுத்து நிற்கட்டும் இரத கஜ துரத பதாதிகள் புறப்படுங்கள் வில் ஏந்தும் வீரர்களே, தேர் ஓட்டும் தீரர்களே, காதலுக்கு அஞ்சாது காதலிக்கு போதியுற முத்தம் தந்துவிட்டு போர்க்களம் நோக்கிப் புறப்படுங்கள், காதற் கடலிலே கண்டெடுத்த கன்னியர்க்கு கடைசி முகம் காட்டிவிட்டு களம் காணப் புறப்படுங்கள் செம்பவளச் செல்வியரின் செங்காந்தச் செவ்விரலால் செந்தூரத் திலகமிட்டு போர் முனைக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறப்படுங்கள். போர்...போர்...(அசோகன் புறப்பட புத்த பிக்கு தடுத்தல்)

**புத்தபிக்கு:** புத்தஞ் சரணங் கச்சாமி
தர்மஞ் சரணங் கச்சாமி
சங்கஞ் சரணங் கச்சாமி.
அசோகா போரை நிறுத்து. போரை நிறுத்து.

**அசோகன்:** புத்தபிக்குவே என் குலப்பழியைப் போக்க கலிங்கத்தின் மீது படையெடுப்பது தவறா

**புத்தபிக்கு:** படையெடுப்பதல்ல யுத்தமே வேண்டாமென்கிறேன் நான்...

**அசோகன்:** பிக்குவே உங்களுடைய கோரிக்கையை என்னால் ஏற்க முடியாது என்னைத் தடுக்காதீர்கள்...

**புத்தபிக்கு:** அசோகா மௌரிய சாம்ராட்சியத்துக்கு மாளாத களங்கத்தை ஏற்கடுத்தப்போகிறாய்... அதை மறந்துவிடாதே...

**அசோகன்:** புத்தபிக்குவே அதைப்பற்றி நான் கவலைப் படப்போவதில்லை, எனக்குவேண்டியதெல்லாம் என் வம்சத்துக்கு ஏற்பட்ட களங்கத்தைப் போக்குவதுதான்...

**பிக்கு:** அசோகா போர் வேண்டாம்... போரே வேண்டாம்.

**அசோகன்:** (கோபத்துடன்) பிக்குவே கலிங்க நாட்டுடனான யுத்தத்தை என்னால் நிறுத்த முடியாது. இதுவே எனது இலட்சியவெறி என் உடலில் பரவியுள்ள அக்கினிப் பிளம்பு, கலிங்க நாட்டின் மீது
படைஎடுத்து எம் முன்னோர் பெற்ற களங்கத்தைப் போக்க எனக்கு இதைவிட்டால் வேறு சந்தர்ப்பம் இல்லை. படைத் தலைமையை நானே ஏற்கிறேன், கலிங்க நாட்டைக் கைப்பற்றி என் வாழ்நாளின் கனவை நிறைவேற்றுகிறேன். கலிங்க நாட்டின் வீரமிகு வரலாறு களையெல்லாம் எரித்து சாம்பலாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுகிறேன். அது மட்டுமல்ல கலிங்க நாட்டிலே மௌரியக் கொடி பறக்கும் நாள் வெகு தூரத்திலில்லை...

## காட்சி 02

**பின்னணிக்குரல்: போர் ஒரு நாள் அல்ல. இரு நாள் அல்ல நூற்றிருபது நாட்கள்... கலிங்கம் வீழ்ந்தது...**
**கலிங்கம் வீழ்ந்தது. அசோகன் அமைதியின்றி அலைந்தான். சாந்தியின்றி சஞ்சலப்பட்டான் நிம்மதியின்றி நிலை தடுமாறினான். போர்க்களத்தைச் சுற்றி வருகிறான் அசோகன்**
**(பிசாசுகளின் ஊழித்தாண்டவம்)**

**பிசாசு:** எத்தனை ரத்தம், எத்தனை ரத்தம் சத்து நிறைந்தது, சத்து நிறைந்தது. இத்தனை சுவையா, இத்தனை சுவையா, ஆ... (பேய்ச்சிரிப்பு)
எத்தனை பிணங்கள், எத்தனை பிணங்கள், சத்து நிறைந்தது, சத்து நிறைந்தது...
இத்தனை சுவையா, இத்தனை சுவையா...
ஆ...ஆ (பேய்ச்சிரிப்பு)

எத்தனை ஓலம், எத்தனை ஓலம்
சத்து நிறைந்தது, சத்து நிறைந்தது,
இத்தனை இசையா, இத்தனை இசையா...
ஆ...ஆ...ஆ (பேய்ச்சிரிப்பு)

எத்தனை மகுடம், எத்தனை மகுடம்,
ரத்தச் சகதியில், ரத்தச் சகதியில்..
ஆ.. வேண்டாம் இந்த மனிதப் பிழைப்பு...
வேண்டாம் இந்த மனிதப் பிழைப்பு...

**முதியவள்:** (சவத்தை அணைத்துக் கொண்டு )
மகனே வாழப்பிறந்தவனே.. உன்னைச் சுமந்த வயிறு பற்றி எரிகிறதடா, எனக்கு கொள்ளியிடுவாய் என எதிர்பார்த்தேன். நானே உனக்கு கொள்ளியிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துவிட்டானடா கொடுங்கோல் மௌரியன். பெற்ற வயிறு பதற, பேதைகள் இலட்சம் பேர் துடிக்க மஞ்சள் குங்குமம் இளந்தோர் வடித்த கண்ணீர் ஆறாக ஓட, மனிதகுலம் அழிந்து மகுடம் பெற வேண்டுமா? எனி வேண்டாம் இந்த மனிதப் பிறப்பு, வேண்டாம் இந்த வாழ்வு, நாவறட்சி மிகுகிறதே.. தலை சுற்றுகிறதே தண்ணீர், தண்ணீர்...

**அசோகன்:** இதோ தாயே இருக்கிறது தண்ணீர்...

**முதியவள்:** என் மகனைப் போல் இருக்கிறாயே, யாரப்பா நீ...

**அசோகன்:** மௌரிய மன்னன் சாம்ராட் அசோகன்...

**முதியவள்:** ஆ.. சாம்ராட் அசோகன், சாம்ராட்சிய வெறிபிடித்த சாம்ராட் அசோகன்.. கசங்கிய மலர்கள், கருகிய மொட்டுக்கள், அழிந்த குங்குமம், அறுபட்ட தாலிகள், அவசியமின்றிப் போர் தொடுத்து இத்தனை அழிவுகளையும் ஏற்படுத்தி விட்டாயே, உனக்கு இருதயம் என்பதே கிடையாதா நீ மனிதன் தானா.

உன் மகுடத்திற்கு பங்கத்தை ஏற்படுத்தி விட்டாயே, கறை படிந்த மகுடத்தைக் களற்றி வீசிவிடு. அது இரத்த ஆற்றில் மிதக்கட்டும், சாம்பல் மேட்டில் யொலிக்கட்டும், பிணக்குவியலில் எண்ணிக்கையாக இருக்கட்டும்... உன் மகுடம் நாற்றமெடுக்கும் சாக்கடை நீரைவிடப் பெறுமதியற்றது... உன் கையால் தண்ணீர் குடிப்பதைவிட சாவதே மேல், **(இறக்கிறாள்) (இதே நேரம் புத்தபிக்கு வருதல்)**

**பிக்கு:** புத்தஞ் சரணங் கச்சாமி
தர்மஞ் சரணங் கச்சாமி
சங்கஞ் சரணஞ் கச்சாமி

**அசோகன்:** துறவியே மௌரியரின் பெருமைக்கு மாசாக வந்துவிட்டேன்.. மகுடத்தின் மகிமைக்கு பங்கத்தை ஏற்படுத்தி விட்டேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிக்கு:** அசோகா மண்ணாசை என்னும் மகுட ஆசையை மறந்துவிடு. மௌரியத்தின் பேரரசே, எப்படிப் பெற்றாய் இந்த கலிங்க பூமியை.. இரத்தம் தோய்ந்த கரங்களால் உன் வெற்றிக் கொடியை பறக்கவிட்டிருக்கிறாயே இதுவா வெற்றி, இதுவா வீரம், இல்லை அவமானம், அவமானம்.

**அசோகன்:** துறவியே எனக்கு எல்லாம் புரிந்துவிட்டது. என்னைத் தனிமையில் விடுங்கள்

**பிக்கு:** மறந்துவிடாதே
அன்புதான் இன்பஊற்று, அன்புதான் உலகஜோதி, அன்புதான் உலக மகா சக்தி **(பிக்கு சென்றவுடன்)**
பின்னணிக்குரல்: அன்புதான் இன்பஊற்று, அன்புதான் உலகஜோதி, அன்புதான் உலக மகா சக்தி

**அசோகன்:** அன்புதான் இன்ப ஊற்று, அன்புதான் உலகஜோதி, அன்புதான் உலக மகா சக்தி என் கண்கள் திறந்தன, பூட்டிய சிந்தனைக் கூட்டின் இரும்புக் கதவுகள் உடைந்தன.. என் ஆணவம், அதிகார மோகம் ஒளிந்தது அசோக நீ அருள் பெற்றாய், அருள் துடைத்தாய். எனக்கு அன்பு வேண்டும், அமைதி வேண்டும். போர் வேண்டாம், போரே வேண்டாம், வாழ்வுதான் வேண்டும், அநாகரீக மனிதரின் அற்ப ஆசையால், வெற்றிப் பித்தத்தால் பல்லாயிரக் கணக்கான மனிதர்கள் உயிரைத் தத்தம் செய்திருக்கின்றனரே இத்தனைக்கும் காரணம் இந்த வாள், வில், வேல் இந்தக் கொலைக் கருவியினால் எத்தனை ஆயிரம் உயிர்கள் காவு கொள்ளப்பட்டனர். இந்த வாளினால் எத்தனை ஆயிரம் பேர் வெட்டிக் கொல்லப்பட்டிருக்கின்றனர். இந்த வில்லினால் எத்தனை மனிதர்கள் வதை படுகின்றனர். இந்த வேலினால் எத்தனை மனித உயிர்கள் கொல்லப்பட்டது, வேண்டாம். இந்த நிலை வேண்டாம் கடல் போல் பகைவர் கூட்டம் களம் தேடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தாலும், கணப்பொழுதில் சிரசறுத்து வீசிய என் வீரவாளே எனி ஒளிந்து போ என் உறையை விட்டு...
**(வாளை எடுத்து வீசுகிறான்)**

பாய்ந்து வரும் வேல்படையை தடுத்து திசை மாற்றும் என் வீரக் கவசமே எனி களன்றுவிடு என் மார்பை விட்டு.... **(கவசத்தைக் கழட்டி வீசுதல்)**

கருங்கடல் போல் திரண்டுவந்த காட்டானைக் கூட்டத்தைக் கூறுபோட்டு என் அங்கத்திலே வீற்றிருக்கும் வீரக் கங்கணமே எனிக் களன்றுவிடு என் உடலை விட்டு.... **(கங்கணத்தைக் கழற்றி வீசுதல்)**

எதிர்த்து வந்தோரை வெட்டி வீழ்த்தி இரத்த ஆற்றில் மிதக்க விட்டு என் வீரத்திற்கு விளம்பரமாக நின்ற வீரவடுக்களே அழிந்து போங்கள் என் மார்பை விட்டு...
நான் இன்றுடன் மாறிவிட்டேன்... கலிங்க நாடே கருணைகாட்டு.. கர்வம் கலைந்த அசோகன் மண்டியிடுகிறேன்... பொன், பொருள், மண், அரசுரிமை, மணிமுடி, செங்கோல், சாமரம், சிங்காசனம், பணிப்பெண்கள், அத்தனை அதிகாரங்களும் எனக்கு வேண்டாம்... இன்று முதல் நான் உருவத்தில்தான் சக்கரவர்த்தி, உள்ளத்தில் பிட்சு மூர்த்தி...
போதி மரத்துப் புத்தர் பெருமானே..

ஆண், பெண் தவிர சாதி வேறில்லையென மேதினியிலே தூற்றிய அறிவுலக சித்தனே நீ தான் வேண்டும், உன் அன்பு தான் வேண்டும்,என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்.

அரசுரிமை வேண்டாம், ஆடம்பர வாழ்வு வேண்டாம், அழகுறு குடும்பம் வேண்டாம், அகிம்சை தான் வேண்டும், நீதான் வேண்டும், உன் அன்புதான் வேண்டும், என்னை ஏற்றுக்கொள்ளுங்கள். ஏற்றுக்கொள்ளுங்கள்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்மை காத்த மன்னன்

அரிச்சந்திரன் அனைத்து வசதிகளும் பெற்ற சிறந்த மன்னன். அவன் வாய்மையைத் தன் உயிரினும் மேலாகக் கருதினான். விசுவாமித்திரர் முனிவர் கொடுத்த துன்பங்களிலெல்லாம் மூழ்கி, புடம் போட்ட தங்கமாக, சத்தியத்தின் காவலனாக, விளங்கினான். உண்மைக்காக உயிரையும் தர இருந்தான் அந்த வரலாற்றிற்கு நாம் செல்வோம்.. அன்றொருநாள்....

## காட்சி 01

இடம் : தேவலோகம், தேவேந்திரன் சபை

பாத்திரங்கள் : தேவேந்திரன், நாரதர், வசிட்டர், விசுவாமித்திரர்.

(தேவேந்திரன் அரியணையை விட்டு எழுந்து)

**தேவேந்திரன்:** அகிலத்தை ஆளுகின்ற அரசர்களில், அநீதிகள் தீமைகள் செய்திடாமலும் பொய்மைகள் புரட்டுகள் புரிந்திடாமலும் நற்குணம் கொண்ட, வாய்மை காக்கும் மன்னன், வாரி வழங்கும் வள்ளல் பூவுலகில் யாரேனும் உண்டா?

**நாரதர் :** சம்போ மகாதேவா நாராயணா.... தேவேந்திரா! பூவுலகில் எல்லா விடயங்களையும் அறிந்தவர், புரிந்தவர் வசிட்டர் இதெல்லாம் அவருக்குத்தான் தெரியும் அவரையே கேளுங்கள்..

**தேவேந்திரன்:** வசிட்டமா முனிவரே! வாய்மைக்கோர் இலக்கணமாய் உண்மைபேசி, பாதகங்கள் புரிந்திடாமல் அன்புசால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறத்தின்பால், ஆட்சிசெய்யும் மன்னன் யாரும் உண்டா, தாங்கள் கூறுங்கள்...

**வசிட்டர்:** தேவேந்திரா பூலோகத்தில் அரிச்சந்திரன் என்றொரு மன்னன் இருக்கிறான்.. அவன் எந்தத் தீய செயல்களும் செய்யாமல் உண்மையை உயிராக மதித்து வாழ்ந்து வருகிறான்... அவன்தான் பூலோகத்தில் சத்தியவந்தன்.

**விசுவாமித்திரர்:** தேவேந்திரா வசிட்டர் கூறுவது முழுப்பொய்... அயோத்தி மன்னன் அரிச்சந்திரன் பொய் பேசுவதில் மகா கில்லாடி.. பொறாமைக்குணம் கொண்டவன், பிறரை ஏமாற்றுவதில் அவனுக்கு நிகர் அவனே..

**வசிட்டர்:** விசுவாமித்திரரே! அபாண்டமாகப் பேசாதீர்கள் அரிச்சந்திரன் நல்ல குணம் கொண்டவன், நேர்மையானவன், அவனை இப்படித் தரக்குறைாவகப் பேசுவது உமது தரத்திற்கு ஏற்றதல்ல...

**விசுவாமித்திரர்:** வசிட்ட முனிவரே அரிச்சந்திரனைப் பற்றி உமக்குத் தெரியாது,... என நினைக்கிறேன்..நான் கூறுவது பொய் என்றால், எனக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

**தேவேந்திரன்:** அமைதி அமைதி ஆத்திரத்தில் அறிவிழக்காதீர்கள் நிதானமாகப் பேசுங்கள்..

**நாரதர்:** தேவேந்திரா இது என்ன புதுக்குளப்பம்...விளையாட்டு வினையாகிவிட்டதே.

**வசிட்டர்:** விசுவாமித்திரரே அரிச்சந்திரன் கெட்டவன், பொய் பேசுவதில் வல்லவன் என நீர் நிரூபித்தால் அன்றுமுதல் நான் தவம் செய்வதை விட்டுவிடுகிறேன்...

**விசுவாமித்திரர்:** அரிச்சந்திரன் சுத்தப்பொய்யன், வாக்கு நாணயம் அற்றவன், பித்தலாட்டக்காறன்.. அவன் நற்குணம் அற்றவன், எல்லாம் நடிப்பு என்பதை என்னால் நிரூபிக்க முடியும்.. முடியாவிட்டால் எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவவலிமையில் பாதியை வசிட்டருக்கு வழங்கத் தயாராக இருக்கிறேன்..

**நாரதர்:** சபாஷ் சரியான போட்டி.. சம்போ மகா தேவாநாராயணா.. விசுவாமித்திரரே அரிச்சந்திரன் பொய் பேசுபவனென்று பூலோகம் சென்று நீங்கள் நிரூபித்துக் காட்டுங்கள்.. பார்க்கலாம்.

**விசுவாமித்திரர்:** அரிச்சந்திரன் பொய்பேசக்கூடியவன், நேர்மை அற்றவன் என்பதை நான் பூலோகம் சென்று நிரூபித்துக் காட்டுகிறேன்.

## காட்சி 02

இடம் : **பூலோகம்**

**விசுவாமித்திரன் சபதம்....**

**விசுவாமித்திரன்:** இந்திரன் சபையிலே அந்த வசிட்டன் சபதமிடுகிறான்.. விசுவாமித்திரனின் மகிமை அறியாத மூடன்....அரிச்சந்திரன் பொய்கூறமாட்டானாம், பொய்யே கூறமாட்டானாம். பொய் கூற வைக்கிறேன். ஒரு பொய் என்ன ஓராயிரம் பொய் சொல்ல வைக்கிறேன். என் திட்டம் வெற்றி பெற்றால் வசிட்டன் என் காலடியில் வீழ்வான்...பூலோகத்தில் என்ன, தேவலோகத்திலும் என் புகழ் ஓங்கி ஒலிக்கும்.. அரசுரிமை, அழகுமிகு மனைவி, அருந்தவப்புதல்வன், ஆட்சி, அதிகாரம், பொன், பொருள் அத்தனையையும் அவனால் வாரி வழங்கமுடியுமா? அடக்குகிறேன் வசிட்டனின் கொட்டத்தை..முதலில் யாகம் செய்வதற்காக அரிச்சந்திரனிடம் உதவி கேட்டுச் செல்வோம்.... என் ஆட்டம் தொடங்கிவிட்டது..(சிரிப்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி 03

அரிச்சந்திரன் அரண்மனை

**பாத்திரங்கள்: அரிச்சந்திரன், விசுவாமித்திரர்**

**அரிச்சந்திரன்:** வாருங்கள் ராஜகுருவே, வாருங்கள் தங்களின் வருகையால் என் அரண்மனை பெருமை அடைகிறது.

**விசுவாசமித்திரர்:** அரிச்சந்திரா மாபெரும் யாகமொன்று செய்வதற்காக உனது கோசல நாட்டிற்கு வந்திருக்கிறேன்.

**அரிச்சந்திரன்:** நல்லது ராஜகுருவே! அது எம் மண்செய்த பாக்கியம், அயோத்தி வாழ் மக்களுக்கு கிடைத்த யோகம்.

**விசுவாமித்திரர்:** அதற்கு உன் உதவிதேவை அரிச்சந்திரா..

**அரிச்சந்திரன்:** என்ன உதவி தாராளமாகக் கேளுங்கள் ராஜகுருவே...

**விசுவாமித்திரர்:** அரிச்சந்திரா நான் செய்யப்போகும் யாகத்திற்கு ஏராளமான பொன், பொருள் வேண்டியுள்ளது. அதை உன்னால் தரமுடியுமா?

**அரிச்சந்திரன்:** சுவாமி உங்களுக்கு எவ்வளவு தேவையோ அவ்வளவு பொருட்களையும் நான் தருகின்றேன்...

**விசுவாமித்திரன்:** அரிச்சந்திரா உன்னால் எவ்வளவு பொருள் வேண்டுமானாலும் தரமுடியுமா? அவசரப்பட வேண்டாம், நிதானமாக சிந்தித்துச் சொல்...

**அரிச்சந்திரன்:** சுவாமி நீங்கள் என்மீது சந்தேகப்பட வேண்டாம், நான் வாக்குத் தவறாதவன், உங்கள் யாகத்திற்கு வேண்டிய அனைத்துப் பொருட்களையும் என்னால் தரமுடியும்...

**விசுவாமித்திரன்:** அரிச்சந்திரா சொல்கிறேன் கேள்.. யானையின் மேல் ஒரு பலமான மனிதன் அமர்ந்து கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லை விட்டெறிந்தால் அது எந்த அளவு உயரத்துக்கு போகுமோ...அந்த அளவுக்கு பொருள் வேண்டும்....

**அரிச்சந்திரன்:** முனிவர் பெருமானே.. நீங்கள் கூறியபடியே பொருட்களைத் தருகிறேன்...

**விசுவாமித்திரன்:** நல்லது அரிச்சந்திரா எனக்குத் தேவைப்படும் பொழுது, நான் பெற்றுக் கொள்கிறேன்.... அப்பொழுது நான் கேட்ட முறையில் பொருட்களைக் கொடுத்தால் போதும்..எனது சிஷ்யன் சுக்கிரன் உன்னிடம் வருவான் அவனிடமே கொடுத்துவிடு..

## காட்சி 04

**பாத்திரங்கள் : விசுவாமித்திரர், சுக்கிரன்**

**(விசுவாமித்திரர் சிந்தனையுடன் அங்குமிங்கும் நடந்து கொண்டு)**

**விசுவாமித்திரர்:** சுக்கிரா...சுக்கிரா

**சுக்கிரன்:** முனிபுங்கவா என்னை எதற்காக அழைத்தீர்கள்..

**விசுவாமித்திரர்:** சுக்கிரா இந்திரன் சபையிலே வசிட்டன் என்னை அவமதித்து விட்டான், அயோத்தி மன்னன் அரிச்சந்திரன் பொய் கூறமாட்டானாம், அவன் வாரி வளங்கும் வள்ளலாம், ம்... அரிச்சந்திரனை பொய் சொல்ல வைக்கிறேன் என்று சபதமிட்டு வந்துள்ளேன். அதன்படி அரிச்சந்திரனிடம் உதவி கேட்டுள் ளேன்..அதற்கு நீ என்னுடன் ஒத்துழைக்க வேண்டும்.

**சுக்கிரன்:** முனிபுங்கவா அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்.

**விசுவாமித்திரர்:** நான் சொல்வதைச் செய்ய வேண்டும்

**சுக்கிரன்:** அயோத்தி மன்னன் அரிச்சந்திரனை சத்திய வந்தனென்று உலகமே போற்றுகிறதே...அதையும் மீறி எம்மால் என்ன செய்ய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விசுவாமித்திரர்:** என்ன செய்ய முடியுமா? என்னால் முடியும்...என் தவத்தின் வலிமையால் அவனை பொய் சொல்ல வைப்பேன்..ஆசை யாரை விட்டது. பாசத்தை வென்றவர் உலகில் யாருமில்லை. அவன் விதியைக் கொண்டே அவனைப் பொய்சொல்ல வைக்கிறேன். அதற்கு நான் சொல்வதை நீ செய்ய வேண்டும்.

**சுக்கிரன்:** சொல்லுங்கள் செய்கிறேன்

**விசுவாமித்திரர்:** நான் செய்யும் யாகத்திற்கு அவனிடமுள்ள பொன், பொருள் அனைத்தையும் வாங்கப் போகிறேன்.

**சுக்கிரன்:** அவன் தந்து விட்டால்

**விசுவாமித்திரர்:** அடுத்து அரிச்சந்திரனது ஆட்சி அதிகாரங்களைக் கேட்பேன்..

**சுக்கிரன்:** அதையும் அவன் தந்துவிட்டால்

**விசுவாமித்திரன்:** எல்லாவற்றிற்கும் மேலாக அவனுக்கு பல கொடுமைகளைப் புரிவேன். தாங்கொணாத் துன்பங்கள் கொடுப்பேன்.. அவன் மனம் மாறுவான், வாக்குத் தவறுவான், நான் வெற்றி பெறுவேன், என் சபதம் நிறைவேறும்... அதன்பிறகு ஏழேழுலோகத் திலும் நான் தான் பெரியவன்.. நான் தான் பெரியவன், வசிட்டன் வெட்கித்தலை குனிவான்..(சிரிப்பு)

**சுக்கிரன்:** மாமுனிவரே அடுத்து என்ன செய்யப் போகின்றீர்கள்

**விசுவாமித்தரர்:** நடனப் பெண்ணை அனுப்பப் போகிறேன். அவள் நடனமாடுவாள், அரிச்சந்திரன் வெகுமதி கொடுக்க முன்வருவான், மறுத்து திருமணம் செய்ய வேண்டு மென்று அவள் வற்புறுத்துவாள், அரிச்சந்திரன் திகைப்பான்.. அந்த நேரம் பார்த்து நான் உள்ளே புகுவேன்..(சிரிப்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி 05

**பாத்திரங்கள் (அரிச்சந்திரன் அரியணையில் அமர்ந்திருத்தல், நடனமாது வருதல்)**

**நடனமாது:** வணக்கம்.. அரிச்சந்திர மகாராஜா..

**அரிச்சந்திரன்:** வா நடனமாதே, வந்தகாரியம் யாதோ....

**நடனமாது:** தங்கள் முன்னால் நடனமாடி மகிழ்விக்க வந்துள்ளேன்..

**அரிச்சந்திரன்:** சரி ஆடு பார்க்கலாம்..

**(நடனமாது நடனமாடுதல்)**

**பாடல் :** கலைத்தாயின் அருளோடு கலை பரப்பி புகள் கொண்ட
மா மன்னா நின் நாடு வாழ்க..
மலைமகள் துணையோடு மலைபோன்று அயோத்தி
காக்கும் மாவீரா நீ.. வாழ்க...வாழ்க..
திருமகள் கடாச்சத்தால் அயோத்தி மண் ஜொலிக்க வைத்த
வள்ளலே நின் பாதம் போற்றி..போற்றி..
உன் புகழ் பூத்த மரபினரின் கால்பட்ட அயோத்தியிலே
என் காலும் பட்டிங்கு ஆடுதையா ரதியைப்
போலே...
ஆடுதையா ரதியைப் போலே....

**அரிச்சந்திரன்:** ஆகா அற்புதமான நடனம்..உங்களுக்கு பரிசு அளிக்க விரும்புகிறேன். என்ன வேண்டும் கேளுங்கள்.

**நடனமாது:** கேட்பதைக் கொடுக்கும் வள்ளலே நான் கேட்பதை நீங்கள் தருவீர்களா?

**அரிச்சந்தரன்:** ஆம் தருகிறேன் கேளுங்கள்....

**நடனமாது:** என்னை நீங்கள் திருமணம் செய்துகொள்ள வேண்டும். அதுதான் எனக்கு தாங்கள் அளிக்கும் மிகப் பெரிய பரிசு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரிச்சந்திரன்:(அதிர்ச்சியுடன்)** காவலனே இவளை வெளியே அனுப்பு...

**(இதே வேளையில் விசுவாமித்திரர் கோபமாக உள்ளே வருதல்)**

**விசுவாமித்திரர்:-** அரிச்சந்திரா நீ கேட்பதைக் கொடுப்பவனென்றால், நான் அனுப்பிய பெண்ணை ஏன் மணம் செய்து கொள்ள மறுத்தாய்? அவளில் என்ன குறை கண்டாய்...

**அரிச்சந்திரன்:** மாமுனிவரே, எனக்கு ஏற்கனவே திருமணம் ஆகிவிட்டது.. என் மனைவியைத்தவிர வேறு எந்தப் பெண்ணையும் நான் நினைப்பதில்லை.. உங்கள் பெண்ணைநான் திருமணம் செய்து கொள்வது முறையாகாது.. தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள்.

**விசுவாமித்திரர்:** அரிச்சந்திரா மன்னர்கள் மனது வைத்தால் மணக்க நினைக்கும் பெண்களை மணக்கலாம்..

**அரிச்சந்திரன்:** மன்னிக்க வேண்டும் மாமுனிவரே.. நியாயமற்ற எந்தக்காரியத்தையும் நான் செய்ய உடன்பட மாட்டேன்...

**விசுவாமித்திரர்:** அரிச்சந்திரா நன்றாக யோசித்துத்தான் பேசுகிறாயா? என்னுடைய கடுங்கோபத்திற்கு நீ ஆளாகப்போகிறாய், அப்போது உன் கதி என்னவாகும் தெரியுமா?

**அரிச்சந்திரன்:** மன்னிக்க வேண்டும் முனிவரே! என் நாட்டையும் செல்வத்தையும் கூட கொடுக்கத் தயாராக இருப்பேனே தவிர, தங்கள் பெண்ணை நான் மணம் செய்ய மாட்டேன்.. தயவு செய்து என்னை வற்புறுத்தாதீர்கள்..

**விசுவாமித்திரர்:** அரிச்சந்திரா! நான் கூறியதை நீ ஏற்க மறுப்பாயே ஆனால், உன் நாட்டையும் செல்வத்தையும் எனக்குக் கொடுத்துவிடு..

**அரிச்சந்திரன்:** முனிவரே... நான்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விசுவாமித்திரர்:** அரிச்சந்திரா என்ன யோசிக்கிறாய்? நாட்டை எழுதித் தருவதாக சொல்லிவிட்டோமே, என்ன செய்வது என்று யோசிக்கிறாயா?

**அரிச்சந்திரன்:** இல்லை முனிவரே! தங்களிடம் கூறியபடி எனது நாட்டையும் செல்வத்தையும் தங்களுக்கு தந்து விடுகிறேன்.. எனது வாக்கில் எந்தவித மாற்றமும் இல்லை..

**விசுவாமித்திரர்:** நல்லது அரிச்சந்திரா! உன்கூற்றுப்படி உன் நாட்டையும் செல்வத்தையும் எனக்கு எழுதிக் கொடுத்துவிடு..

**அரிச்சந்திரன்:** அப்படியே தருகிறேன்..

**விசுவாமித்திரர்:** அரிச்சந்திரா! நான் கூறியபடி என்னுடைய யாகத்திற்கு நான் கேட்கும் பொருட்களைத் தருவதாக கூறினாயே.. அந்தப் பொருட்கள் இப்பொழுது எனக்கு வேண்டும்..

**அரிச்சந்திரன்:** முனிவர் பெருமானே! தாங்கள் கேட்கும் பொருட்கள் அரண்மனையில் உள்ளது, அது உங்களுக்கு சொந்த மாகி விட்டது, இப்பொழுது அதை நான் தர இயலாது அல்லவா?...

**விசுவாமித்திரர்:** அரிச்சந்திரா எனக்கு உன் நாட்டையும் அரண் மனையையும் வழங்கியபோது யாகத்திற்குரிய பொருட்களையும் சேர்த்துவிடுவதாக சொல்ல வில்லையே, அரிச்சந்திரா நீ என்னிடம் வாக்கு கொடுத் தபடி நான் செய்யப்போகும் யாகத்திற்கு உரிய பொருட் களை வழங்கவேண்டும். உன்னால் தர இயலாது விட்டால் உன்னை சத்தியம் தவறியவனென்றும், பொய்காரனென்றும் ஊரெல்லாம் பேசவைத்து விடுவேன்..

**அரிச்சந்திரன்:** முனிவரே தங்களிடம் கூறியபடி யாகத்திற்கு வேண்டிய அனைத்துப்பொருட் களையும் தருகிறேன், அதற்கு சில நாட்கள் அவகாசம் கொடுங்கள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விசுவாமித்திரர்:** சுக்கிரா இங்கே வா..**(சுக்கிரன் வருதல்)** அரச்சந்திரா உன்னை நான் நம்புவதாக இல்லை, உன் பின்னால் என்சீடன் சுக்கிரன் தொடர்ந்து வருவான். நான் கேட்டிருந்த பொருட்களை அவனிடம் கொடுத்து விடு..இல்லையென்றால் உன்னைப் பற்றி கேவலமாகப் பேசுவேன்..உன் நேர்மை அற்ற முறையை மக்களுக்கு எடுத்துரைப்பேன். நீ இதுவரை கட்டிக்காத்த பேரும் புகளும் என்னவாகும் என்பதை நீயே தீர்மானம் செய்துகொள் **(விசுவாமித்திரர் வெளியேறல்)**

**(சத்திய கீர்த்தி அரிச்சந்திரனைச் சந்திக்க வருதல்)**

**சத்தியகீர்த்தி:** மகாராஜா! இதுவெல்லாம் என்ன சோதனை

**அரிச்சந்திரன்:** சத்திய கீர்த்தி இந்த நாடு இனி விசுவாமித்திரருக் குத்தான் சொந்தம், எனது மனைவியையும், மகனையும் அழைத்துக்கொண்டு நாட்டை விட்டுப் போகப் போகிறேன்..

**சத்தியகீர்த்தி:** மகாராஜா தங்கள் முடிவை மாற்றிக்கொள்ளுங்கள்..

**அரிச்சந்திரன்:** சத்தியகீர்த்தி நான் கொடுத்த வாக்கை மீறமாட்டேன், நீ அரண்மனையிலே இரு..

**சத்தியகீர்த்தி:** மகாராஜா! தங்கள் வாக்கை மீறுவதற்காக மன்னிக்க வும்..தாங்கள் இல்லாத அரண்மனை..பதவி, அதிகாரம், எனக்கு வேண்டாம். நானும் உங்களுடன் வருகிறேன்...

## காட்சி 06

**பாத்திரங்கள்: அரிச்சந்திரன், சந்திரமதி, லோகிதாசன், சத்தியகீர்த்தி, சுக்கிரன்**

**அரிச்சந்திரன்:** சந்திரமதி எமக்கு நடக்கும் சோதனைகளைப் பார்த்தாயா..கொடுத்த வாக்கையும், கொடுத்த பொருளையும் திரும்பப் பெறாத எம்வம்சத்திற்கு விசு வாமித்திரரால் ஏற்பட்ட சோதனைகளைப் பார்த்தாயா, நாடு, நகர், அரண்மனை, அரசுரிமை அத்தனையை யும் இழந்துவிட்டேன்..இனி இழப்பதற்கு ஒன்று மில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சந்திரமதி:** நாதா எது வருகினும் வரட்டும் கலங்காதீர்கள்..நான் உங்களுக்கு துணையாக நிற்பேன், சத்தியம் காப் போம்..

**சத்தியகீர்த்தி:** மன்னா கலக்கமடைய வேண்டாம். எந்த மன்னர் மரபிற்கும் ஏற்படாத சோதனை இது..தங்களுக்கு துணையாக நான் நிற்பேன்..

**அரிச்சந்திரன்:** விசுவாமித்திரருக்கு கொடுத்த வாக்குப்படி நாட்டைவிட்டு வெளி யேறுவோம்..மகனே லோகிதாசா உன் தந்தை சத்தியம் காக்கவும், கொடுத்த வாக்கை காப்பாற்றவும் எந்த இன்னல்களை அனுபவிக்கவும் தயாராகிவிட்டேன்..

**லோகிதாசன்:** தந்தையே..கவலையை விடுங்கள்..வாய்மை காக்கும் மரபில் வந்தவன் நான்..எதற்கும் கலங்க மாட்டேன்..

**அரிச்சந்திரன்:** மகனே லோகிதாசா...என் செல்வமே..என் சந்ததி காக்க வந்தவனே..உன்னை மகனாகப் பெற்றதையிட்டு மகிழ்வடைகிறேனடா..சரி புறப்படுவோம்..சுக்கிரா வா.. விசுவாமித்திரரின் யாகத்திற்கு வேண்டிய பொருட்களை வாங்கித்தருகிறேன். (நடந்து செல்லல்)

**சுக்கிரன்:** அரிச்சந்திரா நீயும் உன் குடும்பத்தினரும் படும் துன்பத்தைப் பார்க்கும் போது மிகவும் சங்கடமாக உள்ளது. விஸ்வாமித்திரருக்கு தருவதாகக் கூறிய பொருளை தர இயலாது என்று கூறிவிட்டால், நீயும் உன் குடும்பத்தினரும் இப்படி கஸ்டப்பட வேண்டிய தில்லை..நான் உடனே சென்று முனிவரிடம் சொல்லி விடுகிறேன். உனக்கு நாடும் நகரமும் திரும்பவும் கிடைத்துவிடும்.

**அரிச்சந்திரன்:** எனக்கும் எனது மனைவி மகனுக்கும் என்ன தீங்கு நடந்தாலும் நான் வாக்குத் தவற மாட்டேன்.

**சுக்கிரன்:** அரிச்சந்திரா நீ வாக்குத்தவற மாட்டேன் என்று சொல்கிறாய் சரி..முனிவருக்கு கொடுக்க வேண்டிய பொருளையாவது கொடுத்துவிடு, நான் ஊருக்கு செல்கிறேன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரிச்சந்திரன்:**சுக்கிரா காசிமா நகரில் உள்ள நண்பர்களிடம் விசுவாமித்திரருக்கு சேரவேண்டிய பொருட்களை வாங்கித் தருகிறேன்.

## காட்சி 07

**பாத்திரங்கள்: அரிச்சந்திரன், விசுவாமித்திரர்**

**விசுவாமித்திரர்:**அரிச்சந்திரா! நீயும் உன் குடும்பத்தினரும் அனுப விக்கும் கொடுமைகளை என்னால் கண்டும் காணாமல் இருக்க முடியவில்லை. என் மனத்தை மிகவும் வருத்தமடைய வைக்கிறது. உன் நாட்டை உனக்கு திருப்பி அளிக்கத் தயாராக இருக்கிறேன்.. உன் நாட்டையும் உனது சொத்தையும் எனக்கு தரவில்லை என்று மட்டும் கூறிவிடு! மீண்டும் அயோத் தியை ஆள்வதற்கு எந்தத்தடையும் இல்லை..

**அரிச்சந்திரன்:**மன்னிக்க வேண்டும் முனிவர் பெருமானே என் குடும்பமே அழிந்தாலும் சொன்ன சொல் தவற மாட்டேன்.. உங்களுக்கு கொடுத்த பொருளை கொடுக்கவில்லை யென்று கூறமாட்டேன்..ஆகவே என்னை பொய் கூறுமாறு வற்புறுத்த வேண்டாம்..

**விசுவாமித்திரர்:** அரிச்சந்திரா செல்லும் வழியில் பல துயரங்களை நீ சந்தித்தாக வேண்டும்...காட்டு விலங்குகளை கடந்து செல்ல வேண்டும்..அரசனாக வாழ்ந்த உனக்கு இதெல்லாம் தேவையா? ஒரு பொய் கூறிவிடு.

**அரிச்சந்திரன்:**வேண்டாம் முனிவர் பெருமானே..என்னை பொய் சொல்லத் தூண்டாதீர்கள்! எந்தச் சூழ்நிலையிலும் நான் மனம் தளரமாட்டேன்..என்னை மாற்றிவிடலாம் என்று நினைக்க வேண்டாம்..தயவுசெய்து உங்கள் எண்ணத்தை மாற்றிக் கொள்ளுங்கள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி 08

**பாத்திரங்கள்: விசுவாமித்திரர், சுக்கிரன்**

**விசுவாமித்திரர்:** சுக்கிரா அரிச்சந்திரனுக்கு தொந்தரவு கொடுத்துக் கொண்டே இரு, அப்பொழுதுதான் வேதனை தாங்காது அவன் மனம் மாறும், என் சபதமும் வெற்றி பெறும்.

**சுக்கிரன்:** ராஜகுருவே தாங்கள் எது செய்தாலும் அரிச்சந்திரனை மாற்றமுடியாது..

**விசுவாமித்திரர்:** சுக்கிரா என்னை யாரென்று நினைத்தாய், நெஞ்சத்திலே வஞ்சினம் மூண்டுவிட்டால் அஞ்சாது செயல் முடிக்கும் விசுவாமித்திரனடா நான் விசுவா மித்திரன், எனக்கே பாடம் புகட்டுகிறானா அந்த அரிச்சந்திரன்..அக்கினி தேவா அரிச்சந்திரன், அவன் மனைவி, மகன் ஆகியோரைப் பொசுக்கு..ம்..**(பெரும் தீ அரிச்சந்திரன் போகும் பாதையை சுற்றிவளைக்கிறது). (அரிச்சந்திரன் பதட்டத்தோடு)**

**அரிச்சந்திரன்:** சுக்கிரா! எதனால் இந்தத் தீ...

**சுக்கிரன்:** அரச குலத்தில் அவதரித்த ஓர் உயிரைப் பழிவாங்கிய பின்பு தான் இந்தத்தீ அடங்கும்...

**அரிச்சந்திரன்:** இந்தத் தீக்கு என்னை இரையாக்கிக் கொள்கிறேன். சந்திரதமதி, சத்தியகீர்த்தி, லோகிதாசனை அழைத்துக் கொண்டு அப்பால் சென்றுவிடுங்கள்.

**சத்தியகீர்த்தி:** மன்னா இந்தக் காட்டுத்தீ என்னை அழிக்கட்டும். தாங்கள் இவ்விடத்தைவிட்டு சீக்கிரம் சென்று விடுங்கள். **(தீயில் விழச்செல்ல, அரிச்சந்திரன் தடுத்தல்)**

**அரிச்சந்திரன்:** **(தடுத்து)** அமைச்சரே அரசகுலத்தில் பிறந்தவரது உயிரைத்தான் இந்தக் காட்டுத்தீ பலிவாங்கத் துடிக் கிறது என்று சுக்கிரன் கூறினான் அல்லவா? ஆகவே நான்தான் பலியாகவேண்டும்..எனக்குப்பின் சந்திர மதியையும், லோகிதாசனையும் பாதுகாக்க உம்மைத் தவிர வேறுயார் இருக்கிறார்கள். **(அரிச்சந்திரன் தீயில் விழச்செல்ல சந்திரமதி தடுத்தல்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சந்திரமதி:** தாங்கள் இந்தத் தீக்கு இரையாக வேண்டாம், என்னைப் பலிகொடுக்கிறேன்...**(தீக்கு அருகே செல்லல்)**

**லோகிதாசன்:** தாயே தாங்கள் இந்தத் தீயில் விழவேண்டாம். என்னைப் பலிகொடுத்துக் கொள்வதுதான் முறை.. பெற்றோர்க்கு துன்பம் ஏற்பட்டால் அதைப் போக்குவது மகனின் கடமை, என்னை இந்தக் காட்டுத்தீ.. பலிவாங்கட்டும். **(லோகிதாசன் தீயில் விழச் செல்லல்..)**

**சந்திரமதி:** **(கண்ணீர் ததும்ப)** மகனே நீ தீக்கு இரையாக வேண்டாம்...அக்கினி பகவானே! நாங்கள் வேதங்களை பழித்தது இல்லை, சத்தியம் தவறி ஆட்சி புரிந்ததில்லை, மூத்தோரை பழிக்கவில்லை. மற்றவர் பொருளுக்கு ஆசைப்பட்டதில்லை. கற்புநெறி தவறி நடந்தது இல்லை... இதையெல்லாம் மீறி நாங்கள் நடந்திருந்தால், தவறுகள் புரிந்திருந்தால் காட்டுத்தீ, அக்கினி பகவானே, தீச்செல்வா.. நாங்கள் மனதினால், வாக்கினால், காயத்தினால் காயப்பட்டே எனில் தீச்செல்வா சினத்தினால் எங்களைச் சுடு இந்தத் தீ எங்களை எரித்து சாம்பலாக்கட்டும், என்னைக் கொல்லட்டும்...**(காட்டுத் தீ அணைந்தது)**

## காட்சி 09

**(காசிமாநகரில்)**

**சுக்கிரன்:** அரிச்சந்திரா...நீ நாட்டை விட்டு வந்து பல நாட்களாகி விட்டன! விசுவாசமித்திரருக்கு தரவேண்டிய பொருட்களை நீர் இதுவரை தரவில்லை. நான் உன்னுடன் வந்து எனக்கு கால்வலி வந்துவிட்டது. முனிவர் கூறிய பொருட்களை கொடுத்துவிட்டு இந்த இடத்தை விட்டுச் செல்...

**அரிச்சந்திரன்:** அன்பே நம்மிடம் பொருள் இல்லை என்பதை நன்றாக அறிந்து கொண்டுதான் விசுவாமித்திரர் நம்மிடம் பொருள் கேட்டு சுக்கிரன் மூலம் தூண்டி இருக்கிறார் என்ன செய்வது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சந்திரமதி:** என்னையும் லோகிதாசனையும் யாரிடமாவது விற்றுவிட்டு அந்தப்பொருளைக் கொடுத்து, விசுவா மித்திரருக்கு கொடுத்த வாக்கைக் காப்பாற்றுங்கள்..

**அரிச்சந்திரன்:** இது என்ன கொடுமை, மனைவியையும் மகனையும் விற்றுவிட்டு எப்படி வாழ்வது?

**சந்திரமதி:** நாதா இதில் தாங்கள் வருத்தப்பட வேண்டாம், விதியின் கொடுமையை எண்ணி நாம் துன்பத்தைத் தாங்கிக் கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை..எங்களை விற்றுவிட்டு அதன்மூலம் பெறும் பொருட்களை விசுவாமித்திரரிடம் கொடுத்து விடுங்கள்..இதுதான் இப்போதைக்கு சாத்தியப்படக்கூடிய வழிமுறை...

**அரிச்சந்திரன்:** அன்பர்களே....செல்வச் சீமான்களே! என் மனைவியையும், மகனையும், விதிவசத்தால் விற்கும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறேன். இவர்களை விலை கொடுத்து வாங்கத் தயாராக உள்ளவர்கள் வாங்கிக் கொள்ளலாம்...

**காலகண்ட ஐயர்:** நான் இவர்களை வாங்கிக் கொள்கிறேன். என்ன விலை தரவேண்டும்.

**அரிச்சந்திரன்:** ஐயா ஒரு யானையின் மேலிருந்து கல்லை எறிந்தால் அந்தக்கல் போகும் அளவிற்கு உரிய பொன்தான் இவர்களுக்கு தரும் விலையாகும்.

**காலகண்ட ஐயர்:** சரி தருகிறேன்..

**அரிச்சந்திரன்:** அந்தணரே..பொருளை இவரிடம் கொடுத்து விடுங்கள்..சுக்கிரா வாங்கிக் கொள்..

**சுக்கிரன்:** **(பொருளை பெற்றுக் கொள்ளல்)** விசுவாசமித்திரர் கூறியபடி பொருளை பெற்றுக் கொண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரிச்சந்தரன்:(கண்ணீர் மல்க)** சந்திரமதி லோகிதாசனையும் கூட்டிக்கொண்டு அந்தணருடன் செல்லுங்கள். **(சந்தரமதி பிரிவுத்துயர் தாங்காது அழுதல்)**

**அரிச்சந்திரன்: (சுக்கிரனைப் பார்த்து)** ஐயா இன்னும் ஏன் இங்கேயே நின்று கொண்டிருக்கிறீர்கள்.

**சுக்கிரன்:** விசுவாமித்திரருக்கு தரவேண்டிய பொருட்களைக் கொடுத்துவிட்டீர், இது நாள் வரையில் இரவுபகல் பாராமல் பல நாட்கள் உங்களோடு வந்தேனே அதற்கான கூலியைக் கொடுத்துவிட்டால் நான் உடனே போய்விடுவேன்..

**சத்தியகீர்த்தி:** சுக்கிரா! என்ன கூறுகிறாய்..

**அரிச்சந்திரன்:** அமைச்சரே..இப்போதுதான் நீர் பொறுமை காக்கவேண்டும்...சத்தியகீர்த்தி என்னை விற்றுவிட்டு சுக்கிரனுக்கு தரவேண்டிய கூலியைக் கொடுத்து விடுங்கள்..

**சத்தியகீர்த்தி:** பார்புகழும் உங்களை விற்பதா? இது என்ன கொடுமை, வேண்டாம் அரசே! என்னை விற்று விடுங்கள், அந்தக் கூலியை சுக்கிரனிடம் கொடுத்து விடலாம்..

**அரிச்சந்திரன்:** அமைச்சரே வேண்டாம்...எனக்காக தங்களை விற்பது நீதியாகாது நேர்மை யாகாது என்னை விற்றுவிட்டு, சுக்கிரனிடம் கூலியைக் கொடுத்துவிடுங்கள்.. இனியும் தாமதிக்க வேண்டாம்...

**சத்தியகீர்த்தி: (கதறி அழுதல்)** அரசே.. இது என்ன கொடுமை..

**அரிச்சந்திரன்:** அமைச்சரே தயங்கவேண்டாம்...

**சத்தியகீர்த்தி:** கனவான்களே! சீமான்களே..வாங்குவோர் உண்டா, இவரை வாங்குவார் உண்டா..**(தோட்டி வருதல்)**

**வீரவாகு:** இவரை நான் விலைக்கு வாய்குகிறேன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சத்தியகீர்த்தி:** நீயா இவரை வாங்கப் போகிறாய்?

**அரிச்சந்திரன்:** அமைச்சரே இவரிடமே என்னை விற்றுவிடுங்கள்.

**வீரவாகு:** சரி நான் இவருக்கு பதினான்காயிரம் பொன் தருகிறேன்..

**சத்தியகீர்த்தி:** சரி தாருங்கள்,... சுக்கிரா இந்தா உன் கூலி..(கதறி அழுகிறான்) **(அரிச்சந்திரனை வீரவாகு அழைத்துச் செல்லல்)**

**வீரவாகு:** அரிச்சந்திரா உனக்கு என்ன வேலை என்பதைச் சொல்கிறேன். நன்றாகக் கேட்டுக்கொள்..இந்தச் சுடு காட்டைக் காவல் காக்கும் வேலை உன்னுடையது. இங்குவரும் ஒவ்வொரு பிணத்திற்கும் முழத்துண்டும், தட்சனை கால் பணமும், கால்படி வாய்க்கரிசியும் தருவார்கள். அதில் முழத்துண்டையும், கால் பணத் தையும் பத்திரப்படுத்தி எனக்கு கொடுத்துவிட வேண்டும். வாய்க்கரிசியை நீ எடுத்துக் கொண்டு போய் பொங்கிச் சாப்பிடு...

**அரிச்சந்திரன்:** சரி....அப்படியே செய்கிறேன்..

## காட்சி 10

**(பல நாட்களின் பின்)**

**(அரிச்சந்திரனை தேடி அலைந்த சத்திய கீர்த்தி சுடலையில் சந்திக்கிறான்)**

**சத்தியகீர்த்தி:** அண்ணலே தங்களை இப்படிப்பட்ட இடத்திலையா நான் சந்திக்க வேண்டும்..மனுநீதி கண்ட மன்னா, வையகம் போற்றிடும் வள்ளலே உனக்கு இந்த நிலையா..

**அரிச்சந்திரன்:** சத்திய கீர்த்தி..விதியை வெல்ல யாரால் முடியும்..முன் வினைப் பயனால் என்ன காரியம் நடக்க இருக்குமோ அதெல்லாம் நடந்துதானே ஆகும்..கலங்காதே அன்புள்ளவனே திடமாக இரு..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி திரும்பல் (தேவலோகத்தில் விசுவாமித்திரர்)**

**விசுவாமித்தரர்:** அரிச்சந்திரா இதுதான் சந்தர்ப்பம் உன்னை வாக்கு தவறவைப்பேன்... காலகண்ட ஐயர் வீட்டில் இருக்கும் உன்மகன் லோகிதாசன் தர்ப்பை கொய்யப்போய் அரவம் தீண்டி இறந்துவிட்டான். உன் மனைவி சந்திரமதி நீ காவல்காக்கும் சுடலைக்கே உன் பிள்ளையைத் தகனம் செய்ய கொண்டு வருகின்றாள்.. என்ன நடக்குதென்று நானும் பார்த்து விடுகின்றேன்..

**காட்சி திரும்பல்: (அரவம் தீண்டி இறந்த லோகிதாசனை சந்திரமதி அணைத்துக் கொண்டு)**

**சந்திரமதி:** ஐயோ மகனே லோகிதாசா நீ அரவம் தீண்டி இறந்துவிட்டாயா? நாம் என்ன பாவமடா செய்தோம், எமக்கேன் இத்தனை சோதனைகளும், வேதனைகளும், என் செல்வமே..உன் தந்தை, என் மகன் எங்கே என்று கேட்டால் நான் என்ன பதில் கூறுவேன்..உன்னை இந்தக் கோலத்தில் காண எனக்கு காலம் தந்த பரிசா இது..கடவுளே யாருக்கும் தீங்கு நினைக்காத எமக்கு இது என்ன சோதனை.. **(மகனை சுமந்து கொண்டு சுடலைக்கு செல்கிறாள்..)**

**சந்திரமதி:** **(லோகிதாசனை சுடலையில் கிடத்திவிட்டு கதறி அழுகிறாள்)**
எமக்கு கொள்ளி இடுவாய் என்று எதிர்பார்த்தேன். உனக்கு கொள்ளி இடவைத்து விட்டதடா..எம் விதி.. **(கட்டை அடுக்கி கொள்ளி வைக்கிறாள் இதே நேரத்தில்)**

**அரிச்சந்திரன்:** ஏ பெண்ணே என்ன காரியம் செய்கின்றாய், என் அனுமதி இல்லாமல், இந்த நள்ளிரவில் பிணத்தை எரிக்கின்றாயே..நீ யார்...

**சந்திரமதி:** ஐயா நானொரு அபலை, என் மகன் அரவம் தீண்டி இறந்து விட்டான்..

**அரிச்சந்திரன்:** அதற்கு இப்படித் திருட்டுத் தனமாகப் பிணத்தை எரிக்க வேண்டுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சந்திரமதி:** ஐயா எனக்கு யாருமில்லை..

**அரிச்சந்திரன்:** எனக்குத் தரவேண்டிய கூலியைத் தந்துவிட்டு நீ பிணத்தை எரிக்கலாம்..**(சடலத்தை தள்ளி விடல்)**

**சந்திரமதி:** **(கதறி அழுது கொண்டு)** ஐயா என்னை மன்னித்து விடுங்கள்..உங்களுக்கு கூலி தரவேண்டும் என்று எனக்குத் தெரியாது..

**அரிச்சந்திரன்:** ஏ! பெண்ணே..என்ன பொய்யா சொல்கிறாய்.. என் கூலியைக் கொடுக்காமல் நீ பிணத்தை எரிக்க முடியாது.

**சந்திரமதி:** என்னிடம் எந்தப் பொருளும் இல்லை. நான் ஒரு அந்தணருக்கு அடிமையாக இருக்கிறேன். தயவு செய்து என் மகனை எரிப்பதற்கு அனுமதி கொடுங்கள்... **(தோட்டியின் காலைப் பிடிக்கிறாள்)**

**அரிச்சந்திரன்:** பெண்ணே பிணத்தை எரிப்பதற்கு முழத்துண்டும், கால்பணமும், கால்படி வாய்க்கரிசியும், வாங்க வேண்டும் என்பது என் எசமானரின் உத்தரவு. கால் பணமும் முழத்துண்டும் என் எஜமானருக்குப் போய்ச் சேரவேண்டும்..வாய்க்கரிசி என்னுடைய கூலி யாகும்..எனது கூலியை நீ தரவேண்டாம்...மற்றதை நீ எப்படி யாவது தரத்தான் வேண்டும்...

**சந்திரமதி:** ஐயா என்னிடம் எந்தப் பொருளும் இல்லை..தயவு செய்து என் மகனுக்கு கொள்ளியிட விடுங்கள்.. **(தோட்டியின் காலைப்பிடித்துக் கெஞ்சு கிறாள்)**

**அரிச்சந்திரன்:** **(அவளின் கழுத்தில் தாலி தொங்குவதைக் கண்டு விட்டு ஆத்திரத்துடன்)**

ஏ பெண்ணே பொய்யா சொல்கிறாய். பொன் இல்லை, பொருள் இல்லை, உதவியில்லை, ஆருமற்றவள் என்று பாசாங்கு செய்கிறாயா? கள்ளி, நீலிக் கண்ணீர் வடிக் கிறாயா? நீலி விலைமதிப்பற்ற மாங்கல்யத்தை அணிந்து கொண்டு என்னை ஏமாற்றுகிறாயா மோசக்காறி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சந்திரமதி:** கடவுளே இதென்ன சோதனை..என்னுடன் பிறந்த இந்த மாங்கல்யம், என் கணவரைத்தவிர வேறு யாருக்கும் தெரியாது என்று கடவுள் எனக்கு அளித்த வரம் தவறி விட்டதே, சுடுகாடு காப்போனுக்கு இந்த மாங்கல்யம் தெரிந்து விட்டதே..இதற்கு விசுவாமித்திர முனிவர்தான் காரணமாக இருக்க வேண்டும்.. கடவுளே நான் என்ன பாவம் செய்தேன்.. இன்னும் ஏன் நான் உயிரோடு இருக்க வேண்டும்..நான் இறப்பது தான் நியாயம்..

**அரிச்சந்திரன்:(வந்திருப்பவள் சந்திரமதிதான் இறந்தது தன்மகன் லோகிதாசன் தான் என்பதை புரிந்து கொண்டான்)** ஐயோ சந்திரமதி நான் தான் அரிச்சந்திரன்.என் மகன் லோகிதாசனா அரவம் தீண்டி இறந்தது..ஐயோ என்மகனே இறந்து விட்டாயா? உன்னை எனி எப்போது காண்பேன்..என் மகனை அந்த அந்தணருக்கு விற்றதால் தான் இந்தக் கொடுமை நிகழ்ந்தது.. மனைவி யையும், மகனையும் காப்பாற்ற முடியாத மாபாவியா கிவிட்டேனே...

**(கலங்கினான் - கதறினான்)**

**சந்திரமதி: (அரிச்சந்திரனின் காலில் விழுந்து)** நமது துயரத்துக் கெல்லாம் காரணம் நாம் முற்பிறவியில் செய்த பாவம்தான். கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டும் என்று குறிக்கோளுடன் இருந்தபடியால் இத்தனை துன்பங்களும் நேர்ந்திருக்கிறது.. பரவா யில்லை நீங்கள் வருந்த வேண்டாம், சத்தியம் தவற வேண்டாம்... கலங்காதீர்கள் நாதா..

**அரிச்சந்திரன்:**சந்திரமதி வீரவாகுவின் அடிமையாகிய நான் முழத்துண்டும் கால்பணமும் பெறாமல் பிணத்தை எரிப்பது முறையாகாது, அந்தணரிடம் சென்று அதை வாங்கி வா..

**சந்திரமதி:** நாதா காலகண்ட ஐயரிடம் சென்று அதை வாங்கி வருகிறேன்..(**புறப்பட்ட சந்திரமதி வழியில்)**

**சந்திரமதி:**ஐயோ என்மகனின் உடல் இங்கு எப்படி வந்தது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதெல்லாம் விசுவாமித்திரரின் மாஜா ஜாலம் தான்.. **(அசரீரிக்குரல் ஒலிக்கிறது)**

**விசுவாமித்திரர்:** கொள்ளையர்களால் கொல்லப்பட்ட காசிராஜனின் மகனின் கொலையை சந்திரமதியின் மேல் போட்டு விட்டேன். சந்திரமதி தண்டிக்கப்படுவாள், அதற்கு அரிச்சந்திரன் என்ன செய்கிறான் என்று பார்ப்போம்...

**காவலன்:** எம் இளவரசனைக் கொன்றுவிட்டாய் பாதகி...**(இழுத்துச் செல்லல்)**

**காசிராஜன்:** காவலனே.. இந்தப் பெண் என்ன குற்றம் செய்தாள்.

**காவலன்:** அரசே..இந்தப் பெண் தங்கள் மகனை கடத்திக் கொண்டு போய் கொலை செய்திருக்கிறாள். இவளை கையும்களவுமாகப் பிடித்து வந்திருக்கிறேன்..

**காசிராஜன்:** என்ன என்மகன் கொல்லப்பட்டு விட்டானா? என்ன நடந்தது, காவலனே சொல்...

**காவலன்:** ஆம் அரசே பொன் பொருளுக்காக இந்தப் பெண்ணே கடத்திச் சென்று எம் இளவலைக் கொன்றுவிட்டாள்..

**காசிராஜன்:** பெண்ணே..இவர்கள் சொல்வது உண்மையா என்மகனை நீயா கொலை செய்தாய்..

**சந்திரமதி:** அரசே..இவர்கள் கூறுவது உண்மைதான் உங்கள் மகனை கொலை செய்தது நான் தான்...

**காசிராஜன்:** பெண்ணே..நான் நீதி தவறாதவன், உண்மையைச் சொல், நீயா என் மகனைக் கொன்றாய்

**சந்திரமதி:** உண்மைதான் அரசே நான்தான் கொன்றேன்..

**காசிராஜன்:** காவலனே..வீரவாகுவிடம் சென்று..இவளுக்கு மரணதண்டனை வழங்கச் சொல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி II

**பாத்திரங்கள் : வீரவாகு, அரிச்சந்திரன், விசுவாமித்திரர், சந்திரமதி**

**வீரவாகு:** அரிச்சந்திரா! இந்தப் பெண் காசி அரசனின் மகனை கடத்தி பொன் பொருளுக்காக கொலை செய்திருக்கிறாள். இவளுக்கு மன்னர் மரணதண்டனை விதித்திருக்கிறார், நீ இவளது தலையை வெட்டிவிடு..

**அரிச்சந்திரன்:** இது என்ன கொடுமை கடவுளின் திருவிளையாடலில் இதுவும் ஒரு காட்சியா...

**சந்திரமதி:** நாதா சத்தியம் தவறாமல் ஆட்சிபுரிந்த வம்சத்தில் வந்த நீங்கள் கலங்கக்கூடாது. உங்கள் கடமையை நீங்கள் செய்யுங்கள்..தயங்காதீர்கள்..

**(விசுவாமித்திரர் வருதல்)**

**விசுவாமித்திரர்:** அரிச்சந்திரா உன்னிடம் நான் பெற்ற நாட்டையும், நகரத்தையும் எனக்கு கொடுக்கவில்லை என்று மட்டும் சொல்லிவிடு..இப்பொழுதே உன் நாட்டிற்குச் சென்று மனைவி மக்களுடன் மகிழ்ச்சியான வாழ்க்கையை நடத்தலாம். உன் அரசாட்சியைத் தொடரலாம்..

**அரிச்சந்திரன்:** உயிர் பிரிந்தாலும் சத்தியம் தவறுவதில்லை. முனிவர் பெருமானே என்முடிவில் எந்த மாற்றமும் இல்லை, என் உயிர் பிரிய நேரிட்டாலும், சத்தியம் தவற மாட்டேன். இன்னும் எத்தனை சோதனைகள் நேரிட்டாலும் கலங்க மாட்டேன்.. நரகத்திற்கு தள்ளப்படுவேன் என்றாலும் சத்தியத்தை எக்காரணம் கொண்டும் தவறவிட மாட்டேன்...

**சந்திரமதி:** **(அரிச்சந்திரனது பாதங்களைத் தொட்டு வணங்கினாள்)** தாங்கள் கடமையில் இருந்து தவறாமல் தங்களுக்கு இட்ட கட்டளையை நிறைவேற்றுங்கள்..

**அரிச்சந்திரன்:(வாளை எடுத்தான்)** இறைவா தர்ம சாஸ்த்திரத்தில் சிறந்தது சத்தியம் என்பது உண்மையானால்...என் மனைவி கற்பில் சிறந்தவள் என்பது உண்மையானால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் வம்சம் சத்தியம் தவறாதது என்பது உண்மை யானால், இந்தவாள் தன் பணியைச் செய்யட்டும்.. **(வாளை ஓங்கினான்)**

**விசுவாமித்திரர்:** அரிச்சந்திரா நில்.. உன் மனைவி சந்திரமதியின் தலையை வெட்டப் போகிறாய் என்பதை மறந்து விடாதே..

**அரிச்சந்திரன்:** சத்தியத்திற்காகவும், கொடுத்த வாக்கிற்காகவும், ஏற்ற பணிக்காகவும் எடுத்த காரியத்தை கைவிட மாட்டேன்... **(அரிச்சந்திரன் வீசியவாள். சந்தரமதியின் கழுத்தில் மாலையாய் விழுந்தது)**

**விசுவாமித்திரர்:** அரிச்சந்திரா எனக்கும் வசிட்டருக்கும் நடந்த விவாதத்தில் உன்னை சோதிப்பதற்காக, நானும் சிவ பொருமானும் சேர்ந்து செய்த நாடகம்தான் இது.. லோகிதாசனும், காசிராஜன் மகனும் உயிர் பெறுவார் கள்..நீ இத்தனை நாளும் காத்தது மயானம் அல்ல, யாகசாலை!

**உண்மையில் நீ சத்தியவந்தன் தான்..**
**வாய்மை காத்த அரிச்சந்திரன் தான்..**

**முற்றும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்டைத் தமிழன் பண்பாட்டில் முதல் பங்கு வகிப்பது ஆயகலைகளே. இது பாமரமக்களின் சமயச் சடங்கு மற்றும் வைபவங்களின் போது பொழுதுபோக்கு அம்சமாகவும் மகிழ்ச் சிக்காகவும் உருவாக்கப்பட்டதுதான்.. ஆடலும் பாடலும், காலத்திற்கு காலம் வளர்ச்சியடைந்துவரும் உலகில், ஆடல், பாடல், கூத்து கும்மாளம் என்று உருவாகி கலை வடிவம் பெற ஆரம்பித்து வரலாறு படைத்தது. 17ஆம், 18ஆம் நூற்றாண் டுகளில் ஈழத்திரு நாட்டில் கூத்தும், இசையும் இசை நாடகமும் கோலோச்சியிருந்தது.

ISBN 978-955-41133-0-5

9 789554 113305

ஆகாயம் பதிப்பகம்.இமையாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org